எத்தனை கோடி இன்பம்!

(சுற்றுலா)

இரா. இளங்குமரனார்

இரா. இளங்குமரனார், புதுவை வேலா-கலா; முத்து - நீலா

சரவணன்-அருள்மொழி, சாரல், அருவி

எத்தனை கோடி இன்பம்!

(சுற்றுலா)

இரா. இளங்குமரனார்

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101
தொலைப் பேசி : 0431-2685328

நூற்குறிப்பு

நூற்பெயர்	**எத்தனை கோடி இன்பம்!**
ஆசிரியர்	இரா. இளங்குமரனார்
மொழி	தமிழ்
பொருள்	சுற்றுலா
முதற் பதிப்பு	2013 சூன்
பக்கம்	iv+72 = 76
எழுத்து	13 புள்ளி
தாள்	13.7 வெள்ளைத்தாள்
அளவு	1/8
படிகள்	1000
விலை	உருபா. 40/-
உரிமை	ஆசிரியர்க்கு
வெளியீடு	திருவள்ளுவர் தவச்சாலை
நூலாக்கம்	"தி பிரிண்டிங்கு அவுசு" திருச்சிராப்பள்ளி - 23

நூல் கிடைக்குமிடம்:

- **திருவள்ளுவர் தவச்சாலை**
  அல்லூர் 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
  தொலைப்பேசி எண் : 0431 - 2685328

செலவு நூல் வரவு

எத்தனை கோடி இன்பம் என்னும் இச்சுவடி, சுற்றுலா நூல்

அசாம் செலவு வழியாக மேகாலயம் நாகாலாந்து ஆகிய மாநிலங்களையும் பீகாரைச் சார்ந்த புத்தகயா, நாலந்தா ஆகியவற்றையும் கண்டு மகிழ வாய்த்த வாய்ப்பு ஆயிற்று. அவ்வேற்பாடுகளில் தலைநின்று அழைத்தவர் என் பேரன்புக்குரிய படைத்துறை மீப்பதவியர் திருமிகு **சரவணனார் அருள்மொழி**யார். முழுதுறு ஏற்பாடும் செய்தவர் பழமைக் கெழுதகையர் **புதுவை வேலா – கலா** அவர்கள். உடனாகியவர் கல்பாக்கம் இயற்கைப்பற்றுமையும் சித்த மருத்துவமும் கெழுமிய திருமிகு. **முத்து – நீலா** அவர்கள். இச்சுற்றுலா ஐவரும், ஒருமுகப் பட்ட சுற்றுலா. சரவணனாரொடு சேர்ந்தபின் **ஆறுமுகமும் ஒரு முகமானோம்!**

கௌகத்தியில் இருந்து கொண்டு சுற்றிய சுற்றில் சரவணனார் இல்லத்துணவு! செல்லும் வழிகளில் அவர்தம் முன்னேற்பாட்டில் வாய்த்த உணவு, தங்கல் இடங்கள்! மேகாலயம், நாகாலாந்து பூட்டான், வங்கதேச எல்லை காண அவர் உடன் இருந்ததால் செல்லும் இடமெல்லாம் பெருவாய்ப்பு. பின்னரும் அவரால் உடனாய அன்பர் **வெற்றியார்** துணை என்பவையும் போக்குவரவு ஏற்பாடுகளும் செவ்விதில் இலங்கின.

புதுவையரும் கல்பாக்கத்தரும் நல்ல முன்னேற்பாடுகள் கொண்டமை, வழிச் செலவில் சப்பாத்தி கிழங்கு என்பவைக்குப் பெரிதும் இடமில்லாமல் பேரூண், சிற்றூண்கள், குடிநீர் என்பவை அமைந்தன.

இருதிறத்தரும் படக்கருவிகளுடன் வந்தமையால் எங்கும் தேடாமல் படம் எடுக்க வாய்ப்பாயிற்று. குறுவட்டும், செல்லும் இடங்களில் எல்லாம் வெளியிட்ட வெளியீடுகளும் வாய்த்தன.

யாராலும் மாற்ற முடியா வெப்பை, வெப்பக் காற்றைத் தாங்கித் தானே ஆக வேண்டும்! அந்த வெப்பும் வேண்டுவதே என்பது தொல்லாசான் தொல்காப்பியன் ஆணை!

'வெம்மை வேண்டல்' என்பது அது. **வேறு வெம்மை இல்லாத் தண்ணிய இனிய செலவு!** சில இடங்களில் கண்ட காட்சிகளின்

வெளிப்பாடு **எழுத்தில் வெப்பமாகத் தோன்றும்!** அதுவும் "**உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே**" என்னும் தொல்லாசான் ஆணையே!

அன்று அன்றே கண்ட காட்சிகளை எழுத்தாக்கிவிட்டேன். மேற் சான்றுகளும் கைவயத்தன வாதலால், மீள்பார்வைக்கு உதவின.

இவண் திரும்பி வந்த மறுநாள் முற்பகல் ஒரு திருமண நிகழ்வு (14.4.2013) பிற்பகல் வைரி செட்டிப் பாளையத்தில் திருக்குறள் வாழ்வர் திரு ஆ.வே. இராமசாமி அவர்களின் 86 ஆம் அகவைத் தொடக்க விழா! திருக்குறள் பேரவை வெள்ளி விழா!

அவ்விழாவில் பங்கு கொண்டாருள் ஒருவர் திருக்குறள் முற்றுற வரப்படுத்தியவர், குறள்வழி வாழ்வர், 'வாணிகம் செய்வார்க்கு வாணிகம்' என்னும் குறளைப் போற்றும் செம்மல், தவச்சாலை அறக்கட்டளை, நூல் வெளியீட்டுப் புரவலர் **தென்னிலை இராம. கோவிந்தனார்,** என் செலவுச் செய்தியை அறிந்து, அச் செலவு பற்றிய நூலின் வெளியீட்டுப் பொறுப்பில் ஒரு பகுதியை ஏற்பதாகக் கூறி மகிழ்வித்தார். முன்னரும் 'திருக்குறளின் நோக்கு' என்னும் நூற் கொடையர் அவர். தென்னிலையில் நூல் வெளியீடு செய்யவும் இசைந்தார்.

வழக்கம் போல் தவச்சாலை வெளியீடுகளை அச்சிடும் திருச்சிராப்பள்ளி 'அச்சுக் குழும்பு' அச்சிட்டது. அச்சின் மெய்ப்புப் பார்த்தலில் ஆழங்கால் பட்ட பேரன்பர் பயன் கருதாத் திருத்தொண்டர் முனைவர் பி. தமிழகனார் மெய்ப்புப் பார்த்து உதவினார். என்னை அழைத்துச் சென்ற புதுவை திருமிகு வேலா கலைநிதியர் சுவடியை மீள்பார்வை பார்த்து உதவினர். ஆக, அனைவர்க்கும் என் செய்வேன்? "செய்ந்நன்றியறிதல்" உடையன் ஆவேன்.

இன்ப அன்புடன்,

இரா. இளங்குமரன்

18.04.2013

1. எத்தனை கோடி இன்பம்

உலகியல் காட்சியில் - வாழ்வில் - எத்தனை கோடி இன்பம் வைக்கப்பட்டுள்ளது என்பாரும் உளர்.

“எத்தனை கோடி இன்பம் வைத்தாய் - எங்கள்

இறைவா இறைவா இறைவா”

என்றார் பாரதியார்.

உலகியலில் - வாழ்வில் - எத்தனை கோடி துன்பம் வைக்கப்பட்டுள்ளது என்று நாளும் பொழுதும் துடிப்பாரும் மிகப்பலராய் உளர்.

வாழ்க்கையைச் சோலை என்பாரும் உளர்!
வாழ்க்கையைப் பாலை என்பாரும் உளர்!
வாழ்க்கை தனிச் சோலையும் இல்லை; தனிப்
பாலையும் இல்லை! இரண்டும் கலந்தது என்பாரும்,
பாலைவனத்தின் இடையே எங்கோ உள்ள ஒரு சிறு சோலை போல்வது தான் என்பாரும் உளர்.

இவ்வுடலே மெய். “முதல் அழியாப் பேறு நல்கித் தான் அழிவுறுவது” என்பாரும் உளர்.

இவ்வுடல் பொய் - துயரில் உழலவே அமைந்தது; “காயமே பொய்யடா - காற்றடைத்த பையடா; மட்பாண்டம் தான் இது; பொட்டென்று போவது தான்” என்பாரும் உளர்!

காயம் - நிலைபேறு; மெய் - அழியாத் தன்மையது! ஆகவே காயம் என்றும் மெய்யென்றும் பெயர் வைத்தவர் அறியாதவரா? மூடரா? எனின், அது மங்கல வழக்கு எனத் தப்பித்துக் கொள்ள இலக்கண வழக்குக் காட்டுவார் உளர்!

வளமெல்லாம் வைத்திருப்பது வையம், வையகம், வைப்புழி எனப்பட்டது என்பது தேர்ந்து தெளிந்த முடிபு!

வைதற்கு - வசைக்கு - இடமாக இருத்தலின் வையகம் எனப்பட்டது என்பது வாழ்வின் உவர்ப்பு, வெளிப்பாடு! நேற்றிருந்தான் இன்று இல்லை! அவன் கூற்றுக்கும் அஞ்சா வீறு காட்டி அமர நிலை எய்தினான்

என்பது தொல்காப்பியர் வழியே திருவள்ளுவர் தெளிந்த பொருள். அதனை மங்கல வழக்கு எனத் தள்ளுவது நிலையாமை பற்றியோர் கொண்ட நெறி.

"ஒடுங்கி நின்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை"

என்பது நிலைபெறு மலைநிலை!

"நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறச்
சென்றான்"

என்பது நிலையிலா அலைநிலை!

நிலவு - முழுநிலவு - அழகிலும் அழகு தானே!
நிலவு - முழுநிலவு - கண்டு. அழுகிறாரே இருவர்! பாரி மக்கள்!
அகப்பொருளில் தலைவன் பிரியத் தலைவியைச் சுடுகிறதாமே நிலவு!
தண்ணிலா - தழல் நிலவாவது ஏன்?

இன்பம் - மகிழ்வு - கலை - காட்சி - கொட்டிக் கிடந்ததால் அனைவருக்கும் இன்பம் பொதுவாகிவிடுவது இல்லை!

அனைவருக்கும் துன்பப் பொருளாகி விடுவதும் இல்லை!

எடுத்துக் கொள்ளும் - ஏற்றுக் கொள்ளும் பக்குவநிலை இல்லா உள்ளம் இருந்தால், எல்லாம் துயர்! எல்லாம் அருவறுப்பு - எல்லாம் வெட்டித் தனம்! எல்லாம் குப்பை கூளம்!

குறிஞ்சிக் கபிலன் - முல்லைப்பூதன் - மருதம் ஓரம் போகி, மருதன் இளநாகன் - நெய்தல் நல்லந்துவன் - பாலை பெருங் கடுங்கோ என்பவர்களுக்கு எங்கிருந்து ஐந்து நிலங்களும் இன்பம் சுரந்தன?

பாவேந்தர்க்கு எங்கிருந்து சுரந்தது அழகின் சுரப்பு? அழகு சுரக்காத இடம் பாரதிக்கும் இல்லை, பாரதிதாசனுக்கும் இல்லையே ஏன்?

ஓடும் செம்பொனும் ஒப்ப நோக்கும் உளம் உண்டா?
பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் இல்லார் உளரா?
மணப்பறையும் பிணப்பறையும் உலகியலே எனும் மெய்யரைக்
காண முடியுமா?
இவை, 'வேண்டுதல் வேண்டாமை இலான்' ஆனவர் இருந்தமைக்குச் சான்றுகள் அல்லவா?

எந்த இன்பம் துன்பம் தரவில்லை?
எந்தத் துன்பம் இன்பம் தரவில்லை?

ஒற்றைப் பறவையின் இரட்டைச் சிறகுகள் போல இன்பமும் துன்பமும் இணைந்தே இல்லாத ஏதாவது ஒன்றைச் சுட்ட முடியுமா?

துன்பிலேயே இன்பம், இன்பிலேயே துன்பும் இணையாத எதுவும் இல்லை!

மழையாலே நீராலே கேடும் நன்மையும் இல்லையா?
தீயாலே – கேடும் நன்மையும் இல்லையா?
காற்றாலே – கேடும் நன்மையும் இல்லையா?
நிலத்தாலே – கேடும் நன்மையும் இல்லாமலா போய்விட்டன?
அண்டவெளியும் கேடும் நன்மையும் ஆக்கத் தவறிய தில்லையே!

ஆகல் ஊழ், போகல் ஊழ் (ஆகூழ், போகூழ்) என்பது வள்ளுவத் தெளிவாதலால் தானே,

“இருவே றுலகத் தியற்கை”

என்றும்,

**“செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்”**

என்றும் கூறியது திருக்குறள்.

உண்பது இன்பமா – செரிப்பது இன்பமா?
மலச்சிக்கல்காரரிடம் கேளுங்கள்!

ஊடல் இனிதா, கூடல் இனிதா, ஊடிக் கூடல் இனிதா – களவுக் காதலரிடம் கேளுங்கள்!

வள்ளுவரிடம் கேளுங்கள்!

வறுமை – துயரம் – இழப்பு வருவது உண்மையான உறவை – அன்பை – நண்பைக் காண வாய்த்த வாய்ப்பு அல்லவா அது என்பார்!

அறிவிலியின் உறவு எப்படி என்று அவரிடம் கேளுங்கள்.

‘பெரிது இனிது’ என்பார். ஏன் எனின், ‘பிரியும் பொழுது துயரம் ஏற்படாது; மாறாக மகிழ்வு உண்டாகும்’ என்பார்.

அடுத்துள்ள பகையைப் பற்றிக் கேளுங்கள் அவரிடம்:

"கொடுத்தும் கொளல்வேண்டும்; மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை"

என்பார்.

'மனம் போல வாழ்வு' என்பது வாழ்வியல் பிழிசாறு இல்லையா? எல்லாமும் இன்பமா எனின், 'ஆம்' என்பார் உளர். அவர்,

"இன்பமே அன்றித் துன்பம் இல்லை"

எனக்கண்டவர்.

"இன்னாமையை இன்பமாகக் கொள்பவர்"
"இடும்பைக்கு இடும்பை படுப்பவர்"
நிலையில் திரியா மலையாய்,
புலனைந்தும் வென்றாராய்,
இருப்பவர் அவர்; இருந்தவரும் அவர்.

தமிழகம் போல உலகிலேயே வாய்த்த ஓரிடம் இல்லை! மேற்கே, மலை, குறிஞ்சி; அடுத்தே காடு, முல்லை; அடுத்தே வயல், மருதம்; அடுத்தே கடல் - கானல்; நெய்தல். குறிஞ்சியும் முல்லையும் மழையின்றி வளமற்றால் அந்நிலையில் பாலை! மழை பொழிந்து விட்டால் குறிஞ்சியும் முல்லையுமே!

மேல்பால் இருந்து கீழ்பால் வரை அமைந்த படிக்கட்டுப் போல்வதோர் அமைப்பு நிலை! குறிஞ்சி நாகரிகம் முல்லை நாகரிகமாய் மருத நாகரிகமாய் நெய்தல் நாகரிகமாய் வளர்ந்த நிலை. நெய்தல் நாகரிகமே பரதவர் நாடு எனவும் நாவலம் தீவு எனவும் உலகக் கடலாட்சி கொள்ள வாய்த்த - நாவாய்கள் சுழன்று வந்த நிலை!

பனியின் பெருங்கொடுமை உண்டா?
வெயிலின் முழுதுறும் அனல் உண்டா?
சுழல் காற்றால் சுற்றெல்லாம் அழியும் இடர் உண்டா?
எரிமலைக் கக்கல் உண்டா?
நிலநடுக்கம் உண்டா?
ஆழிப்பேரலையும் எங்கே எழுந்தாலும்

நீர்ப்பரப் பெல்லாம் தொடர்தலால் தீரா நிலையில் உண்டாவது அன்றித் தமிழகப் பரப்புக்கு மட்டுமே உரியதில்லையே! தமிழக

நிலப்பரப்புக் குறைந்தது; நீர் வளம் குறைந்தது; மாந்த நேயம், உலகியல் அறம் கெட்டாரால் குன்றியது! இயற்கையாய்க் குறையவில்லை! தமிழர் தமிழ் உணர்வை இழந்து அயலார்க் கடிமையாய் இருத்தலை - ஏற்றலைப் - போற்றுவதால் - அதுவே தொடர்வதால் - சிறுமையும் சீரழிவும் ஆயின!

தமிழைப் போல் எந்த மொழி, இயற்கை இயங்கியல்படி, ஒலி வடிவும் வரிவடிவும் பெற்றது?

தமிழைப் போல் எந்த மொழி, வாழ்வியல் இலக்கணம் கொண்டது?

தமிழைப் போல் எந்த மொழி, உலகியல் பொதுமை அறநூல் கொண்டது?

தமிழைப் போல் எந்த மொழி, எச்சமயத்திற்கும் உரிய நூல்களைக் கொண்டது?

தமிழைப் போல் எந்த மொழி, அறிவியல் அடிப்படையில் சொல்லமைதியும் பொருளமைதியும் கொண்டது?

இவ்வாறிருந்தும் "இனி இழக்க எதுவும் இல்லை" என்னும் நிலையில் அண்டை மாநிலங்கள், இந்திய நடுவண் அரசு, அண்டை அயல் நாடுகள் ஆகியவை புறக்கணிப்பும் அலைக்கழிப்பும் கொண்டது ஏன்?

தமிழர், தாம் தமிழர் என்னும் இனவுணர்வு கொள்ளாமையாலும் மாற்றானுக்கு இடம் தருதலே மாறா நலச் செயல் எனக் கொண்டு தொடர்வதாலும், அயலானை அழைத்து அரசுக் கட்டில் வழங்கியதாலும், மண்ணிழப்பு மதிப்பிழப்பு முதலாம் எல்லா இழப்புகளுக்கும் ஆட்பட்டுள்ளார்!

'எத்தனை கோடி இன்பம்' எனினும், 'எத்தனை கோடி துன்பம்' என்னும் உண்மையை உணரா இனம் உய்யுமா?

இயற்கை காட்டும் - அண்டை அயல் காட்டும் - நிலைகளை எண்ணித் தன்னைத் திருத்திக் கொள்ளா ஒரே ஓர் இனம் உலகில் தமிழினமே போலும்!

2. அசாம் செலவு

என் இந்தியச் சுற்றுலாக்களுக் கெல்லாம் மூலமும் முதலும் வகுத்தலும் வழிகாட்டலும் வாய்ப்புச் செய்தலும் தம் கடமையாகக் கொண்டவர்கள் **புதுவை வேலா - கலா இணையரும், அவர்கள் மகளாய் மருகராய்ப் படைத்துறை மேல்நிலை அலுவலர்களாகக் கடமைபுரியும் அருள் மொழியரும் சரவணரும் ஆவர்!**

அவர் பணியிடம் மாறிச் செல்லும் போதெல்லாம் ஆங்கென்னை அழைத்து அப்பகுதியில் பார்க்க வேண்டும் இடங்களை யெல்லாம் பார்க்கச் செய்தலில் பேரின்பம் காண்பவர். அவர்களுக்குப் படைத்துறைப் பொறுப்பு இல்லாக்கால் என்னால் சம்மு காசுமீரம் இமயம் எல்லாம் செல்ல வாய்த்திருக்குமா? பணத்தால் மட்டும் முடிவதா? ஆர்வத்தால் மட்டும் அமைவதா? செலவிலும், செல்லும் இடங்களில் தங்கலிலும் எத்தனை எத்தனை பாதுகாப்புகள் தேவை? அவர்கள் அரவணைப்பு இல்லையேல் யான் கனவிலும் இச்செலவுகளை எண்ணியிரேன்!

2012 ஏப்பிரல் திங்களில் அசாம் செல்வதற்கான தொடர் வண்டிச் சீட்டு வாங்கி விட்டார் வேலா. மீளும் வகைக்கும் சீட்டு வாங்கி விட்டார்.

ஆனால், பனிப் பொழிவு மிகுதியாக இருப்பதை அருள்மொழியார் கூறினார். கட்டி கட்டியாகப் பனிப் பொழிவும் பனிச் சரிவுகளால் போக்குவரத்துத் தடையும் மிக்குள்ள போதில் உடல்நிலை என்னாம்? சுற்றும் என்னாம்?

பதிவு செய்த சீட்டுகளை மீளத் தரவேண்டும் இக்கட்டே ஏற்பட்டது. சூன், சூலை ஏற்ற காலம் என அறிந்தோம். சூலையில் 8ஆம் நாள் அரியலூரில் ஒரு திருமணம் நிகழ்த்தி வைக்க ஏற்றிருந்தேன். அத்திங்கள் முழுவதும் மற்றை நிகழ்ச்சிகளைத் தவிர்த்து அத்திங்கள் இறுதிக்குள் மீள்வதென முடிவு செய்து மீள் பதிவு வேலா செய்தார்; மீள்தற்கும் சீட்டுப் பெற்று விட்டார்.

ஆனால் **சூன் 27** செய்தியில், அசாமில் வெள்ளம்; 5 இலக்கம் பேர் பாதிப்பு எனச் செய்தித்தாள் கூறியது.

அசாமில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் பல மாவட்டங்களைச் சேர்ந்த கிராமங்களும் விளைநிலங்களும் நீரில் மூழ்கி

உள்ளன. 5 இலக்கம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். அவர்களுக்குக் குடிநீர் உள்ளிட்ட கட்டாயத் தேவைப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

தேமாசி, இலக்கிம்பூர், தின்சுகியா, திப்புரூகர், சிப்புசாகர் சோர்கட்டு முதலிய மாவட்டங்களில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட ஊர்கள் நீரில் மிதக்கின்றன. பிரம்ம புத்திரா ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் வடகரைக்கும் தென்கரைக்கும் இடையிலான **படகுப் போக்குவரத்து நீக்கப்பட்டது.** மற்றை ஆறுகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

வெள்ளப் பெருக்குக் காரணமாகக் காசிரங்கா திப்புரூசைகோவா தேசியப் பூங்காக்களில் இருந்த வனவிலங்குகள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றுவிட்டன. அசாம் – மிசோராம் தேசிய நெடுஞ்சாலையில் தண்ணீர் தேங்கி உள்ளதால் **போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளது** என்பது அது.

தினமணி 27.6.2012

சூன் 29 இதழில்,

அசாம் மாநிலத்தில் **22-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நீடித்துவரும் வெள்ளத்தால் மக்கள் பெருந்துயர்க் குள்ளாகியுள்ளனர்.** இருப்பினும் ஆறுகளில் நீரின் அளவு குறைந்து வருவதாகத் தகவல்கள் வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய 173 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. 43400 ஏக்கரில் விளைந்த பயிர்கள் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளன.

வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் உள்ளவர்களுக்கு இந்திய இராணுவப் படையினர் கெலிகாப்டரிலிருந்து உணவுப் பொட்டலங்களை வழங்கினர்.

தினமணி 30.6.2012

அசாமில் மழை ஓய்ந்தது; நிவாரணப் பணிகள் தீவிரம் என **சூலை 1 இல்** செய்தி வந்தது.

சூலை 2 இல்,

இதுவரை 77 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 5 பேரைக் காணவில்லை.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க 71 படகுகள் மீட்புப் பணியில் இறங்கியிருக்கின்றன.

3, ஜூலை 2012

இவை செய்தித்தாள் முதலிய ஊடகங்கள் வழியாக நாம் அறிந்து கொண்டிருப்பவை. ஆயினும், மீள்பதிவையும் மாற்றுதல் ஆகாது என்றும், மீள இப்படியொரு வாய்ப்புக் கிட்டாமல் போகலாம் என்றும் உறுதி செய்தோம்.

வேலாவும் யானும் செல்ல இருந்த செலவு எங்கள் இருவருக்கும் பேரன்பரும், இயற்கைக் காதலரும் சித்த மருத்துவரும் தமிழநெறியரும் ஆகிய கல்பாக்கம் திரு. முத்து அவர்களும் இணைய மூவரும் ஒருவராய் தி.பி.2043 ஆனி 25 (கி.பி.09.07.2012) சென்னையில் இருந்து இரவு 10.30க்குப் புறப்படும் தொடரியில் செல்ல எல்லா ஏற்பாடுகளும் திரு.வேலாவே தம் மருகரொடும் கலந்து திட்டப்படுத்தினார். முன்னே சென்று வந்த வழிகாட்டி உடனிருக்கும் போது நாம் பின்னே தொடர வேண்டியது தானே கடமை!

அசாம் : இந்திய வடகிழக்கு மாநிலம் அசாம். இதற்கு, பூட்டான் அருணாசலப் பைதிரம் (பிரதேசம்) - வடக்கு

நாகலாந்து மணிப்புரி – கிழக்கு

மிசோராம், திரிபுரா, பங்களா தேசம், மேகாலயா - தெற்கு.

மேற்கு வங்காளம் – மேற்கு.

அசாம் மாநிலப் பரப்பு 78, 523 ச.கி.மீ.

தலைநகர் திசுபூர். புதிய தலைநகர் பிராச்சோ திசுபூர்.

இம்மாநிலத்திற்கு இமயமலைத் தொடர்களான பாட்காய்புர் நாகர்மலை - பராய் தொடர், காசி சயித்திய மலைத் தொடர் ஆயவை எல்லைப் புறங்களாக அமைந்து மாநிலத்தின் நடுவே பிரம்ம புத்திராவும் அதன் கிளை யாறுகளும் செல்கின்றன.

மிகு மழை பொழியும் மாநிலம் இது. சமமற்ற நிலத்தது என்னும் பொருளது அசாம். இது, **காமரூபம்** என்றும் அழைக்கப்பட்டது. விரும்பும் தோற்றமமைந்தது என்பது இதன் பொருள்.

விடுதலைக்குப் பின் அசாம் பல மாநிலங்களாகப் பிரிந்தது. பரந்திருந்த அசாம் 2,23,000 ச.கி.மீ பரப்பினது.

அசாமிய மக்கள் ஆவினத்தைப் போற்றுகின்றனர். விழா எடுக்கின்றனர். மலை வாழ்மக்கள் பல பிரிவினராக உளர். இங்கே தேயிலைத் தோட்டங்கள் மிகுதி.

20 ஆம் நூற்றாண்டு முதல் அயல் நாட்டவரும் அயல் மாநிலத்தவரும் பெருக்கமாக வந்து குடியேறலால் **அரசியல் கொதிப்பு மிக்குள பகுதியாக உள்ளது.**

இசுலாமியப் பெருக்கமும் பலசிக்கல்களை உண்டாக்கி உள்ளது. சீனத்தாக்குதல் 1962 இல் ஏற்பட்டது.

கிறித்தவப் பெருக்கமும் உண்டாகின்றது. சிவனிய மாலிய அம்மை வழிபாடு அசாமியரிடம் உளது. தாய்வழி ஆட்சிக் குடும்ப வாழ்வினது அது. அசாமிய மொழி இந்தோ - ஆரிய மொழிகளுள் ஒன்று என்பர். மகதி பிராகிருத வழியாகத் தோன்றியது என்றும் கூறுவர். அசாமிய மொழியும் வங்கமொழியும் பெரு வேறுபாடற்றவை. 13 ஆம் நூற்றாண்டிலேயே தனிமொழியாக வளரத் தொடங்கியது என்பர்.

வாழ்வியல் களஞ்சியம்.1.

இச்செலவும் திட்டமிட்டவாறு நடைபெறவில்லை. அசாமில் உள்நாட்டுப் போர் போல். வன்முறை - கலவரம் - ஏற்பட்டமை தடையாயிற்று. படைத்துறையர்க்கு ஓயா ஒழியாப்பணி. அத்துறை மேலலுவலர்க்கு எத்துணைப் பொறுப்பு இருக்கும்! அதிலும் பொறுப்பு என்றால், முழுதுற ஈடுபடும் திரு. சரவணர்க்கு எத்தகு பணி இருக்கும்?

தம் பணிக்கே பொழுதெல்லாம் செலவிட்டாலும் போதாத அலுவலர்க்கு நாமும் சுமையாய் அமைதல் தகுமா? இந்நிலையில் தம் குடும்பத்தவரும் தம் மக்கள் சாரல், அருவி ஆயோர் கல்விக்கு எனப் படைத்துறைப்பள்ளியில் இடம் கிடைக்கப் பெற்றுக் கிருட்டிணகிரியில் தங்கும் நிலை ஏற்பட்டு விட்டமையால், ஆங்குச் செல்லுதல் ஏற்றக் கூடாச் சுமை ஏற்றிய நிலை ஆகாதா? இவ்வெண்ணங்கள் என்னை அழுத்தின! அவ்வேளையில் காலிலும் கையிலும் அடிபடும் நேர்ச்சி ஒன்றும் எனக்கு ஏற்பட்டது. என் செய்வேன்! வேலா அவர்களிடம் நிலைமையைக் கூறினேன் என் செய்வார்?

என் நலத்திற்காக - என் வாழ்வின் பங்களிப்புக்காக - முப்பான் ஆண்டுகளாகப் பேரார்வமும் பெருந்தொண்டும் செய்துவரும் அவர் உருகினார். மூன்றாம் முறையாகவும் எடுத்த சீட்டுகளை மாற்றி உதவினார்.

மீண்டும் 2013 மார்ச்சுத் திங்கள் 20 முதல் ஏப்பிரல் திங்கள் 15 வரை பிற நிகழ்வுகளை ஒதுக்கி வைத்து அசாம் செல்லும் திட்டத்தை 14.2.2013 இல் உரைத்தார். "சரவணர் நிலைமை அறிந்து திட்டமிடல் வேண்டும்; அவர்பணி நிலைக்கு ஊறு - நெருக்கடி-எதுவும் ஏற்படாச் செலவாக அமைதல் வேண்டும்" என்றேன். அவர்தம் அழைப்புக் கொண்டே திட்டப்படுத்தியதாகக் கூறினார். அடுத்த அரைமணிப் பொழுதில் திரு. சரவணரே நலம் வினவுதலொடு, **"இது கால் வருதல் தக்கதே; யான் எதிர் நோக்கியுள்ளேன்"** என்று நன்மொழி யுரைத்தார். வேலா திட்டத்தை ஏற்றுக் கொண்டு என் பணித் திட்டத்தை மார்ச்சு 20 முதல் ஏப்பிரல் 15 வரை ஒதுக்கி வைத்துச் செல்வதற்கு இசைவு தெரிவித்தேன். வேலா தொடரிப் பதிவில் ஊன்றினார்.

"எனக்குப் பகல் போதெல்லாம் இருபாலும் பார்த்துச் செல்லல் இன்றியமையாதது. இருபாலும் பார்க்க இயலா அடைப்புப் பெட்டியில் வேறு எந்நலங்கள் இருப்பினும் வேண்டா!" என்று கருத்துரைத்தேன். இச்செலவு புதுவது அன்றே! வேலாவே முன்னரும் பன்முறை ஏற்பாடு செய்தவர் அலரோ! ஆதலால், அவரே அத்திட்டம் கொண்டிருப்பதாகக் கூறிச் செயலில் இறங்கினார்.

வடக்கில் உள்ள இடர் பெரிது; பதிவுப் பெட்டி - பதிவு இருக்கை என்பவைக்கும், பதியாப் பெட்டி பதியா இருக்கை என்பவைக்கும் வேறுபாடு இரா. சீட்டுக் காப்பாளரும் காவலரும் கண்டு கொள்ளார். எங்கே இடம் இருந்தாலும் ஏறி அமர்ந்துவிடுவர்; படுத்தும் விடுவர்; தடுக்க இயலாது. நாம் புரியா மொழியில் நம்மைத் திட்டுவதை வாழ்த்துவதாகக் கொண்டு வாயை மூடி இருந்தால் தான் கைகலப் பின்றித் தப்பலாம்! உச்சி முதல் உள்ளங்கால் வரை ஊழலும் முறை கேடும் மல்கிப்போன நாட்டில், வேறு என்ன நன்னிலையை நோக்க முடியும்?

இடமோ சுருக்கம்! கூட்டமோ பெருக்கம்! உரிய வண்டிகளோ குறைவு! உட்குறைகள் இவ்வாறு இருக்க வெளிக்குறை சொல்லி ஆவதென்ன? தென்பகுதிக்கும் இந்நோய் தொற்றுதல் தொடங்கியுள்ளமை இதுகால்

காணமுடிகின்றது. இதிலாவது ஒருமைப்பாடு வேண்டாவா! போகவும் வரவும் வேலா சீட்டு வாங்கி விட்டார். திரும்புதலில் முற்பட வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. அதனால் 25.3.2013 செலவு மேற்கொள்ளவும் 13.4.2013 -இல் சென்னையில் மீண்டு இருக்குமாறும் மாற்றம் செய்ய வேண்டியிருந்தது.

14.4.2013 -இல் ஒரு திருமணம் நடத்துதல். 15.4.2013 இல் ஒரு திருமணம் நடத்துதல். வைரி செட்டிப்பாளையத்தில் திருக்குறள் வாழ்வர் ஆ. வே.இரா. விழா இவற்றால் ஏற்பட்ட மாற்றம். இதற்கும் வழி செய்தார் வேலா.

அடுத்து, நடுவண் தொடரித்துறை, தொடரிக்கட்டண உயர்வு அறிவித்தது. அதற்குத்தகச் சீட்டுக்குச் செலுத்திய தொகைக்கு மேல் தொகை செலுத்த வேண்டுமே! அம்முயற்சியும் மேற்கொண்டார் வேலா. “செலவின் போது வண்டியிலேயே சீட்டுத் தணிக்கையரிடம் செலுத்திக் கொள்க” என மறுமொழி பெற்றார். நாம் வாழும் நம் நாட்டுச் செலவு! கால இடச் சூழல், நம் கடமை, நம் உடல் நிலை ஆகியவற்றால் எத்தனை எத்தனை மாற்றங்களை ஏற்க வேண்டி வருகின்றது! இது தான் வாழ்வியல்!

“ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்” (நல்வழி - 27)

என்னும் மும்மையும் பட்டறிவுப் பிழிவு அல்லவா!

24.03.2013 இல் சென்னையில் இருந்து அசாம் செலவுக்குத் தகச் சென்னை செல்லத் திருச்சிராப்பள்ளியில் இருந்து புறப்படும் பல்லவன் விரைவுத் தொடரி (காலை 6.30)யில் புறப்பட என்மூத்த மகனார் இளங்கோ முன்னுறவே சீட்டு வாங்கிவிட்டார். சுட்டிக் காட்டிய

“ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்”

என்பது போல், 25.3.2013 காலை 6.30-க்குப் புறப்பட வேண்டிய தொடரிச் செலவை மாற்றி, அமிழ்தத் தமிழ் இளவரசனார், வரலாற்றுச் சுற்றுலாவை 23.3.2013 காலை 6.15-க்கே தொடங்கிவிட நேர்ந்தது. திருச்சியில் இருந்து நார்த்தாமலை, புதுக்கோட்டை, திருப்பெருந்துறை, சிற்றண்ணல் வாயில், குடுமியான் மலை, புதுக்கோட்டை ஞானாலயா,

புதுக்கோட்டை விருது, விருந்து நிகழ்வு, தஞ்சை வரவேற்பு, கல்வி கலையியல் கல்லூரி வரவேற்பு, தனிநாயக அடிகளார் நூற்றாண்டுப் பொழிவு, மீளவும் திருச்சி - சென்னை என 24.3.2013 இரவு பத்துமணிக்கு எழுமூர், கெல்லட் தெரு, 'ரீசன்ட்' (42) டில் தங்க நேர்ந்தது. காலையில் எழுந்து முன்னை நிகழ்ந்த சுற்றுலா நிகழ்வுகளை எழுத வாய்த்தது.

மாலை 3 மணிக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாரதி தாசனார் அறக்கட்டளைப் பொழிவு 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்பது பேரா. முனைவர் திருமிகு ய. மணிகண்டனார் ஏற்பாடு. அதனை நிறைவு செய்து இரவு 10.30 மணிக்கு 'அசாம்' செலவு தொடர்ந்தது.

23, 24 ஆம் நாள் சுற்றில் காட்சி, கலந்துரையாடல் வரவேற்பு வாழ்த்து பொழிவு என்பவை பேருவகையாயின. காஞ்சி அமிழ்தனார் மகனார் இளவரசர் ஏற்பாடுகள் அறிவர் அவையாக அளவிலா உவகைப் பேறு வழங்கியது.

சிலம்பொலி சு. செல்லப்பனார், முனைவர் இ. சுந்தர மூர்த்தியார், பாவலர் அறிவுமதி, புதுகைத் தென்றல் ஆசிரியர் தருமனார். வெங்காலூர் தமிழ்ச்சங்கத் தோன்றல் **முத்துச் செல்வனார்,** கல்வெட்டுத் தோய்வர் முனைவர் **முத்தழகு,** பேரன்புத் தோன்றல் முனைவர் **தமிழகனார்,** புதுகை **மலையப்பனார், இராமலிங்கர், இராமையா, இராமதாசு, காடுவெட்டியார்** எனப்பலரும் கலந்து கூடி உண்டும் உரையாடியும் உவந்தும் படப்பதிவு ஒலிப் பதிவு என ஆவணமாக்கி, 'உள்ளப் பிரிந்த' நாள்கள் எனத் திகழ்ந்தன. முனைவர் ய. மணிகண்டனார் தஞ்சையிலேயே கண்டு களிப்புறுத்தினார்.

அசாம் செலவோ, நெட்ட நெடிய அன்பரும் நண்பரும் என்றும் ஒன்றாம் நிலையரும் ஆகிய புதுவை வேலா இணையரும், கல்பாக்கம் திருமிகு. முத்து இணையரும், யானும் கூடிய **ஐவர் செலவு ஆயிற்று!** எண்ணிக்கையால் சுருங்கினாலும் பழமையால் எண்ணத்தால் பாரிய பெருமக்களின் ஒன்றிப்பு! படைமேல் துறையாளர் திருமிகு **சரவணனார்** கைம்மாறு கருதா ஒப்புரவு மேம்பாட்டினால் உருக்கொண்டு **இயற்கை காண் நோக்கிலேயே கொண்ட செலவு** இஃதாம்!

சென்னை கௌகத்தித் தொடரி இரவு 10.30-க்குப் புறப்பட வேண்டும். அனைவரும் 9.30 அளவிலேயே ஐந்தாம் நடை மேடைக்கு எய்திவிட்டோம். திரு.முத்து அவர்கள் மகளார் மருகர் உடனிருந்தனர். கலைச் செல்வனார், கலை. திருமாறனார், கலை செழியனார் உடனாகி இருந்தனர். உரிய பெட்டியில் அமர்ந்து, தணிக்கையர் வரவை நோக்கினோம். அவரும் எய்தினார். அணித்தே ஏற்றப்பட்ட கட்டணம் பெற்றுப் பற்றுச் சீட்டு வழங்கினார்.

பெட்டியும் படுக்கை வாய்ப்பும் ஐவர்க்கும் ஓரடைப்பு வரிசையிலேயே இருந்தமையால் உரையாட - உரிய பொருள்களைப் பேண ஏந்தாய் அமைந்தது. இரவு 11.15 அளவில் படுக்கையை மேற்கொண்டோம். விடியல் **'ஏலூர்'** காலை 6.30 அளவில் எய்தியது.

நெல்லூர், ஓங்கோல், விசயவாடா, கடந்துவிட்டன இரவிலேயே. **இராச முந்திரி, சந்திப்பு, விசாக பட்டினம்** தொடர்ந்தன.

இராச முந்திரி விசாக பட்டினம் இடைவெளி மிகுதி. நீர்வள - நிலவளமிக்க விளைநிலப் பகுதி. அதன் அடையாளம் காக்கைகளைக் காணமுடிய வில்லை. ஆயிரம் ஆயிரமாய்க் கொக்குகள் குலவின.

பரிய வரப்புகள் இல்லை. வாய்க்கால்களே வரப்பாக அமைந்தன. அதனால், வயலில் பாதி வரப்பு என்னும் நிலை காணப்படவில்லை. எங்கும் குட்டையான நெற்பயிர்; ஊடு மரங்களே இல்லை! கண்ணெட்டு தொலைவெல்லாம் பச்சைக்கம்பள விரிப்பு. அரிதாக வரப்புப் போல் தென்னை, கூந்தல் பனை, ஈந்து ஆயவை. பயிரிடப்படா நிலங்களில் வேலிக் கருவேல், மா, பலா, வாழை, கரும்பு ஆயவை தோற்றந் தரவில்லை.

'தோப்புப் பெருத்து விளைநிலம் பாழாயது'

என்று சொல்லும் தனிப்பாடல் நிலை ஆங்கில்லை. ஏன்? நீர்வள இயற்கை இச்சமன்பாட்டைச் செய்கின்றது.

குற்றாலச் சாரல் தென்காசியைத் தாண்டியும் குளிர்மையால் விளக்கும். அருவி கொட்டுதலைக் காணா முன்னரும் அருவிக் கொழிப்பு உண்டெனஉணர்த்தும். அதுபோல் நீர்வளம் நிலவளம் எல்லாம் கண்ட காட்சி அவ்வளங்களுக்கு மூலத்தை விளக்கிக் காட்டுவது போல் கோதாவரி ஆறு எய்தியது.

என்ன நீளம்! என்ன அகலம்! என்ன பெருக்கு! என்ன தூய்மை! இடை இடையே உலாப்படகு! மீன் பிடி படகு!

ஆறு கண்ட காட்சி கம்பனை முன்னின்று காட்டியது. சங்கச் சான்றோரை எண்ணிய – அவர்கள் கொடைவளத்தை எண்ணிய – அதன் தூய்மை மேம்பாட்டை – கருத்து வளத்தை எண்ணிய – எண்ணங்களாகத் தோற்றம் தந்த அருமையைப் பதிவு செய்துள்ள அருமை உட்புகுந்து, நாடி நரம்புகள் அனைத்தும் காலும் கழனியும் போல் உலவின! என்ன பற்றுமைப் பாவலன் அவன்! எதைப் பாடினாலும் எவ்விடத்தைப் பாடினாலும் தாய் மண்ணை – தாய்மண் தகவை – மறவாமல் பதிவாவணம் ஆக்கி விடுகின்றதே!

“புவியினுக் கணியாய் ஆன்ற
    பொருள் தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
    ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
    றொழுக்கமும் பொருந்திச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
    வரியினை”

என்பது அவ்வெழில் மிகு காட்சி! ஆயிரம் ஆண்டுகள் கழித்தும் கம்பன் தன் கவியால் புகுந்து இடம்பிடித்துக் கொள்ளும் அருமை அவன் இறவா வாழ்வினன் என்பதன் சான்று அல்லவோ!

ஆந்திரப்பகுதி நீண்டது; நெடுந்தொலையது; இரவு (25.03.2013) யாமம் தொடங்கிப் பகலில் பெரும் பொழுது செல்லும் செலவினது. முற்பகுதியில் கண்டவளம் செல்லச் செல்லக் குன்றியது. பொழுதும் வெப்புமிக்கு அனற்காற்றாகியது. ஆயினும் புன்செய்ப் பயிர்வளம் விளங்கவே செய்தது.

சுற்றுலாவில் பக்கம் பார்த்தலை அன்றிப் பேசுதலும் படித்தலும் கொள்வது என் வழக்கமில்லை. எனினும் தமிழ்நாட்டுக் கல்விநிலை, ஆசிரியர் நிலை ஆகியவை, மொழி இன மண் கேட்டுநிலையாகத் தொடர்வதை எண்ணிய போது, வாட்டிய வெயில் அனற்காற்று ஆயவற்றினும் கொடுமையாக இருப்பது வாட்டியது!

ஐந்து வகுப்பு வரையேனும் கட்டாயமாகத் தமிழ் கற்பித்தலைக் கொள்ளாத போலியர் ஆட்சியும், பொருளே குறியாக ஆங்கில வழிப்பள்ளிகளைப் பெருக்கும் கொள்ளையர் கேடும் பேசத்தூண்டியது. நாங்கள் ஐவர் ஆகலின் எதிரெதிர் இருக்கை அணுக்கமும் உதவியது. ஆதலால் என் மூன்றாம் வகுப்பு ஆசிரியர் கற்பித்த நாடகம், வரைந்த ஓவியம், என் ஆசிரிய நிலை, மாணவர்களைத் திருத்திய நிலை என்பவை பற்றிய உரையாடல் கிளர்ந்து தொடர்ந்தது.

மூன்றாம் வகுப்பு ஆசிரியர் பெயர் **அற்புதம்.** அவர் நடிக்க வைத்த மூவர் (தாத்தா – மகன் – பேரன்) நாடகம்.

தாத்தா ஒரு மண் ஓட்டினைத் தண்ணீர் விட்டுக் கழுவுகிறார். பேரன் வருகிறான். தாத்தாவினிடம்,

"தாத்தா இந்த மண் ஓட்டைத்
தண்ணீர் ஊற்றிக் கழுவுவதேன்?"

தாத்தா : "அப்பா பேரா இது தானடா
அன்னம் உண்ணும் கிண்ணமடா"

பேரன் : "வெள்ளிப் பாத்திரம் எத்தனையோ
வீட்டில் நமக்காய் இருக்கிறதே"

தாத்தா : "ஆமாம். ஆனால் உன்னப்பன்
அவற்றை எனக்குத் தரமாட்டான்"

பேரன் : தனக்குள்; "தரமாட்டாரா; பார்த்துக் கொள்கிறேன்;"
தாத்தா படுத்திருக்கிறார்; பேரன் ஓட்டை எடுத்துச் செல்கிறான்.

மகன் வருகிறான்;

தந்தையை நோக்கி:

"ஆகாரம் வேண்டாமோடா
அசட்டுக் கிழப்பயலே
வேகமாய் எழுந்து ஓட்டை
விளக்கி எடுத்து வாடா"

(தாத்தா எழுந்து ஓட்டைத் தேடுகிறார். காணவில்லை)

"ஐயையோ ஓட்டைக் காணோம்
ஆரோ எடுத்துக் கொண்டார்;
வையாதே என்மகனே
வஞ்சமிது யார் செய்ததோ?"

பேரன் வருகிறான்:

"அப்பா தாத்தாவை வையாதே
அன்னியக் கொடுமைகள் செய்யாதே
ஓட்டை எடுத்தவன் நான்தானே
உனக்கென் றதைநான் வைத்துவிட்டேன்"

தந்தை : "புத்தி வந்தது. நல்ல
புத்தி வந்தது
சத்தியமாய் இப்போது தான்
புத்தி வந்தது"

"உற்றவரே எனைப் பெற்றவரே
உமக்கே தினம் என் வணக்கம்"

மாணவர் அனைவரும்:

"தந்தை தாய்ப் பேண்"
"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

மூன்றே மூன்று நாள்கள்; வெள்ளைச் சுவரின் வாயில், சாளரம் தவிர்த்து எஞ்சிய பகுதிகள் எல்லாம் வண்ணமயமாகின. அனைத்தும் ஓவியங்கள்! எப்படி?

மண்ணெண்ணெய் விளக்கின் மேல்பகுதியில் படிந்த கரியைக் கொண்டு வரச் செய்தார். வேப்பம் பிசின் (பயின்) கொண்டு வரச் செய்தார். கருவேல் சிறுகுச்சியை எடுத்துவரச் செய்தார். பிசினை நொறுக்கி நீர்விட்டுக் குழைத்துப் பசைநிலை ஆக்கினார். கருவேல் குச்சியில் ஒரு முனையைத் தட்டி நைத்துத் தூரிகை ஆக்கினார். தடிப்பானதாள் எடுத்துக் கரிக்கோலால் (பென்சில்) யானை, பன்றி, கரடி, காக்கை, குயில் கரிக்குருவி, கருவண்டு வரைந்தார். அக்கோட்டின் மேல், பிசினைக் கற்றையாய்த் தடவினார். உலருமாறு வெயிலில் காயவைத்தார். காய்ந்ததும் தாள் முழுவதும் கரியைத் தடவினார். முழுவதும் பட நீரை

விட்டார். பிசின் தடவிய பகுதியின் மேல் இருந்த கரி அறவே அகன்று வெள்ளை வெளேர் என ஆகிவிட்டது. எஞ்சிய பகுதி கன்னங்கரேல் எனக்காட்சி வழங்கியது.

அருமையாக யானை, பன்றி, கரடிகள் வெளிப்பட்டுச் சிறந்தன! என்ன மாய வேலை செய்துவிட்டார், அற்புதம்!

அவர் முன்னே எதனையும் சொல்ல மாட்டார். செய்து காட்டி வியப்புறுத்துவார்: மறுநாள் பசளைக்கீரை, மஞ்சள் அரைப்பு, சுண்ணாம்பு, கொண்டுவரச் சொன்னார். கீரைச் சாறு எடுத்தார், மஞ்சளில் ஒரு பகுதியையும் சுண்ணாம்பையும் சேர்த்துக் கலந்தார். நீர் விட்டுக் குழைத்தார். செக்கச் செவேர் என வண்ணம் வந்தது. மற்றவற்றைத் தனித்தனி வண்ணமாய் பச்சை, மஞ்சள், வெள்ளை, கருமை எனக் கரைத்தார். தூரிகையை எடுத்தார். மயில், கிளி, மான், கொக்கு, மலை, ஆறு, மாம்பழம், முதலாக வண்ண வண்ணக் காட்சிகள் ஆக்கினார். வகுப்பே புதுக் கோலம் கொண்டது. அவர் திறம் மாணவர் உள்ளம் கொள்ளை கொண்டது. மற்றை ஆசிரியர்கள் உள்ளத்தில் எரிமூண்டது. அவர்கள் கடனுக்குப் பள்ளி வந்தவர்கள்! கூலிக்கு மாரடித்தவர்கள்! பலர் அல்லர்! அற்புதனார் தவிர ஆசிரியர் இருவரே! ஆயினும் எரிவை வெளிப்படுத்தினர் அல்லர். ஏனெனில், அவர்கள் வகுப்பு மாணவர்கள் விருப்பின்படி அவர்கள் வகுப்பையும் வனப்பாக்கினார். ஊரவர் காட்சியகம் வருவது போல் வந்து கண்டு ஆசிரியரைப் பாராட்டினர்.

வகுப்பு நேரத்தை வகுப்பாகவே நடத்தினார். ஓய்வு நேரத்தைக் கலைவளர் பொழுதாக்கினார். ஊரவர் மகிழக் கும்மி, கோலாட்டம் என மாணவர்களுக்குப் பயிற்சி தந்தார். ஊர் விழாக்களில் பொலிவு உண்டாக்கினார். வந்த ஒரு மாதத்திலேயே கலைச் சாலை – கவின் சாலை ஆக்கினார்.

ஆம்! **பிறவி ஆசிரியர் அற்புதர்!**

கலையே வாழ்வாகிக் காசு பண்ணாத தவநெறியர்! அவர் கோலம் மாற வில்லை! சீலம் ஊரை ஆட்சி செய்தது! “சுற்றுலாவா, தனியே எழுதியிருக்கலாமே” எனப் படிப்பார்க்குத் தோன்றலாம். எனக்கும் அது தோன்றுவதே எனினும், இயற்கைக் காதலர் கலைத் தோன்றல்

கல்பாக்கம் திரு. முத்து அவர்கள் இவற்றை முழுவதாக எழுதி விடுங்கள் என்ற தூண்டலே விரிவுற்றதாம்! எழுதும் போது நோக்கினேன். மேல் பால் கயிலாயக் காட்சியாய் இருபால் குன்று சூழ நிமிர்ந்து நின்ற கயிலாயக் கோடு என விளைநிலங்கள் விரிந்து பரந்து வரவேற்கும் எழிலுறு காட்சி நின்றது. **சாய்சண்டி பகார்** நிலையப் பெயர். பொழுது காலை 6.45. மலை - மலைச்சரிவு - வடிநிலம் - விளைபுலம் தொடர் நிலையம்! இயற்கை எழில்! இரவு உறங்கும் போது, இத்தகு காட்சிகள் எத்தனை கடந்தனவோ? இரவிலாப் பகலாய் உறங்கா நிலையாய் இருந்தால் எப்படி இருக்கும்! ஒரு நாள் இரு நாள் இன்பமாக இருக்கும். பின்னர்த் துன்பத்தில் துன்பமாகத் தோற்ற மாகிவிடுமே! இயற்கைப் படைப்பாளி, இணையிலாப் படைப்பாளி! ஆதலால், இயையச் செய்து இயக்க வேண்டும் வகையில் இயங்கலாகும் இயவுள் பேரிட்டனர் முந்தையர்!

வரப்பறியா வயல் வெளி கண்ட கண்கள் பரும்பரும் வரப்புடைய வயல் துண்டுகளைக் காண வாய்த்தது. தமிழகத்துக் காணப்படும் காகம், மயில், மஞ்சள்குருவி, பருந்து, புறா முதலியவற்றைக் காண இயலவில்லை. எங்கும் கொக்குகள் காணப்பட்டன. ஆடு மாடுகள் மேய்தல் தெரிந்தன. புறச்சுவர் பூசாவீடுகள் மட்டப் பாவாம் குச்சுவீடுகள் தெரிந்தன. சிற்றூர்களில் ஓரிரண்டு இருமாடி, மும்மாடி, வீடுகள் தெரிந்தன. ஊர்த் தொடர்பில்லாத - சுற்றுச்சுவர் இல்லாத - தனித்த கோயில்கள் இருந்தன. எங்கெங்கும் எல்லாமும் குறுமரங்களே தெரிந்தன. ஈந்து பெருகக் காணப்பட்டது. சிற்றூர்ப் பகுதிகள் மண்சாலைகளை மிகக் கொண்டிருந்தன. தாமோதர் ஆறு, பள்ளத்தாக்கு, பாரிய தொழிற்சாலைப் பகுதிகள், நிலக்கரிக் கூண்டுகள் வழியே செல்லுதல், உருக்குத் தொழிற்பெருக்க வளம் தோற்றம் தந்தன. நிலக்கரி வளமிக்க இடம். மரத்தடிப் பந்தல் - துணி - தார் மேற்கட்டு உணவு விடுதிகள் எளிமையில் எளிமையாய் - பெருகிய கூட்டத்ததாய் - தொழிற் சாலைப்புகுதிகளில் விளங்கின. தொழில் சூழ் பகுதியின் மேலே சில பருந்துகள் வட்டமிட்டன. பிறவகைப் பறவைகளும் திரிந்தன.

வண்டி ஏறக்குறையச் சரியான பொழுதிலேயே வந்தது. மொத்தத்தில் இதுவரை (27.03.2013; 9.50) அரைமணிப் பொழுதே காலத்தாழ்வு ஏற்பட்டுள்ளது. **துர்க்காபூர்** புகழ்மிக்க சந்திப்பு. இராமகிருட்டிணர் பிறந்த பெருமையூர்ப்பெயர். காளி கோயில் பூசாரியாய் உள்ளம் புகுந்து

விவேகானந்தர் வழியாக உலகப் புகழாளராய் அளவிறந்த தொண்டு நிறுவனங்களின் பெயரிட்டுச் சிறப்பினைத் தாமும் தம்துணை சாரதையாரும், தம் மாணவர் விவேகானந்தரும் கொண்டு விளங்க மூலவராக இருந்த பெருமையர். **இராமகிருட்டிணர் பிறந்த ஊரால் வளர்ந்த பெருமையால் புதிய துர்க்காபூர் ஆகியிருத்தல் வேண்டும். அடுத்துள்ள பேரூர் வாரியூர்** (அ) வாரியர்

வளங்களால் நிரம்பியது வாரி! (கடல்)
வளங்களால் நிரம்பிய மண்ணும் வாரி!
நிலக்கரி வளம் நிகரிலாது புதையலாய்க் கிடந்து
மலையாக மேல் அள்ளிக் குவித்துக் கரியாய்,
மின்னாற்றலாய்ப் பிறபிற வளங்களாய்ச் சிறக்கும் இடம்

வாரியர் ஆகலாம். கண்ணுக் கெட்டும் தொலைவெலாம் கரிகுவித்த மலையும், தொழிலகமுமே யாயும் காட்சி தரும் அப்பகுதியின் அப் பெயர்க்குரியதாகத் திகழல் தெளிவாம். ஆலைக் கெனத் தனித் தொடரிப்பிரிவு உள்ளது. நூற்றுக் கணக்கான பெட்டிகளோடு நகர்ந்த வண்ணம் இருந்தன அவ்வழியில்!

வெயில்கடுமையா? இல்லை! 'கொடுமை!' பனிக்கடுமை இல்லை! பனிக் கொடுமை!

இவை உலகத் தியற்கை அல்லது ஊழ்!

தலையில் வெயில்பட வேண்டும்; பனிபட வேண்டும். தலைப் பாகை, சட்டை மேல் கட்டு, போர்வை என்பவை மாறானவை என்பது இயற்கையர் பார்வை!

ஆனால் வாழ்வியல் பார்வை என்ன? வெயிலை வெல்! பனியை வெல்! அவை ஊழை வெல்லுதல்! அவ்வெல்லலையும் வெல்லும் நிலை ஊழுக்கு உண்டு! அந்நிலை உண்டாயின், ஊழை வென்ற உவப்பென, ஊழ் வெல்லல் கண்டு உவப்புறு! இவையே,

"ஊழையும் உப்பக்கம் காணல்!"
"ஊழ் மற்றொன்று சூழினும் வெல்லும்" என்பவை.

ஆறாம் அறிவைப் படைத்த பயன்பிறவி என்பதன் அடையாளம் இவ்விரண்டையும் புரிந்து கடனாற்றுவதுவேயாம். மேற்கு வங்கப் பகுதியில் நெடுந்தொலைவு செல்ல நேர்ந்தது. அங்கே தொடரிச்

சாலையை அடுத்துள்ள சிற்றூர்கள் அனைத்தும் இரண்டு இரண்டு குட்டை (குளம்) களை யுடையனவாய் இருந்தன. ஒன்றற்கு ஒன்று இடைவெளி, ஊரின் பெரிது சிறிதைப் பொறுத்தது. இந்நிலை தமிழகத்தில் அதிலும் செட்டி நாட்டில் காணக் கூடிய நிலை.

அவை குடிநீர்க்கு ஒன்றும், குளி நீர்க்கு ஒன்றும் என அமைந்தவை. அம்முறை செம்முறையே! அது ஊர்க்குத் தனியாகவும் ஒன்றியது சேரியாய் அதற்கெனவும் ஆயின், அங்கும் சாதித்தீ ஒழியவில்லை என்பதாம்.

கூரைவீடுகள் மண்சுவர்கள் (அ) கோரைக் கற்றைச் சுவர்கள் அமைந்தவை. தகர வீடுகளும் இருந்தன. அங்கே எருத்தட்டி உலர வைக்கும் வழக்கம் தமிழகம் போலவே உள்ளது. காரை வீடு அடுக்குமாடி வீடுகளில் அந்நிலை இல்லை. ஆயினும் குறைந்த உயரக்காரை வீடுகளில் காண முடியாமல் போய்விடவில்லை.

நெல், கோதுமை, உள்ளி, பயற்றுச் செடி அடுத்தடுத்தே இருந்தன. பெரும்பரப்பு நெல்(அ) கோதுமை. கோதுமை அறுவடை முடிந்த காலம். நெல் பயிராகும் காலம் எனத் தோன்றியது. பகலில் வெப்பக் கொடுமை; இரவில் குளிர்க் கடுமை. பொருட் போக்குவரத்துக்கெனத் தனிப்பாதை அமைந்ததாய், சரக்குவண்டி தொடர்ந்து சென்று கொண்டிருந்தன.

தமிழக ஊரூர்களுக்குள்ள பாரிய வாகை, பருத்த புளி, படர்ந்தகன்ற ஆல் மரங்கள், வேம்பு முதலியவற்றைக் காண முடியவில்லை. பெரிதும் குள்ளமான மரங்கள், தென்னை, பனை, மூங்கில் கூட! "சார்க்கண்ட்டு" மாநில நிலையம் அடையும் போது 27.03.2013 பகல் 1 ¾ மணி. அது புதிதாகத் தோன்றிய மாநிலம் 'பாகூர்' நிலையம் அது. காணும் நிலையங்களில் பல பூர், ஊர், புரி என்னும் பெயர்களைக் காணும் போது ஓர் உள்ளுணர்வு உண்டாதல் இயல்பு! இழப்புகள் சில இழவுகள் ஆகிவிட வில்லையா?

பராக்கா ஒரு சந்திப்பு நிலையம். ஆற்றின் பெயர், அணையின் பெயர் பராக்கா! பல கி.மீ. அகலம்! அகண்ட காவிரியை எண்ணினால் அது பராக்காவின் கைக்குழந்தை. கங்கையாறே இது. இவ்விடத்துப் பெயர் பராக்கா! அகன்ற காவிரிப் பெயர் போல.

பர் < பர < பரக்க < பராக்க < பராக்கு

பன்னூறு சொற்கள் 'பர' என்பதில் இருந்து!
நாம் சொன்னால், அவன் கேட்பானா?
அவன் சொல்ல மாட்டான்! ஏற்கவும் மாட்டான்!
ஏனெனில் அவன் ஒன்றாய் நிலைத்தவன்!
நாம் என்றும் ஒன்றுபடா, நிலை கெட்டவர் ஆயினமே!

தமிழ்நாட்டில் இதுகால் மாமரம் பூத்துக்குலுங்குதல் பிஞ்சும் காயும் தொங்குதல் காணும் காட்சி. இங்கே மாமரம் எதுவும் பூக்கவில்லை. தளிர் குலுங்குகிறது. தளிர் எடுத்தால் பூ எடுத்துக் காய்க்க நாள் உள்ளது என்பதன் அறிகுறி. தெற்குக்கும் வடக்குக்கும் இப்பருவ வேறுபாடு இயற்கையானது. இதனால் தான் வட நாட்டுக்கு ஆண்டுப்பிறப்பு சித்திரையாகவும், தென்னகத் தொல்காப்பியர் காலத்தில் கார் (ஆவணி) முதலாகவும் கொள்ளப்பட்டன.

காலக் கணக்கீட்டில் ஆண்டுக்கு மணித்துளி அளவு மாறினும் பல்லாயிரம் ஆண்டுகளில் மாதக் கணக்கில் மாறுபட்டுவிடும். அந்நிலையில் கதிரின் செலவு தென்னெல்லை எய்தி வடக்காக மீளும் நாளே தை முதல் நாளே தமிழர் ஆண்டுப் பிறப்பெனத் தைப் பொங்கல் கொண்டாடலாயினர். இதனை எண்ண வைக்கிறது மாமரக் காட்சி!

28.03.2013

25.03.2013 எழுமூரில் 10.30.க்குச் சரியாகப் புறப்பட்ட சென்னை கௌவுகத்தி விரைவான், கௌவுகத்தியை எய்தவேண்டிய நேரம் 28 காலை விடியல் 4.55. நாங்கள் இறங்க வேண்டிய நிலையம் **இராமகயா** என்பது அதன் பொழுது 4.29. ஆனால் 4.24க்கே எய்திவிட்டது. அரைமணி முக்கால்மணி எனத்தாழ்த்து வந்த அது முந்துற வந்தது. அவர்கள் காலம் கருதிய அருமையது. பேரன்புச் செல்வர் சரவணனார் தம்வண்டி ஏந்துகளுடன் ஐந்து மணித்துளி அளவுள் எய்தினார். மகிழ்வின் நிறைவு அனைவருக்கும் புகுந்தது. **கட்டற்ற விடுதலை அல்லது வீடுபேறு பெற்ற பெருநிலை எய்தியவராய் ஐவரோடு அறுவராய் ஆனோம்!** ஒரு முகமாக மகிழ்ந்தோம்! "ஆறுமுகம் ஆன பொருள் நீ அருளல் வேண்டும்" என்ற அருணகிரியார் காட்சி என்னை ஆட் கொண்டது! ஒரு கால்மணிப் பொழுதளவில் சரவணர் உறையுளை உற்றோம்! 54 மணிநேரச் செலவின் ஐவர் அலுப்பும், சரவணரைக் கண்ட அளவில் - இல்லம் சேர்ந்து நீராடிய அளவில், கரைந்து போயது.

மண்ணைக் காட்டிலும் பரப்பும், நீரைக்காட்டிலும் ஆழமும், விண்ணைக்காட்டிலும் விரிவும் உடையது **அன்பு!** அவ்வன்பு உள்ள இடத்துப் பால்வேறுபாடு, பருவ வேறுபாடு முதலாம் எவ்வேறுபாடும் ஊடுபுகா உயர்வினது என்பதாக முந்தையர் கண்டனர்! என்றும் மெய்மமாம் அகப் பொருள் சிறப்பினது அது.

எடுத்துக் கொண்டுவந்த உணவு பண்டம் ஆகியவை தொடரிச் செலவு முழுமைக்கும் இருந்தது. எச்சமாகவும் இருந்தது. சிலர்க்கு வழங்கவும் இயன்றது. பண்டம் மேலும் பயன் கொள்ள இருந்தது. இந்நிலையில் குடிநீர் மட்டுமே சிறிதளவு தேவைப்பட்டது. அதுவும் பெருங்கலத்தில் கொண்டுவரப்பட்டது. சுற்றுலாத் திட்டம் உணவுக்கும் குடிப்புக்கும் நிலையங்களில் சுற்றிச் சுழல விடுதல் ஆகாது என வேலா இணையரும் முத்து இணையரும் தேர்ந்து தேர்ந்து திட்டமிட்ட வகையால் ஏற்பட்டது. யானோ என்னளவில் என்றும் என்னால் எடுத்துச் செல்லத்தக்க பையன்தான்! அதுவும் பருப்பு, பேரீச்சை, மாச்சில், சிறுபுட்டிநீர், வேண்டும் உடை. எழுதும் ஏடு, தாள் எழுதுகோல்கள் என்பவை மட்டுமே! உள்நாடு எனினும் வெளிநாடு எனினும் வேறுபாடு இல்லை. அச்சுமையும் என் சுமையாய் இருக்க உடன்வருவார் விடுதல் இல்லை! ஆதலால் சிக்கலற்ற செலவு – பணமும் தான்!

சரவணனார் உறைவு வளாகம் தோட்டம் தோப்புகளையுடைய இயற்கைச் சூழலது. பறவைகளைக் கண்டு மகிழலாம்; ஒலிகளைக் கேட்டு இன்புறலாம்; இயற்கைச் சூழலில் இருந்து இனிது உரையாடலாம். எல்லா ஏந்துகளும் உடையதாய் நலமும் தூய்மையும் எளிமையின் நிறைவும் அமைந்ததாய் இலங்குவது எனின் சாலும். காலை உணவை அறுவரும் ஒருங்கிருந்து உண்டு. இற்றைக் காலை பிரமபுத்திரா ஆற்றுப்படகுச் செலவு, தீவுக் கோயில் காணல் எனத் தீர்மானித்து 9.15 - மணிக்கு உந்தேறினோம். ஓரீரயிரத் தொலைவில் ஆற்றை அடுத்தோம்.

ஆறானால் ஆறு, அவ்வளவு அகன்ற ஆறு. அகன்ற காவிரியைத் தொட்டிலில் இட்டு ஆட்டும் குழந்தை ஆக்கிவிடும் அகல்வினது. அதன் மணல் நொய்ம்மணல். மற்றையாறுகளின் மணல் போல்வதன்று. ஏன் அந்த நொய்ம்மை! அவ்வளவு நெடிய தொலைவு – அத்தனை பாரிய நீர்ப்பெருக்கின் அலைப்பு – தேய்ப்பு – உராய்வு எல்லாம் தாங்கித் தவிட்டு

மணலாகியுள்ளது. சீன நாட்டு எல்லையில் இருந்து வருவது அவ்வாறாம். அது வங்கதேயம் வரை செல்வதாம். இனி நீளம் சொல்வானேன்! படகுத் துறைகள் பல. ஆனால் படைத்துறைப் படகு காப்பரணுடையது. அவர்கள் படகில் செல்லும் பேறு எளிதா?

அரியதை எளியதாக்கினார் சரவணர். சிறுபடகில் ஏறினோம். சற்றே தொலைவில் பெரும்படகு ஒன்று நின்றது. பொறி இயக்கப் படகு ஒன்றும் இருந்தது. அவற்றுள் பொறி இயக்கப் படகுப் பக்கம் சிறுபடகை நிறுத்தி மணல் மூட்டை நடை மேடைவழியே சென்று அமர்ந்தோம்! இல்லை! அமர்த்தினர்!

உள்ளே புகுந்ததும் வெள்ளக் காப்புச் சட்டை; படகு கவிழ்ந்தாலும் போகின்றவரும் கவிழ்ந்தாலும் உயிர்க் காவலோடு உய்ய அமைந்த காப்புடை அல்லது அமிழா மிதவைச் சட்டை! அதனை ஒவ்வொருவரும் அணிந்தோம்.

சிறுபடகு இயக்கமே வியப்புத் தந்தது. படகு தொட்டு, பொறிப் படகுக்குச் செல்லும் பகுதிவரையில் முளையடித்து வலிய கயிறு கட்டி அக்கயிற்றை இழுத்தல் வழியாய்ப் படகை நகர்த்திக் கரை சேர்ப்பது அது. அதன் வழியே சென்று மணல் மூட்டை நடை மேடை வழியே பொறிப்படகில் ஏறிச் செல்லுதல் ஆகிய நிலை. அப்பொறிப்படகு விரைவு மிக்கது. பதின்மர் அமரும் நிலையது. ஆற்றைக் கிழித்துக் கொண்டு ஓடியது. ஆற்றின் வலக்கரைப் பகுதியோ தொடர் மலை. இடக்கரைப் பகுதியோ குடியிருப்புகள். அனைத்தும் கூரை, தகர வீடுகள். வலிய கட்டடம் உயரக் கட்டடம் மாடி என்பவை இல்லை. ஏன்?

வெள்ளப் பெருக்கு அள்ளிப் போவது தொடர் இயற்கை! அதன் பட்டறிவுச் சான்று அது. ஐந்தாறு கல்தொலைவு சென்றால் தீவு – மலை – மலைமேல் கோயில்!

இடையே கௌகத்தி தொடரிப்பாலம்; இரும்பால் அமைக்கப்பட்டது. அப்பாலம் மேலே பேருந்து மகிழ்வுந்து முதலியவும் கீழே தொடரியும் செல்லும் வண்ணம் இரட்டை அடுக்குப்பாலம் ஆகும். அதன் வழியே தான் வைகறையில் சென்றோம். இப்பொழுது படகில் இருந்து அண்ணாந்து பார்த்து அகமகிழ்வு கொள்கிறோம்.

படகூர்தி சென்றது தீவுக்கோயில். அஃதொரு குறுமலை அல்லது சிறுகுன்று. நடந்து செல்லும் படிக்கட்டுகள் முப்பால் உண்டு. அவ்வந்நீர்த் துறைகளில் இருந்து வருவார்க்கு வாய்ப்பு அமைந்தது.

மலைமேல் உள்ளது இலங்கம்; சிவன் அமைந்தது. முருகன் பகுதி அனுமார் பகுதியும் உண்டு. பிரம்ம புத்திரன் எனப்பட்ட திருமால் இல்லாமல் இருப்பாரா? அக்கோயிலுக்குச் செல்லும் நீர்ச்செலவும், மலைமேல் ஏறி மற்றை மலைத் தொடர்களும் தொடர்தோறும் அடிவாரத் தமைந்த கட்டடங்களும் உயரத்தில் அமைக்கப்பட்ட கோயில் பகுதிகளும் கவின்மிக்கவை.

நீரோ தூயது; குளுமை மிக்கது. பனி அல்லவோ உருகி ஆற்றோட்டம் ஆகின்றது. ஆயினும் உச்சியில் அடிக்கும் வெயில், வெயில் தானே!

“வெயிலுக்கு ஏற்ற நிழலுண்டு” என்ற கவிமணி பாடல் போல்,

“வெயிலுக்கு ஏற்ற இளநீர் உண்டு” என்று சரவணர் வழங்கச் செய்த ஏற்பாடு சீரியது.

படகு சென்ற வழியில் மீண்டு புறப்பட்ட இடத்திற்கு வந்தது. ஆங்கிருந்த பெரும்படகைப் பார்த்தனர். அப்பகுதியில் கிடைத்த நந்தியா வட்டைப் பூவும் காயும் வயப்படுத்தின. நாலைந்து பாரிய படகுகள் ஆற்றின் கரைக்கு இப்பாலும் ஊருக்கு அப்பாலுமாகக் கல்லடுக்குத் தாங்கிமேல் நின்றன. வெள்ளப் பெருக்கானால் அப்பள்ளத்துப் படகுகள் மிதக்கும்; ஆற்றுள் செல்லும்; அலைவலைப்பட்டு அல்லல் படுவாரைக் காவல் கடனாற்றும்!

கல்லடுக்கு மேல் நிற்கிறதே படகு எனின், நீர்ப்பெருக்கானால், கல்லடுக்குக்கு மேலே, தானே மிதக்கும் மிதவை ஆகிவிடும் அல்லவா! பக்கத்தே மருத்துவமனை. எல்லாம் மாந்தன் காப்புணர்ச்சிதான். ஆனால் பத்துமுதல் பதினைந்து அடி உயரக்கரை – சரிவான கல்லடுக்கு – கன்மாப் பூச்சு என இருந்தும் ஊரை விழுங்கிச் சரவணனார் உறைவகம் வரை அண்மைக்கால வெள்ளம் வந்து விட்டதாம். தொடக்கத்திலேயே அவ்வெள்ளச் சேதம் பற்றி அறிந்தோமே! வள்ளுவம் நினைவில் எழுந்தது. அமைச்சுக்குக் கூறினார்.

“செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்”

என்றார். என்றது ஏட்டில் உண்டு! நாட்டுநடையில் உண்டா?

தேசியம் என்றார்; இமயம் தொட்டுக் குமரிவரை ஒரு நாடு என்றார். இந்தி மட்டுமே தேசிய மொழிஎன்றார்! அவ்வந் நாட்டு இன மொழிகளின் வாழ்வை - வளர்வை - வளத்தை ஒடுக்கினார்!

ஆறு நாட்டுடைமை என்றார்! கங்கை காவிரி இணைப்பு என்றார்!

அண்டை மாநில நீரையும் சொட்டளவும் விட மாட்டோம் என்பதற்கும் ஒப்புக் கொண்டு தமிழ் மண்ணைக் காவு வாங்கினார்!

"வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது" என்றவர் வாய்கிழியப் பேசி ஆட்சிக் கட்டில் ஏறினார். முழுவதும் வடக்குக்கு அடிமையாய் முடங்கிப் போனார்!

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்றவர் எங்கும் ஆங்கிலம், எங்கும் இந்தி என்பதை ஒப்புக்கொண்டு கைகுலுக்கும் கைகாரராகி விட்டார்!

இந்திய ஒருமையாம்: மாநில அரசை ஒடுக்குதல் குறிப்பாகத் தமிழகத்தைத் தலையெடுக்காமல் பார்த்துக் கொள்ளல் ஒருமை அறமாம்!

இந்த எண்ணம் இங்கு வருவானேன்?

காவிரி உரிமையைக் கண்டு கொள்ளாத நடுவண் அரசா கங்கை - காவிரி - இணைப்புச் செய்யும்! மூன்று மணிப் பொழுதுச் சிற்றுலா இது. சுற்றுலாவுள் சிற்றுலா. பகல் 12.15 -க்கு உறைவிடம் எய்தினோம்.

மாலை 5 மணிக்குமேல் **சுவால்குச்சி** (Sualkuchi) என்னும் புகழ்மிக்க கலைக் கூடத்தைக் கண்டோம். அப்பகுதியே நூற்பகம், நெசவகம், விற்பனையகம் என்பவை பெருக்கமானது. அந்நிலையை மிகச் சிறப்பாக விளக்கிக் காட்டும் கலைக் கூடமாகத் திகழ்ந்தது. அதனொடு அப்பகுதி மக்கள் வாழ்க்கை ஓவியமாகவும் திகழ்ந்தது.

நுழைவாயில் வளைவே "உள்ளேவா!" "கலைவளம் காண வா" என அழைப்பது போல் இருபால் காட்சிகளும் விளங்கின.

நுழைவாயில் இடப்பால் ஒரு பெருமரம். அதில் ஓவியச் சிற்பங்கள் பலப்பல. வலப்பால் காளான் குடைகள் சில. இரண்டுமே வனப்புக் கொள்ளை.

உள்ளே நுழைந்தால் கோலி ஆட்டக் காட்சி. நம் முன் மெய்யாக விளையாடுவாராக அல்லாமல் சிற்பங்கள் எனத் தோன்றார். கோலி வைத்து விரலை வளைத்து அடிப்பவன் கூர்மை, அவன் முன் அவன் கோலி அடிப்பை நோக்குபவன் பார்வை, நகை முகச் சிறப்பு அப்படியே நம்மை ஒட்டிக் கொள்ள ஒருவன் நிற்கும் நிலை, இன்னொருவன் அமர்ந்த நிலை. எல்லாமும் உண்மைத் தோற்றமே வழங்கின. காட்சிக் கூட முகப்பில் நிற்கும் நாய் ஒன்று; படுத்துக் கிடக்கும் நாய் ஒன்று. அச்சம் உடையார் அருகில் செல்ல அஞ்சவே செய்வர். அவ்வளவு தோற்றப் பொலிவு.

அடுப்பில் சமையல் செய்யும் ஒரு பெண் காட்சி, நூற்பவன், நெய்பவன், கண்டு சுற்றல், இராட்டை, தறி என்பவை எல்லாம் மெய்மறக்கச் செய்கின்றன. ஒரு பசு கன்றை நோக்கிப் பார்க்கும் பார்வை, அதன் வாயொடு வளைந்து சுருண்ட நாக்கு, பால் குடிக்க நிற்கும் கன்று; ஓர் ஆடு, அதன் குட்டிகள் இரண்டு என்பவை எல்லாம் தனித்தனிப் பகுதி வனப்புகள். எதிர் எதிர் மகளிர் இருவர் இருந்து பின்னல் வேலை செய்தல், ஓர் ஆடவன் முன் ஒரு பெண் வெற்றிலை உரல் அல்லது இடி உரல் வைத்து அமர்ந்து இடிக்கும் காட்சி, அருமையான குடிசை ஓவியம், நெல் இடிக்கும் மிதி பொறி, முறம், புடைப்பவள் அப்படியே! நம்பாமல் தீராத ஆலமரம் பரிய அடி கிளை இலைச் செறிவு எல்லாம் அமைந்தவை. இவையெல்லாம் காட்சியாக உள்ளால் அமைந்தவை.

வெளியே வந்தால் மாடுகள் இரண்டு, மீன் பிடிக்கத் தூண்டில் போடுபவன், பறவை பிடிக்க முயல்பவன் என்பவை காண்கின்றன.

குழந்தைகள் விளையாடத் தக்க பல வகைக் களங்கள், தூங்கலாட, சறுக்கி விளையாட என்பவை முதலாக அமைந்தவை.

கற்சிற்பங்கள் இவை என எண்ணினால் அங்கும் ஏமாற்றமே! அனைத்துச் சிற்பங்களும் கன்மாக் கொண்டு செய்தவை. மாறா வண்ணங்கள் காட்டி மயக்கத் தேர்ந்த செய்நேர்த்தி, பன்முறை காணினும் மீளக் காணத் தூண்டும் எழில் கொண்டது அச் சிற்பக் கூடம். பெரிய வளாகம். கட்டப் பகுதிகளிலும் மற்றைப்பகுதிகளே விரிந்தவை. சிற்பமும் ஓவியமும் ஒன்றை ஒன்று விஞ்சுவன.

ஒரு மணி நேரத்திற்கு மேல் செலவிட்டுக் கண்டு பின்னர் சீலை, துண்டு முதலியவை விற்கும் அங்காடி, அப்பொருள்களை உருவாக்கும் தறிக்கூடம் ஆயவற்றைக் கண்டோம்! எல்லாமுமாக நான்குமணியளவு நேரம் கண்டு மீண்டோம். பழங்காட்சிகள் அல்ல! புதியதாக உருவாக்கப் பட்ட காட்சிகளே! அப்பகுதி வளங்காட்டுவனவே என உணர முடிந்தது.

தமிழகக் கலைச் செல்வங்களொடு ஒப்பிட இயலாது. ஏனெனில் கன்மா வேலை அது; கல் வேலை தமிழக வேலை! அதன் பழமையும் இன்றும் வழங்கும் எழிலும் எடுத்தியம்ப இயலாப் பெருமையவை. வட நாட்டில் கோடி கோடியாகச் செலவிட்டுக் கட்டிய பளிங்குக் கோயில்களை நோக்கும் போது பளிச்சிடும் **பொருட்காட்சிக்கும்,** மெய்யான உணர்வில் வடிக்கப்பட்ட தீட்டப்பட்ட இக்கலைக் காட்சிக்கும் உள்ள வனப்பு, மடுவும் மலையும் ஒப்பனவாம்.

29.03.2013

விடியலே எழுந்தேன். திரு. முத்துவும் எழுந்து தம் வழக்கமான பயிற்சி மேற்கொண்டிருந்தார். யான் கடன்களை முடித்து நீராடினேன். வேலா நீராடச் சென்றார்.

ஏறத்தாழ அரைமணி நேரம் சித்த மருத்துவம், ஒல்லியல் மருத்துவம் அல்லியல் மருத்துவம், மனநோய், பொருந்தாமணம் என்பவை பற்றி நிறைவாகக் கலந்துரையாடினோம். இன்றை விடிவே நல்விடிவு ஆனது. தூண்டித் துலக்கும் இயற்கையோடியைந்த உண்மை காண்பதொன்றே உள்ளீடாகிய உரையாடல் பயன், பல்வேறு நூற்கல்வியினும், பல பொழிவுகளைக் கேட்டலினும் கிட்டாநலம் செய்வதாம். அதிலும் பட்டறிவுடன் கூடிய உரையாடல் சிறப்போ தனிச்சிறப்பாம். கலந்துரையாடல் போலக் கலக்கம் ஒழிப்பதும் கலகம் ஒழிப்பதும் கல்வி நலம் ஆக்குவதும் களிப்புறுத்துவதும் ஒட்டி உறைந்து உவக்கச் செய்வதும் பிறிதொன்றில்லை. தமிழர் வாழ்வில் கலந்து இருந்து கூடி உவந்து உண்ணலும் உரையாடலும் குடும்பப் பழக்கம் ஆகிவிடின், அடி மூலநலமாக நாடு சிறக்கும் என்பது தெளிவாம்.

காலை உணவின் பின் **சில்லாங்கு** செல்வதாகத் திட்டம். அவ்வாறே எட்டுமணியளவில் புறப்பட்டோம் 28-விடியலில் தொடரி வழியே பிரம்புத்திரா பாலம் கடந்தோம். முற்பகலில் படகில் அதே ஆற்றுச்

செலவின் போது கீழே தொடரிச் சாலையும், மேலே மற்றைப் போக்குவரத்துச் சாலையும் என இரட்டைச் சாலையாக அமைந்திருந்தமையைக் கண்டோம். இன்று காலையில் மேலேயுள்ள போக்குவரவுச்சாலை வழியே சென்றோம்!

நயாகரா நீர்வீழ்ச்சியை வான்வழியே பார்த்தோம். படகு வழியும் பார்த்தோம்; சுரங்க வழியும் பார்த்தோம். இயல்பாக நிலமட்டத்தில் இருந்தும் பார்த்து மகிழ்ந்தோம். அவ்வெண்ணம் என் உள்ளத்துக் கிளர்ந்தது.

ஒரு காகம் இக்கரையில் இருந்து அக்கரைவரை எய்க்காமல் பறந்தமை கம்பர் 'கடல் தாவுபடல' எண்ணத்தை உண்டாக்கியது. அவ்வளவு விரிந்த ஆற்றை இடையமர்தல் இல்லாமல் பறந்தமையை வியவாமல் முடியாது. அதனினும் பதின் மடங்குக்கு மேற்பட்ட அகல்வு உடையதாம் பிரமபுத்திரா.

ஆற்றைக் கடந்தபின் எழில் மிக்க பரப்பமைந்த வளாகம் ஒன்று எய்தியது. **பாலாசி கோயில்** அது. அதன் தூய்மை வயப்படுத்தியது. பல பகுதிகளையுடைய புதிய கோயில் அது. தமிழகக் கோயில்கள் இருண்டு குறுகிக் கிடப்பவை எனினும், சிதைவுற்றும் வௌவால் வாழ்வு இடமாய் இருப்பவை எனினும் அவற்றின் உட்புகுந்து விட்டால் எவ்வளவு நெடிவாடை இருப்பினும், சிற்பங்கள் கொள்ளை கொள்ளும். அந்த அகப் பேறு இல்லாத பளிச்சீட்டுக் கோயில்கள்! பலர் பிழைக்கப் பல திருமேனிகள் - கிளைச்சிறு கோயில்கள்! அதனைக் கண்டு செலவைத் தொடர்ந்தோம். செல்லும் வழியில் 'மூங்கில் வீடு' என்னுமாறு சுவரும் கதவும் சுற்றும் மூங்கில் பிளாச்சுகளைக் கொண்டே அமைந்தவை. வரும் வழியோ காடுகள் மேடு பள்ளம் வளைவு; வளைவின் மேல் வளைவு! பலர்க்குத் தலை சுற்றி மயக்கம் ஏற்படுத்த வல்ல வழி! மலைகள் என்றால் கல்மலை, கருமலை, பாறை, குன்று என்பவை இல்லை!

பெரிதும் மண்மலை! மண் எப்படி? படை படையாயும், பக்கம் பக்கமாயும் ஐவண்ணக் கிளியா, மயிலா, வானவில்லா என வியக்க வெள்ளை, சிவப்பு, பழுப்பு, காவி, சாம்பல் நிறங்கள் வரிசை கட்டிக் கோத்து நிற்கின்றன. கரிசல், செவல், பொட்டல் எனப்பகுத்துக் காண்போமே தமிழக நிலத்தை!

கருமலை, சிப்பிப்பாறை, செம்மலை, சங்கமலை எனக் காண்போமே மலையை! அப்படிப் பிரித்துக் காணமுடியா வண்ண அடுக்கு மண்மலை!

மரங்கள் உயரமானவை செறிவானவை; ஆனால் பழப்பயன் உடையவையா? அவ்வாறு தோன்றவில்லை! மண்மலை ஆதலால், மழைநீர் வடிவால் வரிகள் எங்கும் உள்ளன. மலைமேல் வீடுகளுக்குப் படியேற அமைத்தவை. மண்ணையே படியாக்கிக் கொண்ட காட்சியே மிகுதி.

சாலையோரக் கடைகளே நாம் நம் மண்ணில் காண்போம். நால்வழிச்சாலை இடங்களில் இடை நடுவே நான்கு குச்சிகள் அதன்மேல் ஒரு பலகை. பலகைமேல் விற்பனைப் பொருள்! விற்கும் பெண் மணி! போய்வரும் வண்டியில் இருந்து இறங்காமலே வேண்டுவ வாங்கிக் கொள்ளும் காட்சி!

சாலையின் ஒரு பகுதியில் மலை; அதன் எதிர் படுபள்ளத்தாக்கு; சில இடங்களில் இருபாலும் மலை! ஊடே பாம்பு நெளிவெனச் செல்லும் சாலை! ஒத்த தளம் காணல் அரிது.

சில்லாங்கு ஏரி சாலையை ஒட்டியது. படகுத் துறையுடையது. படைத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ளது. திரு. சரவணர் உடன் இருந்தமையாலும் முன்னரே ஏற்பாடு செய்திருந்தமையாலும் அவ்வேரியில் சென்ற படகு உலா, சுற்றுலாவில் அமைந்த சிற்றுலா ஆயது. நாற்புறமும் மலையும் செறிமரக் காடுகளும்; ஊடே பளிங்கு நீர் மேல் படகு மிதப்பு! வானக்கடலில் அரைமதி உலாக் கொண்டது போல் எழிலுடைய தாயிற்று! நீலக்காட்சி! நீர்ப்பரப்பு! நீள அகலப் பரப்பு! செல்லும் விரைவு எல்லாம் எல்லாம்! தூத்துக்குடி போலும் இடங்களில் செல்லுங்கால் பக்கம் பக்கமாகக் குமிழ் எழுப்பியும் அலையடித்தும் வால்வீசியும் பிறழ்ந்தும் நீர் மேல் எழுந்து குதித்தும் காணும் வரால், திமிங்கிலம், சுறா மீன்களைப் போல் காண முடியவில்லை.

நீர்க் கோழிகள், நீர்த்தாராக்கள் சில, நீர் மட்டத்தில் அலைகிளத்திச் செல்வதைக் காண முடிந்தது. பிரம்மபுத்திரா ஆற்றுச் செலவுப் படகு இன்பம் தந்தது என்றால். சில்லாங் ஏரிப் படகுச் செலவு களிப்புக் கடலாக்கியது! அங்கேபோல் மணல்மூட்டை நடைமேடை இல்லை. இயல்பாகச் செல்லவாய்த்த மரப்பலகை மேடை. ஆதலால், ஏற இறங்கத் தொல்லை சிறிதும் இல்லை.

படகுச் செலவு முடித்து மேலே வந்தால் சுவையான குளம்பி – தேநீர்! அறுவரில் யான் ஒருவனே குளம்பிக் குடியன்! கூட்டுக்காகக் கூடக் குளம்பி தேநீர் குடியா இயற்கைக் குடியர் மற்றையர் எனினும் எனக்காக அம்மையார் இருவரும் ஒத்துப் போயினர். தேநீர் பருகினர், சரவணர் பருகினார். வேலா, முத்து குடியா நோன்பராகவே இருந்தனர். மகிழ்வாகப் படகுத் துறையினரிடம் நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டு செலவைத் தொடர்ந்தோம். ஏறத்தாழ 25 கல் தொலைவில் சில்லாங்கு. முன்னரே உறைவிடம் ஏற்பாடு செய்திருந்தாலும் மேடு பள்ளம் வளைவு குறுக்கு எனத் தெருக்கள் இருந்தமையால் வினவி வினவியே உரிய இடம் சேர முடிந்தது. உரிய விடுதியைப் பகல் ஒரு மணி அளவில் சேர்ந்தோம். நண்பகல் உணவு கொண்டோம். மாலைச் சுற்றுத் தொடர்ந்தது.

மாலையில் சென்ற இடம் யானை அருவி என்பது. அது மூன்று அருவி நிலைகளாக வெவ்வேறு இடங்களில் மேலேயும், இடையேயும், ஆழ் கீழேயும் அமைந்துள்ளன.

குற்றால அருவிகளில் சிறிய சிற்றருவி ஒப்பவும் இல்லாதவை! "குற்றாலக் கோழியின் முக்குஞ்சுகள் மூன்று இடங்களில் உள" என்னுமாறு அமைந்தவை. அருவி ஆடுதற்கு அமையாது. பார்வையிடலே பயனாம். மூன்றாம் அடித்தள அருவி பாவ நாசச் சரளையாற்று வழியில் சலசலத் தோடும் நீருள் ஒரு சிறு சலசலப்பு! நீரோட்டத்தில் இறங்கி நீராட வாய்க்கும் அவ்வளவே!

ஆயினும் வழியமைப்பு – படிக்கட்டு – இயற்கைச் செறிவு – ஆழ்ந்து ஆழ்ந்து செல்லும் காட்சி வனப்பு – சுழல் பாதை – மக்கள் வெள்ளம் – இளமைத் துள்ளல் – உள்ளம் அள்ளிக் கொள்கிறது! அவ்வுலாவை நோக்கி அமைக்கப்பட்ட மேல்தளக் கடைகள்! விற்பனையகங்கள்! தேநீர் நிலையங்கள் கிளர்ந்துள! படிந்தாட வாயா அருவி – பார்த்துவக்க வாய்த்த அருவி என அமையலாம்! 1885 இல் கண்ட அருவியாம் அது.

மேலே வந்து சிறிது தொலைவில் வான்படைக்காட்சி வளாகம்! சீனப்போர், பாகித்தான் போர் ஆயவற்றில் பயன்படுத்தப்பட்ட ஊர்திகள், குண்டு வகைகள், வான்படை வலவர் படங்கள் – விருது பெற்றோர், விருதுகள், ஏறிக்காணும் ஊர்தி என்பவற்றுடன் பொதுக் காட்சிப் பொருள்கள், விற்பனை அங்காடி என்பனவும் கொண்ட பகுதி! இவற்றைக் கண்டு வெளியேறும் போது ஏறத்தாழ மாலை 5 மணி! குளிர்

என்னளவில் மிகுந்தது. ஆயினும், விழிப்புடன் வெப்புடை கொண்டு சென்றமை பயனாயிற்று. மீளவும் விடுதி எய்தினோம். மேலும் கீழுமாக ஈரறைகள்! மேலே மூவர். கீழே மூவர்! பாரிய கட்டில் மூவர் இயல்பாகப் படுக்க முடியும். ஒருவரை ஒருவர் போட்டியிட்டு வேறாக இருக்கைக் கட்டிலில் படுத்து, இருவர் படுக்கலாம் என்னும் போட்டியில் முந்துகின்ற யான் தள்ளப்பட்டுத் தோற்றுப்போக, எவருக்காக இருவர் படுக்கையாக்க எண்ணினோமோ **அச் சரவணரே** யானறியா வகையில் அவ்விருக்கைப் படுக்கை சென்று விட்டமையைப் பின்னே அறிந்தேன்! உணர்ந்தேன்! **முதலாழ்வார் மூவர்** என்னுள் ஆயினர்.

சிற்றிடம்; **பொய்கையார்** படுத்துள்ளார். அடை மழை; ஒருவர் கதவைத் தட்டுகிறார். உள்ளே இருந்து குரல் வருகிறது. ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம் என்பது அது. பூதத்தார் உட்சென்று இருவராய் இருந்தனர். பின்னரும் ஒருவர் கைதட்டல்; மழை கொட்டுகிறது; இடம் உண்டோ என்பது; ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்! **பேயார்** புகுந்தார்; மூவரும் நின்றனர்; நின்றபின்னர் முதற்கண் இருந்த நெருக்கத்தினும் நெருக்கடி மிக்க தாயிற்று! சிறிய ஆள் அல்லர்; பெரிய ஆள்! ஆம்! பெருமாள்! உடன் இருந்தார்!

நடையா? கதையா? எதுவாயின் என்ன?

ஒருவருக்காக - ஒருவர் உளப்பட்டு - ஒருப்பட்டு, உதவினால் அவ்விடம் - அவ்வுளம் - இறையுறை நிலையம்! இதனைச் **சரவணர் மெய்ப்பித்தார்.**

சரவணர் பற்றிய, புனைவு அறுவர் ஒருவர் ஆயது. அவர் முருகர்! இதனை நடைமுறைக் காட்சியாக்கினார் நம் சரவணர். பண்பாட்டுக் கதைகள் வாழ்வியல் பெட்டகங்கள்! பாட்டன் தீட்டிய ஆவணங்கள்! ஆழ்வார்கள் கண்ட மெய்யியல் இறைமை. விவேகானந்தரால் பாராட்டுப் பெற்ற பான்மையது. பிற்கால இராமாநுசர் மாந்த ஒருமை நேயர் - ஆன்ம நேயர் என்பதைத் தம் வாழ்வால் மெய்ப்பித்தவர். பின்னை மாலியச் சமய வெறியரோ தென்கலை - வடகலைப் போராட்டக் களத்தராக இன்றும் நிற்கின்றனர்!

எண்ணினேன்! ஏங்கினேன்! எங்கள் அறுவருக்கும் அறுவர் தாயர்! அறுவர் தந்தையர் - மக்கள்! ஆனால் ஒருவராக - ஒருவருக்கு ஒருவராக இருக்க எப்படி முடிகிறது. ஒரு நாள் இருநாள்களா? புதுவை வேலா கலை

நிதியர் தொடர்பு 35 ஆண்டுகள். பின்னே சரவணர் - பின்னே முத்தர் இணை! பண்டைக் கூட்டுக்குடும்ப உயர்வு இன்றும் கைகூட வாய்ப்புண்டு என்பதன் சான்று என்பேன்.

இனி, தங்கல் விடுதி இருக்கை, மேடை, கட்டில், நிலைப்பேழை, கண்ணாடிச் சட்டம் என்பவை எல்லாம் ஒருமைப்பாட்டின! அமைப்பால் வேறு வேறு! பொருளால் **மூங்கில் ஒன்று மட்டுமே.** இவற்றை ஒருமைப்பட்டு நிற்கச் செய்யும் மாந்தன், ஒன்று பட்டு நிற்கக் கூடாதா? என வினவாமல் வினவும் வினா இது. ஓதாக்கலை என்பது இதுதானே!

30.03.2013

நாங்கள் **மேகாலயா** மாநிலத் தலைநகராம் சில்லாங்கில் பொறிஞர் அலுவலர் விடுதியில் தங்கியிருந்தோம். (Engineers officer's mess) காலை உணவை முடித்து 8.15 அளவில் உலகப் புகழ் வாய்ந்ததும் காண வேண்டுமெனப் பெரிதும் விரும்பியிருந்ததுமாம் **சிரபுஞ்சி! சேரபுஞ்சியோ!** இந்தியக் கண்டத்திலேயே மிகுமழைப் பொழிவுடைய இடம் அல்லவோ அது!

செல்லும் வழியில் நகரின் ஒரு சாலைத் திருப்ப வளைவில் **தோன்போசுக் கோவின்** சிலை ஒன்றைக் கண்டேன். அவர் மட்டும் இல்லை. இப்பாலும் அப்பாலும் சிறுவர் இருவர்! அவர்தம் பரிவு நோக்கும், சிறுவர் புரிவு நோக்கும் புலப்பட்டன. கிறித்தவம் இப்பரிவுத் தொண்டால் தானே புரிவாக விளங்கிப் பரவியது! இந்து சமயம் - சிவனியம் - மாலியம் - என்பவர், இப்பரிவுத் தொண்டைப் புரிந்தனரா? புரிந்து கொண்ட அப்பரடிகள் தொண்டையாவது புரிந்து கொண்டு செயல்பட்டனரா? இன்றும் தான் என்ன? வெறிக்கும்பல் கூட்டுவதற்குத் தானே எல்லாச் சமயங்களும் தலை நிமிர்கின்றன. அன்று செய்த கிறித்தவத் தொண்டும் பொருள் வலையில் - சாதிக் கூட்டில் - சிக்கிக் கொண்ட தல்லவோ! இல்லை என்றால் மொழி ஞாயிறு பாவாணர், "கிறித்தவர்கள் பின்பற்ற வேண்டுமென்றால் கிறித்துவைப் பின்பற்ற வேண்டும். கிறித்தவரைப் பின்பற்றல் ஆகாது" எனத் தாம் இயற்றிய கிறித்தவக் கீர்த்தன முன்னுரையில் வரைய நேர்ந்திருக்குமா?

இயற்கைச் சிரபுஞ்சியை நினைத்துப் புறப்படும் போது இவ்வெண்ணம் வருவானேன். மாந்தர் ஒவ்வொருவர் உள்ளத்தும் சிரபுஞ்சி உண்டு -

அமுத சுரபி உண்டு. உண்டு என்று உணர்ந்தார் அரியர். உணர்ந்தாலும் உணர்ந்தபடி தொண்டால் விளங்குபவர் அரியருள் அரியர் ஆயினர்! அதனால் தான் இவ்வெண்ணம் அரும்பிற்றாம்.

செல்லும் வழியெல்லாம் மரச் செறிவு; மண்மலை நிறமே புலப்படாச் செறிவு! உயரமோ மிகுதி; பள்ளத்தாக்கோ அதனைப் போல் இருமடங்கு மும்மடங்கு கூடியது. வெண்முகில் படலம் பச்சைப் போர்வையின் மேல் வெண்போர்வை போர்த்தி மறைத்த எழில்! எத்தனை ஆயிரம் வளைவு! நூறடித் தொலைவாவது நேர்சாலை உண்டா?

பச்சைப் பசுங்காடு; மண்ணோ பல்வண்ணம்; கருவண்ண மண் மட்டும் காணவில்லை என எண்ணினால் அதுவும் பொய்த்தது. நிலக்கரி நிறம் போலவே மண் பாறை! எடுத்தால் கனமே இல்லை! நிலக்கரியின் கனம் தானும் இல்லாத நொய்மையது. மஞ்சள், சிவப்பு, காவி, சாம்பல் மண்ணைக் குடைய இக்கரிமண்!

தனியே எடுத்துத் தரம் பிரித்துப் பல்வகைப்படுத்துகின்றனர். தனியே திட்டுத் திட்டாகக் கரும்பாறை காணற்குக் குறைவு இல்லை!

சிரபுஞ்சி எழிலை என்ன சொல்வது? தேன் சுவையானது என்பது போன்றதே! கண்டார்க்கே - 'கைபுனைந்தியற்றாக் கவின்பெருவனப்பு' என்ற முருகின் அருமை புரியும். அகன்றபரப்பில் இருந்து வழியும் அருவியும் உண்டு.

இனி, ஏறத்தாழ மூவாயிர அடி உயரத்தின்மேல் நிற்கும் நமக்கு அதற்கு மேல் ஆயிரம் ஆயிரம் அடியாய் நிமிர்ந்து முகடமைந்த மலைச்சாரல் குளுமை எப்படி இருக்கும்? சுட்டெரிக்கும் கோடை இக்காலம்! இக்காலத்திலேயே நீரும் குளுமை - நிழலும் குளுமை - காற்றும் குளுமை இவ்வளவு மட்டுமா வெயிலும் குளுமை! கொள்ளையோ கொள்ளைப் பசுமை!

சிரபுஞ்சிப் பகுதியை நின்று பறவைப் பார்வையாய்ப் பார்க்கும் இடம் உண்டு! அங்கு நின்று பார்க்கும் போது யானை போல் இருப்பவரும் சிற்றெறும்பினும் சிற்றெறும்பாய் ஆகிவிடுவார்.

சிரபுஞ்சியைப் பார்ப்பது போல் வங்கதேசம் காணவும் வாய்ப்பான பகுதியைக் கண்டோம். எல்லாம் மலைத்தொடர்பு பள்ளத்தாக்குகளே எனினும் பெருநகரக்காட்சி தொலைவில் வழங்கியது.

மிகப்பரப்பான விளையாட்டரங்கம் கண்டோம். அங்கேயே நண்பகல் உணவு உண்டோம்; அதன் பின்னர்க் **கண்ட குகைக்காட்சி** எங்களை **நெளியவைத்தது; குனியவைத்தது; தவழ வைத்தது; சறுக்க வைத்தது; நிமிரவும் வைத்தது.** ஒரு படைச்சால் அளவுக்கு மேற்பட்ட நீளமானது. ஆங்காங்கு வெளிச்சம் இருப்பினும் சரளைக்கல், பளிக்குக்கல், வழுவழுப்புக்கல், உருளைக்கல், பல்கோணக் குத்துக் கல், படுக்கைக்கல், அடிக்கு அடி வளைவு மேற்பாறை பக்கப்பாறைகளில் இடிபடாமல் முட்டிக் கொள்ளாமல் கால்தட்டி விழாமல் செல்வது பெரும்பாடு தான்! எனினும் என்ன? முன்னே சரவணர்! பின்னே முத்தர்! இருவரே காலும் கையும் கண்ணொளியுமாக வாய்த்த வாய்ப்பால் எச்சிறு இடரும் இன்னலும் இல்லாமல் வெளி ஒளி காண வாய்த்தது. மகவு முகம் கண்டதும் மகப் பேற்றுத் துயரைப் பற்றியன எல்லாம் மறப்பது போல வெளி ஒளி முகம் கண்டதும் பட்டதுயர் பறந்தது.

சிரபுஞ்சியைப் பார்த்தால் தான் எழிலின் இருக்கை புலப்படுவது போல 'மாய்சன் ராம்' (Mawsyanram) என்னும் குகைச் செலவுப் பாடும் புகுந்துவந்தால்தான் புலப்படும்! வெளியேறியபின் படிகள் எத்தனை எனினும் என்ன? முன்னிடமும் குகையும் பின்னிடமும் ஒன்றரைக் கல்தொலைவு என்றனர். சில்லாங்கில் இருந்து 56 கல் தொலைவினது அது **தங்க ராங் பார்க்** (Thangharang Park) என்னும் பூங்காவைக் கண்டோம். பூங்காவின் கவர்ச்சிக்கு எனப் போக வேண்டியது இல்லை! நாற்புற மலைகளையும் பள்ளத் தாக்குகளையும் முகில் தவழ்வையும் கண்டு களிப்புற வாய்த்த இடம் அது.

வரிவரியாக வண்ணம் மாறித் தோன்றும் அடுக்கடுக்கு மலை பொலிவும், மழை நாளில் வழிந்து வரும் பெரிய ஆற்று நீர் வரியும், வெண்மதியின் ஒளி இறங்கிப் பசுமைக்கு ஊடே ஒழுகுவது போல வெள்ளிய குறுவரிக் காட்சியும் கண்டு மகிழ வாய்த்தது.

ஒரு பெருமரத்தின் வேரே நாற்பது ஐம்பது அடி நீளப் பாலமாக அமைந்து இப்பாலும் அப்பாலும் ஆகித் திகழ்வதாகக் கேள்விப் பட்டுப் பார்க்க விரும்பியும் பொழுது போயதும், குளிர்ப் பெருக்கும், நடைச் செலவு அலுப்பும் தடையாய் நின்றமையால் தங்குமிடம் எய்தினோம். அப்பொழுது, நேரம் 8.15. சரியாகப் பன்னிரண்டு மணிப்பொழுது!

'சிரபுஞ்சியும்', 'குகை'யும் என்றும் அகலாதவையாக அமையும் காட்சிகள்! செறிந்த காடுகள் பல கண்டிருந்தாலும் குகைகள் பல கண்டிருந்தாலும் இவை தனித்து நிற்பனவாம்!

சில குறிப்புகள்:

- **தேவதாரு** என்னும் மரம் வானளாவிய உயரம் உடையது. கிளைகள் அற்றது. வான் கோழி எனப்படுவது போல வானளாவிய மரம் தேவதாரு எனப்பட்டது.
- தேவர் - விண்ணவர் மேலோர்; தரு-தன்னை முழுவதாகத் தருவது தரு; தாரு. இம்மரம் பத்தடி நீளத்துள் எட்டு பத்து மரங்கள் வரிசையாய் நிற்கின்றன. முன்பின் நிற்பன கனமிக்கதாகவும் உள. காசுமீர், சீர் நகர்ப் பகுதியில் மிகக் காணப்படுவன இங்கும் உள.
- பூவரச இலைபோலும் இலையுடைய குறுமரம். அதன் அரும்பு தட்டை வடிவினது. பூவாகும் என நினைவோம். ஆனால் அதன் பொதியரும்பு முற்றிப் பிளக்கப் பல இலைகள் கூடியனவாகத் தளிர்க்கின்றன. அரிய தோற்றமும் நிறைந்த எண்ணிக்கையும் உடையது. தகட்டுப்பூவரசு எனப் பெயர் சூட்டலாம்.
- சேரலத்தார் மூங்கில் பயன்படுத்தம் மிகுதி. அதனினும் வெல்லும் பயன்பாட்டில் அசாம், மேகாலயாவில் உண்டு. செயற்கரிய காட்சிப் பொருள்களைச் செய்து கவின் கலைப் பொருள்கள் ஆக்குகின்றனர். வீட்டுக்கு ஆகும் பயன்பொருள்களும் வீடும் அதனைக் கொண்டே ஆக்கப்படுகின்றன. கீழ்த் தூண்களும் மாடித் தூண்களும் பல மூங்கில்களை ஒன்றிணைத்து வட்டமாகவோ சதுரமாகாவோ ஆக்கிக் கல், செங்கல், கல்மா வேலையை அகற்றுகின்றனர்.
- மணல் என ஆற்றில் அள்ளாமல் பாறைப் பொடிகளே மணற்பயன், மண்பயன் ஆகச் சாலைக்கும் கட்டுமானச் சுவர்க்கும் கொள்கின்றனர்.
- தெருக்கள் சாலைகள் ஆயவற்றில் ஆடு மாடுகள் நாய்கள் இயல்பாகத் திரிகின்றன. வளைவுச் சாலையில் அவ்வாறு திரிவது இடர் ஆக்க ஏதுவானவை.
- குகைச் செலவு, முழுமையாக ஒரு குறளுக்குப் புதுப் பொருள்காணத் தூண்டியது.

அக்குறள்:

"முதல் இலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை" என்பது

முதல் கைமுதல், பை முதல், உடைமை முதல் என்பவற்றுக்கு மூலமாம் 'உடல்' பொருளும் தரும். இலக்கணர் முதலாகு பெயர், சினையாகு பெயர் என எண்ணுதலை நோக்கின் தெளிவாம்.

உடலாகிய முதல் இல்லார்க்கு அதன் பயனாம் உயிர்மை - உயர்மைப் பயன்கள் எவையும் இல்லை. தாங்கும் சார்பிலார் தமக்கோ வாழ்நாள் முதலாம் உடலுக்கு எந்நிலை பேறும் இல்லை என்பது இதன் பொருளாம். ஏன் இக்குறள் தோன்றியது குகையில்! வெளிச்சம் குன்றல், எதிரொளி, வழுக்குக்கல், உயரத் தாழ்வு, அடிக்கு அடி பாறைத் தொங்கல் மேடு பள்ளம் வளைவு உருளைக் கல் கூர்ந்து நிமிர்கல் என்பவற்றை நிமிர்ந்தும் குனிந்தும் தவழ்ந்தும் இடரின்றிக் கடந்து உடலையும் உயிரையும் பேணிக் கொள்ள நற்சார்பாக முற்சார்பும் பிற்சார்புமாக நின்றவர் சரவணரும் முத்தரும் அல்லரோ!

குறளுக்குச் சொல்லுக்குச் சொல் காணின் இந்நேர்ச்சிக் காவல் உரை கிட்டுமா? பட்டறிவு இல்லாமல் பளிச்சீட்டு உரை குறளுக்குக் காண முடியாது என்னும் என் நான்காம் விதி மெய்ப்பாயது.

முதல்விதி : திருக்குறளுக்குச் செவ்வியல் உரை காணத் தொல்காப்பிய அறிவு முழுதுற வேண்டும்.

இரண்டாம் விதி : சங்க இலக்கியப் பரப்பு முழுதுற வேண்டும்.

மூன்றாம் விதி : திருக்குறளை முற்ற வரப்படுத்தித் திருக்குறளுக்கு உரை திருக்குறளே என்னும் தெளிவு வேண்டும் என்பவை.

நான்காம் விதி : இப்பொழுது சுட்டிய பட்டறிவு இல்லாமல் குறளுக்குப் பொருந்துரை காண இயலாது என்பது.

31.03.2013

மேகாலயாவிற்குப் பெருமை சேர்ப்பனவற்றுள் ஒன்றாக இயற்கை தந்ததும், அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு காட்சிப்படுத்தியதும் ஆகிய வேர்ப்பாலத்தைக் காணச் செல்லும் திட்டத்தொடு புறப்பட்டோம்.

நேற்றுப் பார்க்க முடியாமல் மீண்ட காட்சியைக் காண வாய்க்கும் களிப்பு, என்னுள் கனிந்தது.

தொலைவோ மிகுதி! வழியோ ஒரு கல் தொலைவு செல்லுமுன் ஒரு நூறு வளைவுகள்! ஆழ் பள்ளம்! நெடிதுயர்ந்த மலை. செல்லச் செல்லப் பள்ளத்தாக்கு. சரியாக எட்டுமணிக்குப் புறப்பட்ட நாங்கள் 8.30-9.30-க்குள் கண்டது பள்ளத்தாக்கின் ஆயிரக்கணக்கான அடி ஆழப் பள்ளம் முழுவதும் துய்ப்பஞ்சால் மூடப்பட்டதா? வெயில் அடிக்கும் பகுதி வெள்ளி உருக்கா? பச்சைப் பசுமையை வெண்கரடி விழுங்கி விட்டதா? காணும் இடங்கள் (வியூ பாய்ண்ட்) என்னும் இடங்கள் எல்லாம் காண இயலாப் பனிப்பாறை ஆகிவிட்டதா? அந்தக் காட்சி அகலாக் காட்சி!

முகில் அடங்கிக் கிடந்ததா? வல்லரக்கன் சிறைப்படுத்த அச்சிறையைத் தகர்த்தும் சிதைத்தும் வெளியேறும் விடுதலை வீறுடையார் வெளிப்பட்டுக் கிளர்தல் போல் எங்கள் காலடியில் தலையில் கண்முன் பத்தடிக்கு அப்பால் உள்ளது என்ன என்று அறிந்து கொள்ள முடியா அளவில், மலைப் பச்சையை மூடச் செல்லும் வெண்திரைப் போர்வை போல் வெண்முகில் பக்கம் எல்லாம் சூழ்ந்தன.

கதிர் வெளிப்பட்ட அளவில் வெண்பஞ்சு வெள்ளி உருக்காக மாறிப் பள்ளமெல்லாம் வெள்ளிக் கட்டியே அடுக்கி வைக்கப்பட்ட மாட்சியில் விளங்கியது.

எரிபொருள் எரிநெருப்பு இல்லாமல் கிளரும் வெண்புகைக் கொடியா, வெண்ணிலவின் பால் பொழிவா என்ன, எங்கும் மயக்கியது. ஒரு கல் தொலைவா? இருகல் தொலைவா? செல்லும்வழிப் பள்ளத்தாக்கு அனைத்தும் சாலை அனைத்தும் மலைமுகடு அனைத்தும் இந்நிலை! ஒரு மணி நேரப் பொழுது, பால் குளியலில் - தூவலில் - தழுவலில் கொண்ட மகிழ்வு பெரிது!

குற்றாலத்து அருவித் தூவலில், பாவநாச அருவித் தூவலில் ஐம்பதடி நூறடி குளிக்கும் இன்பம் பெறலாம். இம் முகிற்படலக் குளிப்போ செல்லும் இடம் நிற்கும் இடம் எங்கும் உண்டு. கண்ணில் படுமிட மெல்லாம் உண்டு!

வெயில் ஏற ஏற ஒன்பது மணிக்குமேல் மலைச் சரிவில் பசுமைத் தோற்றம் - மேலும் செல்ல, பள்ளத்தாக்குத் தோற்றம் - ஆங்குள்ள குடியிருப்புத் தோற்றம் - ஆற்றுப் பள்ளத் தோற்றம் என வடலூரில்

வள்ளலார் திரைகளை விலக்கி மயக்கிருள் மாறி ஒளிவரக் காட்டலென இயற்கை இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டியது.

மேலும் ஆயிரக் கணக்கான வளைவு - செலவு - ஆலவேர்ப் பால இடம் சில வீடுகள் - சுற்றுலா மையம் - வண்டி நிறுத்தும் வளாகம் என்பவையே உடையவை.

சீட்டுத் தருமிடம் - தேநீர்க்கடை ஒன்றிரண்டு, கழிப்பறை என்பவையும் உண்டு. படிக்கட்டுகள் நூற்றுக் கணக்கில் கீழே இறங்கக் கட்டுமானமாக உள்ளன. அதன் கீழே படியும் இல்லை! கட்டும் இல்லை! வலப்பால் உயர்மலை! இடப்பால் பள்ளத் தாக்கு! நான்கு ஐந்து அடி அகல வழி - செப்பமிலா வழி. கல்லோ, சரளை, உருளை - திரண்ட குண்டு - சதுரக்கல் - படியிலாப் படி இறக்கம்! மலைப்பு ஏற்பட்டது! வேலா முத்து சரவணர், இறங்கிப் பார்த்து வருகிறோம் என்று முந்தினர்.

நாங்கள் மூவரும் அயர்ந்தோமா? இயலாது எனத் தளர்ந்தோமா? அயர்வு தளர்ச்சி இருந்தாலும் ஆர்வம் இழுத்துக் கொண்டிருந்தது. நின்று நின்று செல்லலாம் என நாங்கள் முடிவுக்கு வர, கீழே சென்ற அவர்கள் கை வீசினர் - துண்டு வீசினர்!

புறப்பட்டோம்! அவர்கள் மூவரும் மேலே வந்து விட்டனர். யான் முன்னே நடந்தேன். சரவணர் என்கையைப் பற்றினார்! வேண்டும் இடங்களில் இடப்பால் வலப்பால் முன்னே பின்னே எனச்சுழன்று சுழன்று உதவினார். "புறம் புறம் திரிந்து உதவிய செல்வமே! சிவமே!" என்று வாழ்த்திய இறைமைக் காட்சிக்கு இடமானார் சரவணர்!

"தாயருகா நின்று தைந்நீர் ஆடிய வையை" பற்றிய பரிபாடல் காட்சி காட்டும் **சேம முதுநடைப் பாட்டியின்** காட்சியரும் ஆனார் சரவணர்! அன்பராய் - அருளராய் - நண்பராய் - உதவராய் - உயிர்க்காவல் ஆன்மநேயராய் உருமாறி உருமாறி உதவினார்! முடியா ஒன்றும் உள்ளம் உடைமையால் முடியும்! உள்ளம் உடையார் துணையால் முடியும்!

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்னும் எண்ணம் உந்த - காணாத, இதன்முன் கண்டறிய வாய்க்காத, வேர்ப்பாலம் கண்டேன்!

இயற்கை எழிற் கொடையா? இயற்கையைக் கெடுக்காமல் மேலும் இயற்கை நயனை வெளிப்படுத்தும் வல்லான் எண்ணத்தில் உருவாகி. அவன் மூளையும் நெஞ்சும் ஒருங்கே செயல்பட்டு ஆலம் வேரையும் விழுதுகளையும் மக்கள் நடமாடும் பாலம் ஆக்கும் கோலம் காட்டியதா? எல்லாமும் இணைந்து இயைந்து பொருந்தி நின்ற ஏற்றமா?

கண்முன்னே ஏறத்தாழ ஐம்பது அறுபதடி வேர்ப்பாலம்! *(பின்அட்டை - படம்)* அகலம் ஐந்தடி ஆறடி! மேலே மண் - கல் பரப்பி இயல்பாக நடக்கப் பாதை. தாங்கு தூண் - பலகைக் கட்டு இல்லாமல் தொங்குபாலம்! கைப்பிடி கட்டுமானமா? இல்லை! விழுதுகளையே பின்னல் வலையாக்கித் தொடரிச் சாலையின் இருபாலும் அமைக்கப்படும் இரும்புத் தூணும் தகடும் போல அமைத்துக் கைப்பிடியாகவும் ஏறி நின்று காணவும் ஏறி அமரவும் செய்த செயற்கரும் செயல்பாலம்! அப்பாலத்தின் கீழே இறங்க இயற்கைக் கல்மண் படி! நீரோட்டம்! குளிப்பார் குளிக்க! பார்ப்பார் பார்க்க! படம் எடுப்பார் எடுக்க! கூடிக் கூடி இருந்து வியப்பார் வியக்க!

பருத்த உடலர் - முதியர் - இளையர் - வாலியர் - வெண்ணிறத்தர் கருப்பர் நெடியர் குறியர் ஆடவர் பெண்டிர் - என வரிசை வரிசை வரவு செலவு, தொடர் நிலை! அரைமணிப் பொழுது ஆங்கிருந்தோம்! **முத்து** அவர்களோ எதிர்ப்பகுதியில் இருந்த படியின் மேலேறி விட்டார்! அவருக்கு ஓட்டம் - நடை - குதிப்பு தாவல் இயல்பாகி விட்டது! சரவணரோ எங்கள் எவரினும் பயிற்சி மிக்கார்! மலையேறல் மா ஏறல் சுமை மிக்க பொருள்கள் துமிக்கி கொண்டு ஏறல் எல்லாப் பயிற்சியும் உடையவர். பெரும்பதவியில் இருந்தும் 'என்றும் பணியுமாம் பெருமை' என்னும் வாழ்வராய், எளிமையில் இறைமை என்பதற்கு எடுத்துக் காட்டாக எங்களோடு இயைந்த - இணைந்த - அரும் பெரும் உரிமையர் ஆனார்!

அவர் அலுவலகம் -அவர் செல்வழி - ஆயவை மட்டுமே கண்டு, அவர் உயர்நிலை கண்டவர்க்கு **அவரா, இவர்** என்னும் வியப்புத் தோன்றாமல் போகாது!

இறங்கி விட்டோம்! இனி என்ன படிப்படியே எப்படியும் ஏறிவிடலாம்! ஏறித்தானே ஆக வேண்டும்! இயலும் ஏற என்றாலும் படிக்கட்டு வரும் வரையும், என் நிழலாக - அரவணைப்பாளராக வரவே செய்தார்! முத்துவும் அக்கருத்தில் ஊன்றியே இருந்தார்! இவர்கள் இருவரும் சுமை

தாங்கியாய் இருத்தலால் **'வேலா' சுமை தாங்கியாக நேரவில்லை!** இல்லை எனின் என் சுமை தாங்கி முழுதுறும் அவரே! என்னை எதனையும் செய்ய விடாத **'கருமி', 'வள்ளல்', 'தருமி'** அவர்!

என் கவலை எல்லாம் அருமை மக்கள் 'கலை' 'நிலவு' (கலா, நீலா) பற்றியே நின்றது. அவர்கள் இறங்கவும் ஏறவும் எப்பாடு படுவர் என்பதே!

எனினும் எவர்க்கும் எச்சிறிய ஊறும் துயரும் நேரா வகையில் உயர் பேரானந்தமே வேர்ப்பால வழியாக ஏற்பட்டது. வேர்ப்பலாச் சுளை உண்ட சுவை! உண்ணும் அளவும், அதன் ஏப்பம் வரும் அளவும் தானே!

எண்ணும் பொழுதெல்லாம் எதிர்நின்று காட்சிதரும் இவ்வேர்ப்பாலம் ஒப்பதாகுமா? வேர்ப்பாலத்தை வாழ்த்துதல் அவ்வியற்கையைச் செயற்கைக்கலப்பு இல்லாமல், செயற்கை இயற்கையாய் அமைக்க எண்ணினார்; அமைத்தார்; அதனைக் காட்சிப் படுத்தினார்; அனைவர் நல்லெண்ணங்களும் வாழ்க என்பதே நம் எண்ணமும் வாழ்த்தும்.

மேலே ஏறி, வண்டி நிற்கும் தளத்திற்கு வரும் படிக்கட்டு! அயன் மொழியார் ஆங்கிலம் இந்தி அறிந்தார் ஒருவர். என் அகவை கேட்டார் சொன்னேன்! கீழே வரை இறங்கினீர்களா? பாலத்தில் நடந்தீர்களா? என்று வினவினார். சரவணர் கூறினார். மேலும் என்னைப் பற்றிய செய்திகளையும் கூறினார். கையைப் பிடித்தார். தோளைத் தொட்டார்; முதுகை வருடினார்; உடன் வந்த அம்மையாரும் வியந்தார்! பெரியவர் வியந்த அளவில் நில்லாமல் என்னோடு ஒன்றினார். அம்மையார் பட ஆவணப் படுத்தினார். "நூறாண்டு வாழ்க" என்று வாழ்த்திப் பிரிந்தார்! அவர் உயர் உள்ளம் புரிந்தார்! மொழிபுரியார் எனினும் உருவிலா உள்ளச் சுரப்பு உலகாதல் வெளிப்படுத்திவிட்டது. சில நிமையங்களில்! அம்மையாரும் மலராகி வாழ்த்தினார்! முதுமைக்கு வாய்க்கும் எதிர்பாராப் பரிசு! இப்படிப் பரிசுகள் பெற்ற இடங்கள் பல! எனினும் இவ்விடம் சார்ந்த சுட்டே இது. எல்லாம் எழுதின் தனிநூலாகும்.

வண்டி ஏறினோம்; சிறிது தொலைவு சென்றோம்! சரவணர் வண்டியை நிறுத்தச் சொன்னார். மணி 1¼. வலப்பால் ஒரு சிறு கற்பாறை அதன் மேல் மூவடுக்கு வட்டப் பாறை! *(பின் அட்டை - படம்)* அதன் விட்டம் 20 அடிக்குக் குறையாது! இயற்கைச் சூழல்! பார்க்கலாம்! சூழ இருந்து

கையில் உள்ள நண்பகல் உணவையும் உண்ணலாம் எனத் திட்டப் படுத்தியே அழைத்தார். அவ்வாறே காட்சியொடும் உணவை முடித்தோம்!

செலவு மேற்கொண்டோம். எங்கே? **மேகாலயம் கடந்து பங்களா தேச எல்லைக் கோடு** காண்பதற்கு! பழைய சுற்று; பழைய வழி; புதுவழி; நெடுஞ்செலவு; எல்லை கண்டோம்! இந்திய எல்லைக் காவல் நிலையம் அடைந்தோம். அங்கே, நாடு வேறுபாடு இல்லாமல் பறவைகள் பறந்தன; கோழி குஞ்சுகள் சென்றன; ஆடு மாடு குட்டி கன்றுகளுடன் இங்கும் அங்கும் உலாவின. அவற்றுக்குத் தேசவரம்பு இல்லை. ஆறறிவுடைய மாந்தனுக்குத் தேசக்கட்டு - கடவுச்சீட்டு - புகவுச்சீட்டு! தணிக்கை எல்லாம் உண்டு! மூளை வளர்ந்ததன் கேடு! அம்மூளை ஆக்க வழிக்கன்றி அழிவு வழிக்கும் பயன்படல்! அவரவர் சுரண்டல் நோக்கு! காப்பு எச்சரிக்கை! இத்தனையும் கடந்தும், புகுவார் இல்லாமல் இல்லை! தாக்குவார் இல்லாமல் இல்லை! ஏதிலியரும் கும்பல் கும்பலாக வலசை போகாமல் இல்லை. வராமல் இல்லை! அறிவுலகா, அழிவுலகா!

"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போல் போற்றாக் கடை"

என்பது உலகக் கடைப்பிடியானால் எங்கும் பறவை போலப் பறக்கலாம்! கறவை போலச் சுரக்கச் செல்லலாம். உறவைப் பெருக்கலாம். உவகை உலகாக்கலாம்!

பங்களாதேச எல்லைப்படையரும் நம் எல்லைப் படையரும் எங்களோடு உடனாகி உறவாடினர். அந்த இடம் இரண்டு நாட்டுக்கும் பொதுவிடம்.

முன்னர் **'வாகா'** எல்லையில் இருந்து பாகித்தானைப் பார்க்க வாய்த்தது! இப்பொழுது **தௌகித்தில்** இருந்து! இந்தியத் துணையால் பிரிந்தாலும் இந்தியத் தோடும் ஒன்றாத பங்களா தேசாகவே உள்ளது உண்மை! ஒட்டு, கிழியல் ஒட்டே!

இச்சூழலைக் கண்டு திரு.முத்து "பன்றியும் நாயும் கோயிலுள் புகலாம்! மக்கள் புகலாகாது என்னும் கேடர் இந்நாளிலும் இலரா" என வினவினார்! கல் மனத்தர் - தன்னலமே கல்நெஞ்சமாகத் திரண்டு கற்கோயிலை முழுதும் விழுங்கியுள்ள வேதியத்தையும் வேதியச் சார்பு வேந்தே, அன்று தொட்டுக் குடியரசாய இன்று வரை தொடர்வதையும்

எண்ணினார்! விடிவு இனியாவது வரும் வெளிச்சம், தோன்றுவதாக உணர்கிறேன்! இன்னும் நெடுந்தொலைவு சென்றே கௌகத்தியை அடைய வேண்டும். குறைந்தது ஏழுமணி நேரம் ஆகும். இரவு 9.30 -க்குச் சேரலாம்! இப்படித்தான், நம் நிலையும் உள்ளதாகவும் உணர்கிறேன். இரவு 10.30 மணியளவில் உறங்கலானோம்.

1.4.2013

இன்று 8.45 மணிக்குப் புறப்பட்டோம். ஏறத்தாழ 60 கல் தொலைவுக்கு அப்பால் மலைவழியில் செல்ல 11.30 ஆயிற்று **பபிதோரா** (Pabithora) அடைந்தோம். அங்கே ஒரு விந்தை விலங்கு! ஆசியக் கண்டத்தில் வேறிடத்து இல்லாததும் அருகி வருவதுமாம் ஒரு கொம்புடைய **காண்டா மிருகக்** காப்பகம்!

காப்பகம் என்பது காணச் செல்வார்க்கும் காப்புப் போடாது சிறைப்படுத்தியே கொண்டு செல்கின்றது. சீட்டு ஒருவர்க்கு உருபா 50. நம் வண்டி செல்லக் கூடாது! அவர்கள் கரட்டுந்தில் (சீப்) ஏற வேண்டும். கரட்டுந்து என்று பாவாணர் பெயரிட்டதை மெய்ப்பிப்பது போலச் சாலை கரடுதான்! வயிற்று வலியன் சென்றால் - குடலிறக்கன் சென்றால் - அவன்பாடு அவனே அறிவான்! ஏன் சாலையில் காப்பு ஏற்படவில்லை!

முன்னே ஓட்டுநர் பக்கம் துமிக்கி (துப்பாக்கி) ஏந்திய காவலர் ஒருவர். உள்ளிருப்பவர் எவரும் கீழே இறங்கல் ஆகாது! காண்டாவிலங்கு என்ன நம் கை எட்ட வேண்டா! கண்ணெட்டு தொலைக்காவது சென்று காணவிடக் கூடாதா? இந்த அழகில் படக் கருவி கொண்டு செல்ல உருபா ஐம்பது. வெளிநாட்டார்க்கு நுழைவுச் சீட்டும் - படக் கருவிச்சீட்டும் உருபா 500; 500; காண்டாவிலங்கு ஒன்றை ஒரு மேட்டில் கண்டோம். மற்றொன்றை நீருள் கண்டோம்! நின்ற தொன்றோ எட்டாத் தொலைவு! காட்டு மரங்களூடு எப்படிப் படம் எடுப்பது? ஏதோ எடுத்தோம்!

பெரிய வளாகமே! மீள்வழியில் நெடுந் தொலைவில் ஆன்களுடன் பத்துப் பன்னிரண்டு காண்டா விலங்குகளும் காணப்பட்டன. அவையும் படமாக்கப்பட்டன!

தொங்குபாலம் ஒன்று; அதன் ஒரு பால் இருந்து மறுபால் ஒருபடைச் சால் இருக்கும். பாலம் அளவுக்கே செல்லலாம்! ஓரடியும் தாண்டக் கூடாது. யானை ஒன்று அங்கே நின்றது. பாலம் தொடங்குபகுதியில்

மூங்கிலால் செய்யப் பட்ட யானை ஒன்று இடப்பாலும் மற்றொன்று வலப்பாலும் நிற்கும் நிலையில் செய்து வைத்துளர். ஆங்கேயே உணவு உண்டோம்! போகும் போது எடுத்துச் சென்றது. மீண்டும் வண்டியில் ஏறி மீளும் போது உள்ளம் அழுத்தியது. தமிழர் மாந்த நேயம் பெரிது! ஓரறிவு உயிரையும் பிள்ளையாக எண்ணிப் பேணும் பெருமையது. அத்தமிழ இனம், முதல் இனம் உலகுக்கு! அதன் மொழி உலகுக்கு முதன் மொழி! உலக அறிவர் அகழ்வர் ஆய்வர் மொழிநூல்வல்லார் இந்நாள் மெய்ப்பித்து வருகின்றனர்!

ஈழம் கடல் கொண்ட குமரியின் எச்சம்! யாழ்ப்பாணமும் ஏழ்பனை நாட்டு எச்சமே! தொல்பழந்தமிழர் தொல்காப்பியர் நாளுக்கு முந்தைத் தமிழ்மண் அது?

தந்தையால் கயவன் என வெருட்டப்பட்டவன் விசயன்! அவன் இலங்கைக்குக் கால்வைக்கு முன் தமிழன் ஆண்ட மண் அது. வடக்கு கிழக்கு எனப்படும் இலங்கையின் ஈழப்பகுதி ஆங்கிலர் செல்லும் வரை தனித்தன்மையோடே தமிழர் உரிமை மண்ணாக இருந்தது. இலங்கையில் ஏமு இட்லர் ஒருவராக வந்த 'இராச பட்சே' தமிழினத்தைக் கூண்டோடு அழித்து, பூண்டோடும் அழிக்க முள்ளிவாய்க்கால் முள்வேலிக்குள் அடைத்துவைக்கவும், உலகமெல்லாம் ஓலமிட்டு ஓடவும் செய்ய வேண்டிய இன அழிப்பு உதவிகள் அனைத்தும் செய்த இந்திய மண், வங்காள தேசத்தை உருவாக்கித் தந்த இந்திய மண், காண்டா விலங்கினம் அழிந்து படாமல் காக்கின்றதாம்! விலங்கு பெற்ற விலங்குகள் தாமே ஆளுமைத் தலைமையும் ஆட்சியை ஆட்டிவைக்கும் கொடுமனக் கொள்ளைச்சியும்! நினைக்காமல் முடிய வில்லை! வள்ளலார் - அருளாளர் அருகர் காந்தியார் - புத்தர் என்பார் பிறந்த மண்ணில் பிறந்தமையை எண்ணாமல் முடியவில்லை!

சால்பின் அடிப்படை நாணம்! தவறு செய்ய நாணம்! நாணிலிப் பிறவிகள் காக்கின்றனவாம் காண்டா விலங்கை, அசாமிய வனத்துறை வழியே!

கௌகத்தியில் உலகச் சந்தை - வணிக வளாகம்! மார்ச்சு - ஏப்பிரல் திங்கள் அளவுக்கு நடைபெறுவது! அதனைக் கண்டோம். இந்தியம் வங்கதேயம், பாகிசுத்தானம் முதலிய பலவும் ஒன்றியமைத்த வணிக வளாகம் 'மணிராம் திவான்' அரங்கத்தில் நிகழ்ந்தது. செல்வச்

செழுமையர் உலகம் ஒன்றியிருந்த வணிக வளாகம் அது. நம்மைப் போன்றவர் பார்க்கலாம், பார்வை அளவில்! மூளை பெருகிவிட்ட உலகம்; நெஞ்சம் சுருங்கிவிட்டது வெளிப்படை. விடிவு கட்டாயம் ஏற்படும். இல்லையேல் முடிவு ஏற்பட்டே தீரும். அம்முடிவு, விடிவுக்காக இருந்தால் வித்தாகிப் புதையுண்டு மீண்டும் முளைத்துக் கிளைத்து தழைத்துப் பயனாம்! பயன்படாச் சாவு வித்து ஆகாது! விடிவும் ஆக்காது! இரவு உணவுக்குப்பின் சற்றே உரையாடல்; ஆனால் சரவணரிடமும் இராசை அன்பர் ஒருவரிடமும் காண்டா விலங்குக் காப்புணர்வும் மாந்தநேயம் இல்லா மாப்பதவியர் கேடும் பற்றி உணர்வு மிக்கதாக அவ்வுரையாடல் அமைந்தது. இருவரும் உணர்ந்து கேட்டதாக உணர்ந்தேன்.

சற்றே ஓய்வு கொண்டேன். இரவு 10.05-க்கு காமாக்கியா தொடர்வண்டி நிலையத்திற்குப் புறப்படல். படுக்கை வாய்ப்புடன் தொடரிச் செலவு. நாகாலாந்துச் செலவு.

02.04.2013

விடியல் 5.05க்குத் **திமாப்பூர்** நிலையம் சேர்ந்தோம் வெற்றியார் (விசய்) உடன்வந்து படைஞர் இல்லம் சேர்ந்தோம். கடன்களை முடித்து; உணவுக்குப்பின் **கோகிமாவுக்குச்** செல்லுதல் எங்கள் திட்டம். திட்டமிட்டவாறே யாவும் நடந்தன. காலை 8.40-க்குப் புறப்பட்டோம்; வாடகை ஊர்தி; **திமாப்பூரில்** இருந்து **கோகிமா** முழுவதும் மலைவழியே. ஆனால் முன்னைக் கண்ட முகிற்படிவு - கதிர் ஒளிபுகுந்து செய்த கவின் காண முடியவில்லை. சுற்று மேடு பள்ளம் யாவும் இருந்தன.

கோகிமாவை நெருங்க நெருங்க மலைச்சூழல் அனைத்தும் தந்த காட்சி வியப்பாகியது. அடுக்குமாடி, அடுக்கு மொழி, அடுக்கு மல்லி, அடுக்குப் பாறை முதலாக எத்தனையோ அடுக்குகள் தமிழ்வழக்கில் உண்டு. இருவகை வழக்கும் (மக்கள் வழக்கு, புலமையர் வழக்கு) தழுவியது அது. ஆனால் **அடுக்கு ஊர்களைக் காண வேண்டுமா கோகிமாவைக் காண வேண்டும்.** மாநகராட்சிக் குடியிருப்புகளை எல்லாம் ஒன்றன் மேல் ஒன்றாய் அடுக்கி வைத்தாற் போன்ற வனப்பினது அது.

படிப்படியே விளைவுத் தளங்கள் உண்டு! இப் படித்தளம் தளமாக ஊரமையக் காணல் அரிதேயாம்! மேலே செல்லச் செல்லக் குறையும்

என்றால் விரிவே ஆயது. அக்காட்சியில் தோய்ந்து படைத்துறைத் தங்கலிடத்திற்குச் செல்ல வேண்டும் என்றால், அவ்வடுக்கு ஊர்களின் மேல் ஊராக உள்ளது. அவ்வளவோடு மலை முகடு முடிந்ததா? இல்லை மேலும் 500; 600 அடி உயரம் உண்டு.

மாந்தர் முயற்சிக்கு எல்லை எதுவும் இல்லை என்பதைக் காட்டுவது **கோகிமா. நாகாலாந்து மாநிலம் அது.** நாகர்கள் தீவில் வாழ்ந்தது பற்றிக் கூறும் மணிமேகலை, ஆனால் இந்நாகலாந்துக் கோகிமாவோ,

"நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ் மன்னும்"

என்னும் சிலம்புத் தொடரை நினைவுபடுத்துகிறது.

படைஞர் வளாகத்துத் தங்கி நண்பகல் உணவை முடித்தோம். சற்றே ஓய்வு கொண்டோம். வரும் வழியிலேயே நாகர் பரம்பரை ஊரமைப்புக் காட்சிப் பகுதி அது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் சப்பானியர் ஊர்தி அழிபாட்டுச் சான்றும், போர்வீரர் நினைவிடமும் கண்டோம்.

அதனைக் காணும் நோக்கில் 2 ¾ மணியளவில் புறப்பட்டோம்.

நாகர் வாழ்வியல் - பண்பாட்டியல் - காட்சி வளாகமாம் பெரும் பரப்பைக் காணப் புகுந்தோம்.

நாகர் பண்பாடு, நாகரிகம், வாழ்வியல், கலை என்பவற்றை ஒட்டுமொத்தமாக மூங்கில் பண்பாடு, மூங்கில் நாகரிகம் எனக் கூறிவிடலாம்.

மூங்கில் பயன்பாடு இவ்வளவு அவ்வளவா? ஒரு பொருளின் பயன் அதனைப் பயன்படுத்துவார் திறம் தேவை உணர்வு என்பவற்றைப் பொறுத்தே சுருங்கவோ பெருகவோ ஆகின்றது என்னலாம் மூங்கில் குடிசைகள் இருக்கைகள் கதவுகள் முதலியவை வேறு இடங்களிலும் காண்பனவே. சேரலத்தும் மூங்கில் பயன்மிகுதியே!

ஆனால் நாகாலாந்துப் பழவூர் அமைப்பில் மூங்கில் பயன் எழுத இயலாது.

அங்குக் காட்சியாக உள்ள மாந்தர், அவர்கள் கருவிகள், யானை, புலி, மாடு, மான், பாம்பு என எண்ணற்றன. புலியும் யானையும் போரிடல், மாடுகள் முட்டுதல், மாடும் புலியும் மோதுதல், அடுக்குமேல்

அடுக்காக எருமைத்தலை, வட்டம், அரிமா; வட்டம் - யானை; அதன்மேல் குரங்கு என எழுச்சி காட்டல்.

அப்படியே மெய்யான காட்டெருமைத் தலைகள் ஒன்றன் மேல் ஒன்றாய், தனித்தனியாய்க் காட்சிப் படுத்தல்!

இப்பழமையொடு புதுமை அழகு ஒன்று. உள்ளே ஒரு பேரரங்கம்; பளிங்கு (கண்ணாடிச் சுவர்! முன்னே நிற்பதைக் காட்டும்; உள்ளரங்கைக் காட்டவே காட்டாது. பெரிய வளாகம் அது.

மணிமேகலையில் வரும் பளிக்கறை புக்க காதைக் காட்சி தோன்றாமல் போகாது, மணிமேகலைக் காப்பியம் கற்றவர்க்கு!

இரண்டாம் உலகப்போர் நினைவிடமும் அதுவும் அடுத்தடுத்து உள்ளவையே!

அவ்விடத்தில் இருந்து கீழே நோக்கிய போது பள்ளமும் மேடுமாய் நீரரித்தும் நின்று தேங்கியும் வழிந்த இயற்கை வளக் காட்சியைத் திரு முத்து, வேலா ஆகியோர் காட்டினார். என்னுள் பதிந்து எங்கெங்கோ சென்றது. ஒரு வேளை உண்டு மறு வேளை உண்ணாநிலையளைப் பற்றிய சான்றோர் உவமையாக மேடு பள்ளங்களைச் சுட்டுவது நினைவில் கிளர்ந்தது. அது "பொழுது மறுத்துண்ணும் மதுகை" (வலிமை, நோன்பு) என்பது.

குண்டலகேசி என்பது சுருட்டைக் கூந்தல் 'சுரிகுழல்' சுருட்டை என்பவையும் அவை.

பழம் புலவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த வாழ்வினர். ஆதலால், இத்தகு காட்சிகளைக் காப்பியப்படுத்தினர்!

நான்கு மணிக்கு மேல் குளிர் மிகுந்தது. தாங்குதல் எனக்கு அரிதாயது. வெப்புடை இருந்தாலும் அக்குளிருக்கு ஈடுதரவில்லை. இக்கோடையே இத்தகைத் தெனின் பனிப் பொழிவுக் காலத்து நிலை எப்படி இருக்கும்? ஆனால், உடல் இயற்கையொடு ஒன்றிப் போகும் நிலை எவரும் அறிந்ததே! இல்லாக்கால் இப்படி அடுக்கு ஊர்கள் கிளர வாய்த்திருக்குமா?

தங்கல் விடுதிக்குத் திரும்பினோம்! குளிர்ப் பாதுகாப்பு மட்டுமா? உயிர்ப்பாதுகாப்பு இடமும் அல்லவோ அது!

03.04.2013

காலை உணவுக்குப்பின் தங்கியிருந்த இடத்தில் உள்ள காட்சியகம் கண்டோம். நாகர் வாழ்வு அவர்கள் கலை, போர்க்கருவிகள், ஆகியவற்றுடன் மணிப்பூர் மக்கள் வாழ்வியல் கலைகளையும் காட்டும் காட்சியகம் அது. பேரரங்கே அது. அரவணைப்பு என்னும் தமிழ்ச்சொல்லை விளக்க எச்சொல்லும் தேவைப்படாமல் காட்டத்தக்க இரட்டைப்பின்னல் பாம்புச் சிலை நெஞ்சம் தொட்டது! வில் வகை, இசைக் கருவிகள் ஆயவும் இருந்தன. புல்லாங்குழலில் ஏழ்துளை இல்லை. ஆறு துளைகளே இருந்தன. அவர்கள் இசைவகுப்பு அதுபோலும். வில் யாழும் கண்டோம்.

அக்காட்சிக்குப் பின் 10.45 மணிக்கு வெளிச் சுற்றுக்குக் கிளர்ந்தோம். அவ்விடுதிக்கு மீளவரும் திட்டம் இல்லாமையால் பொருள்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டோம்.

கோகிமாவில் சப்பானியர் தாக்குதல் ஏற்பட்டதால் அமரரானோர் எண்ணிக்கை பெரிது. அவர்கள் பெயர்களை யெல்லாம் தனித்தனி நினைவாகப் பெயரும் பிறவும் எழுதியதாய் - பல அடுக்குகளை மேலே மேலே உடையதாய் அமைந்த இரண்டாம் **உலகப் போர் நினைவு வளாகம்** அது.

பெரும் பதவி ஆங்கிலர் இருவருக்குத் தனித்தனியே வெண்ணிற நினைவு வளாகமும் அதற்கும் உயரத்தில் சிலுவை மாடமும் உள்ளன.

"பீடும் பெயரும் எழுதி அதர்தொறும்
நாட்டிய பிறங்குநிலை நடுகல்"

என்னும் தொடர் நினைவில் எழுந்தது.

வீட்டு நலம் நாடுவோர், (இல்லறத்தார்) நாட்டு நலம் நாடும் வீரர்களின் மூலவர்களே! அவர்கள் இல்லையேல் எங்கிருந்து வந்தார்கள்! அவர்கள் கொடையும் ஈகமும் தானே இவ்வீறுடையர்!

"அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை"

என்று இணைத்து வீட்டையும் நாட்டையும் பாடிய வள்ளுவரும், ஏரெழுபது என்னும் கம்பர் நூலும், அவற்றின் மணிமணிப் பாடல்களும் என்னுள் ஓங்கின! அதன் இடையே ஏற்பட்ட துயரக் காட்சிகள் பலப்பல!

சப்பானியர் பேரருள் பிழம்பாம் புத்தரை வழிபடுபவர்! ஆங்கிலவரோ, இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இறைமகன் கிறித்துவை வழிபடுபவர். இவ்விருவர் மண்ணா பர்மா, மலையகம், சிங்கை, இந்தியம், இலங்கை முதலியவை? அயலாரின் - அயலினத்தின் - சுரண்டல்காரர் தாமே இருவரும்!

ஒரு கறுப்பனை - நீகிரோவை - அடிமைப்படுத்த அமெரிக்கர் இருவர் சண்டையிட்டனர். அக்கறுப்பன் அவர்கள் சண்டையைப் பார்த்துக் கொண்டு நின்றான். அமெரிக்கன் ஒருவன் அவனிடம் உனக்காக நாங்கள் சண்டையிடுகிறோம்! நீ ஏன் என்னோடு சேர்ந்து அவனைத் தாக்கக் கூடாது என்றான்! அவன் சொன்னான்; 'ஓர் எலும்புத்துண்டுக்கு இரண்டு நாய்கள் சண்டை போடுகின்றன. எலும்புத் துண்டு யாரோடு சேர்ந்து போரிடும்! எப்படியும் கடிப்படப் போவது அது' அந்நிலைதானே இது! போரிட்ட ஈரினங்களின் மண்ணா கோகிமா இந்தியம்! வன்முறையாளருள் இவர் என்ன? அவர் என்ன?

ஓரினம் - தொன்னாள்முதல் இந்நாள் வரை ஆள் இனம் போரில் நின்றாலும், வீட்டில் இருந்தாலும் ஒட்டு மொத்தமாக, வந்தேறி இனத்தால் அழிபட்ட ஈழப் போரில் **இறந்தோர்க்கும் சாகடிக்கப்பட்டோர்க்கும் நினைவிடம் அமைப்பின் ஈழமண் போதுமா, ஒட்டுமொத்த இலங்கைதான் போதுமா?**

அதனையும் அமிர்த சரசில் அமைந்த பொற்கோயிலைத் தாக்கியதன் சான்றை - இந்திய அரசுச் சான்றை - இன்று வரை காத்துக் காட்சியாக்கும் சீக்கிய வீறுமிக்க இனத்து வந்து, இந்தியத் தலைமையாய் இருப்பவர் உதவி கொண்டு அழிக்கப்பட்டால், அது என்ன பிறவி - தன் இன - தன் மண் - மாண்பைக் காத்த பிறவியா?

சாலியன் வாலாபாக் படுகொலை செய்த செனரல் தயரைப் (டயரை) பொறுக்கலாம், அவன் இந்திய விடுதலை வேட்கையரை ஒழிக்கவே பிறந்த பிறவி! ஆனால், இந்தியத்தைக் காக்க நிற்கும் பிறவி, செனரல் தயர் செய்த கொடுமையிலும் கொடுமையாக ஓரினத்தையே ஒழித்துக் கட்டத் துணை நின்ற - துணிந்து உதவிநின்ற கீழ்மை - **தயர் கொடுமையை வென்றுவிட வில்லையா?**

எவர் வங்க மண்ணின் மைந்தர் விடுதலைப் போர்க்கு உதவி, விடுதலை பெற்றுத் தந்தாரோ அவர் மருமகளாம் பிறவி பேராய

ஆட்சித்தலைமையாக இருந்து தூண்டியழித்தது என்றால் அமைதிப் புறாவாக - ஐந்தொழுக்கம் (பஞ்சசீலம்) உலகுக்கு வழங்கிய பெருமானார் பேரன் மனைவியாக மதிக்கத்தக்க பிறவியா அது?

மாறாப் பழியை இந்தியத்திற்குத் தரவே அமைந்த பிறவிகள் போலும்! இவ்வெண்ணம் போர் வீரர் வழிபாட்டு இடத்தை நினைக்கும் போது பொத்துக் கொண்டு எழுந்த - பொத்தி அணைக்க முடியாத் தீயாகும் அது!

"வாழும் உயிரை வாங்கிவிடல் மண்ணில்
எவர்க்கும் எளிதாகும்
வீழும் உடலை எழுப்புதலோ ஒரு வேந்தன்
நினைக்கினும் கூடாதையா?"

என்னும் கவிமணி பாடலே படியில் இருந்து கீழே கீழே இறங்கும் போது மேலே மேலே எழுந்ததாம்!

வரிசை வரிசைக் கடை வளாகம் ஒன்று கண்டோம். அருங்காட்சியக வளாகம் கண்டோம்! அதனை அடுத்தே சிற்ப வளாகம் கண்டோம்! மீள்வழியில் மேலே இருந்து நோக்க மலையே நாடே மண்ணே தெரியாத ஊரடுக்குகளை ஒருங்கே கண்டோம்!

"காடு கெடுத்து நாடாக்கி" என்னும் பட்டினப் பாலை நினைவில் நின்றது. காடு மலை கெடுத்து ஊராக்கியமை தோன்றியது! **நாகர்கள் என்ன ஆயினர்! மண்ணின் மைந்தர் மகிழ்வா செய்வர்?**

காய்கறித் தோட்டம் போடத் தலைக்கு இரண்டு குறுக்கம் வழங்கிய **உருசா பீமா** என்னும் பகுதியை அறிந்து சென்று கண்டோம். **தேவாங்கு** ஒன்றைப் பற்றி ஒருவரிடம் விற்றமை கண்டோம்! குரங்கில் இருந்து வந்தவன் மாந்தன் என்னும் **தார்வின்** ஆய்வு மீளாய்வு செய்யும் அறிவியல் உலகில், அவ்வாய்வு சரியே என்று நிலைநாட்டும் சான்றாக இன்னது நிகழ்கின்றது போலும்! தங்கல் இடத்திற்கு 6 மணி அளவில் எய்தினோம். **திப்ருகார்க்குச்** செல்லும் தொடரி 6 ½ மணிப் பொழுது காலத்தாழ்வாகி வருவதை அறிந்தோம்! நடக்கவா முடியும்? காத்திருந்து ஏறினோம்!

காலத்தாழ்வைக் கலந்துரையாடலாகச் செலவு செய்தோம். ஐவரும் அமர்ந்து உரையாடல் கூட்டுக்குடும்ப வாழ்விலே கூட அமைவது அரிதே! ஆனால் இக்கூட்டுக் குடும்பம் ஒருவருக்கு ஒருவர்; ஒருவருக்காக ஒருவர்

என ஐவிரல்கள் போல் அமைந்தமையால், சிறந்த உரையாடலாக அமைந்தது. நூலாய்வினும் மேலாய்வு எது? செய்யுள் இன்பத்தினும் மெய்யாம் இன்பம் எது? பட்டறிவினும் கிட்டறிவு உண்டா? இந்நிலையில் ஏறத்தாழ மூன்று மணிநேரம் உரையும் பாட்டுமாய் அமைந்தன. மேலும் உறவு சிறக்கவும், ஆய்வும் செயன்மையும் பெருக்கவும் தூண்டலாக அமைந்தன.

ஏறத்தாழ இரவு 1 மணியளவில் தொடரி நிலையத்திற்குப் புறப்பட்டோம். உயர் வகுப்புத் தங்கல் மனையில் அமர வாய்த்தது 2.15-க்குத் தொடரி எய்தியது. இரவுப் படுக்கைப் பதிவு ஆதலால் இரண்டு மூன்று மணி நேரம் உறங்கவும் வாய்ந்தது காலத் தாழ்வு நீட்டித்து நீட்டித்து திப்ருகார் நிலையத்திற்கு முன்னர் ஒரு மணிப்பொழுது நின்றது நின்றதுதான். சென்ற - செல்கின்ற பாடில்லை. எதிர் நோக்கி நிலையத்தில் காத்து இருந்த மகிழ்வுந்தைத் தொடரிநிற்கும் இடத்திற்கு வருவித்து, மேலும் அரைமணிப் பொழுது சென்று 10.10 மணியளவில் தங்கலிடம் சேர்ந்தோம். 03.04.2013 - செலவு இடையீடுபடாமல் 04.04.2013 என அமைந்தது.

04.04.2013

10.20க்கு மேல் தான் விடிந்ததாய்க் காலைக் கடன்களை முடித்து உணவு கொள்ள நேர்ந்தது. காலத் தாழ்வால் வேறொரு வகையால் உண்டாய பயன் இல்லாமல் இல்லை. விடிந்து நான்கு மணிநேரம் இருபாலும் பார்க்க முடிந்ததே. இரவிலே வந்திருந்தால் பக்கம் பார்க்க இயலாதே!

தொடரி, வந்த வழி சமனிலம். மலை பள்ளம் எதுவும் இல்லை. இருபாலும் தேயிலைத் தோட்டம். நெல் அறுவடை முடிந்த வயல் நிலம் விரிவான பரப்பு; அனைத்தும் பயன்பாட்டு நிலம் ஒன்றிரண்டே பேரூர்; மற்றையவை தனி வீடு, சிற்றூர்களே!

பகல் 12 மணியளவில் புறப்பட்டோம். வானம் இருண்டது மழைபொழிந்து கொண்டே இருந்தது. வழியெல்லாம் அந்த நிலைமையே. **தில்சுகியா** என்னும் இடத்தை 1.15-க்கு அடைந்தோம். புதிய தாம் சிவன்கோயில் எனினும் பொலிவு மிக்கதாக விளங்கியது. பழைமையும் சிற்பச் சீர்மையும் மிக்க தமிழகக் கோயில்களை நோக்கி நோக்கிப் பழைமையில் தோய்ந்த கண்களுக்குப் புதுமாளிகை ஒன்றைக்

கண்டதாம் நிலையே உண்டாயது. ஆயினும் வடக்கில் கோயிலின் தூய்மை போற்றுவதில் ஒரு சிறுபகுதியைக் கூடத் தெற்குப் பின்பற்றிக் கொள்ளவில்லை! நம்பா மதத்தர் கோயிலைத் துறந்தனர். நம்பு மதத்தர் பணத்திலேயே கண் வைத்தனர். ஓரிடங்கள் - திருக்கோயில்களின் தூய்மை பொலிவு ஆயவற்றைப் பெற்றிருப்பினும் அதற்குத் தகப் பணம் பண்ணல் விடுவதில்லை. அறநிலையம் - அறம் வளர் தொண்டர் - அருள் பாலிக்கும் பாடல்கள் புகுதல் என்பவை இல்லாமை திருக்கோயில் பழைமை மாண்பைத் தொடர்ந்து குலைத்துவருதல் எதிரிடைச் சான்றாய் சார்பாய் அமைந்து அயற்சமயம் சாரத் தூண்டுகிறது என்னும் மெய்ம்மையை உணரும் போதே - தக்க தீர்வு கிடைக்கும். பொதுமக்கள் புரிதல் அறவே இல்லாத மந்தைகளாகிவிட்டதால் அவர்கள் தேங்காய் பழத்தட்டுடன் நின்று விடுகின்றனர்.

அப்பால் **திக்பாய்** என்னும் எண்ணெய்க் கிணற்றைக் காணச் சென்றோம். தொல்பழ ஊழியில் நீர்வாழ் உயிரிகளாய் இருந்த மீன் முதலை சங்கு சுறா பூச்சி வகைகள் பெயர்காண இயலா உயிரிகள் கோடிக்கணக்கில் நீருள் மடிய மண் கிளர்ந்து மேடுபட்டு அவ்வுயிரிகளின் ஊனும் பிறவும் படிந்து மண் அழுத்திய அழுத்துதலால் எண்ணெய் என மாறுநிலை பெற்றவை அவை.

கல்மரம், நிலக்கரி, வைரம் போன்றவையாம் அது. மண்ணெண்ணெய், கரி நெய் (டீசல்), கன்னெய் (பெட்ரோல்), எரிவளி, மெழுகு என்பனவும், அவற்றின் பல்வேறு ஆக்கப் பொருள்களும் அறிவார்ந்த உலகால் கண்டறியப்பட்டுக் கிட்டியவையாம்.

நம்மண் சார்ந்தது தங்கவயல் (கோலார்), நன்னூல் பவணந்தியாரால் பாடுபுகழ் பெற்றவன், சீயகங்கன். நன்னூலை நாம் பெற மூலவன் அச் சீயகங்கன் என்பான். ஆயினும் மண்ணில் 9 கல் நீளத்திற்குக் கீழும் மேலுமாய் (6700, 9600 அடியளவின் கீழ்) தங்கம் இருப்பதைக் கண்டு பயன்படுத்தியவன் அயலவன் தானே!

அவன் வருமுன்னே இங்கே இரும்பு கிடைத்தும், பல்வேறு பொறிகள் அமைத்தும் திறம் பெற்றவர், கருமருந்தும் பெற்றுக் கல்லை அகழ்ந்தவர் துமிக்கி (துப்பாக்கி) பேரியங்கி (பீரங்கி) என்பவற்றைக் கண்ட ஆங்கிலர் பிரெஞ்சியர் முதலோர்க்கு அடிமைப்பட்டுக் கிடக்க வில்லையா? இன்றும் அந்நிலை பற்றிய சிந்தனை இல்லாமை ஏன்?

"பூணி இன்றியும் பொறியின் இயங்கும்

மாண் வையம்" என்பது பெருங்கதை. பூணியாவது பூட்டப்பட்டு இழுக்கும் மாடு, குதிரை, அன்னவை, வையம் - வண்டி, சகடம்.

வலக்கால் மிதித்தால் மேலே ஏறவும், இடக்கால் மிதித்தால் கீழே இறங்கவுமாம் மயிற் பொறியைச் சிந்தாமணி சொல்லியதே!

பெருங்கோட்டைப் பொறிகளை அடுக்குகின்றனவே நம் காப்பிய நூல்கள்.

தொல்காப்பியர் நாளிலேயே,

"ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணங்கள்" அமைந்தனவே! மண்ணில் இருந்தே விண்ணைக் கணித்த கணியன் முதுகண்ணன், அறிவன் இருந்தனரே!

வாழும் மண்ணை வையகம் என்றவர் தமிழர்! எல்லா வளமும் வைத்திருப்பதை அறியாமல் வைத்த பெயரா?

சுழலுதல், ஒளிவிடல், ஒளி கொள்ளல், அது கொண்டு ஒளிசெய்தல் அறியாமலா ஞாலம், உலகம், நிலா, நாள், கோள் பெயர்கள் இட்டனர்.

அறிவறிந்த தமிழர் தொடர்ந்து அறிவியல் பொறியியல் முதலியவற்றில் செல்லாமல், சென்ற சான்று இல்லாமல் போயது ஏன்?

தமிழக வேந்தர்கள் வேதிய வயப்பட்டனர். வேள்வி வழியால் பெறக் கூடாத வெல்லாம் பெறலாம் என்று புனைந்ததையும் வேதியர் தெய்வப் பிறப்பினர் அவர்தம் மொழி தெய்வமொழி அவர்கள் வழியில் வேந்தர் நின்றால் மண்ணிலேயே விண்ணகப் பேறு பெறலாம் என்றனர். அவ்வுலக வாழ்வே வாழ்வு! இவ்வுலக வாழ்வு பொய்! என்றனர்.

வேதியத்தை எதிரிட்டுப் புத்தமும் அருகமும் தமிழகம் எய்தின. அவை அழுத்தமான நிலையாமைக் கொள்கை, பிறப்பின் செயலுக்கு ஏற்ப வினைச் சுழற்சி உண்டாம்; மறுபிறப்பு உண்டாம்; உலகியல் நோக்குக் கொள்ளல் சிற்றின்ப மயக்காம். பேரின்பப் பற்றுமைக்குச் சிற்றின்பம் தடை என்ற நிலைப்பாட்டை உண்டாக்கிவிட்டனர்.

இறைமாட்சியை அடுத்தே கல்வியை வைத்தது, வள்ளுவம். கல்லாமையைக் கடிந்தது; அறிவுடைமையைப் பாராட்டியது. அதன் அரிய பெரிய இலக்கணங்களை எல்லாம் தொகுத்துரைத்து

"அறிதோறு றியாமை" என்பதைக் காமத்துப்பாலில் காட்டியது. ஆயினும் தமிழ்ச்சங்கங்களையும் அரங்கேற்றங்களையும் வைத்த அரசுகள் பொதுமக்கள் கல்விக்குச் செய்தமையை விளக்கத்தக்க செயற்பாடுகள் இல்லை.

புலமையர்களே தமிழை வளர்த்தனர்; போற்றினர்; அவர்களுக்குப் பரிசுவழங்குதல் புரிந்தனர் புரவலர். ஆனால் வேதியக் கல்விக்குச் சான்றாகச் சதுர்வேதிமங்கலம் திரிவேதிமங்கலம், மங்கலம், உத்தமதானம், மகாதானம் வழங்கினர். பொற்பசுவுள் புகுந்து வழங்குதல் (இரணிய கருப்பம்) முதலாகத் தானம் வழங்கினர். ஆதலால் பொதுமக்கள் பெரும்பாலோர் கல்லாதவராக இருந்தனர். கல்லார்பால் குற்றம் சொல்லிப் பயனில்லை என்பதால்,

"கல்வி நல்காக் கசடர்க்குத் தூக்குமரம்
அங்கே உண்டாம்" என்றார் பாவேந்தர்.

தொழில் வழி மக்கள் அமைந்தனர். தொழிலை வழிவழியே கற்றனர். பின்னாளில் திண்ணைப் பள்ளிகள் தோன்றி இயன்ற அளவில் கற்பித்தன. மக்களை விலங்கு நிலையராகச் செய்தது, வேதியத் தந்நலம். கலை தொழில் பொறி வல்லார் வழிவழியே செய்தது குலத் தொழிலாய் நின்றது. புதிய கண்டு பிடிப்புகள் அவ்வகையில் ஏற்பட்டாலும் அவை எழுதப்படவில்லை. எழுதப்பட்ட கலை வளங்களும் வடமொழிப் படுத்தப்பட்டு, மூல எழுத்து ஒழிக்கப் பட்டது.

ஆங்கில ஆட்சி அயலாட்சி எனினும், இங்குள்ளார் கண்டு பிடிப்பை ஊக்கவில்லை எனினும், பொறிகளைப் பயன்படுத்தத் திறம் உண்டாக்கியது. அதுவும் தன்னலத்தால்!

தமக்கு மக்கள் தொடர்பு ஏற்பட இருமொழிப் புலமையரைப் பயன்படுத்தியது. சமய வாணர் தம் சமயப் பரப்புதல் நோக்கில் பள்ளிகளை உண்டாக்கினாலும் பொதுப் பயனும் ஆயிற்று.

அறிவியல், பொறியியல், மருத்துவ இயல் முதலாம் எல்லாம் இறக்குமதிப் பொருளாக இருந்ததை அல்லாமல் கண்டுபிடிப்புப் பொருளாகாமை ஆயிற்று. விடுதலைக்குப் பின்னரும் தேசியப் பார்வை என்றும், உலகப் பார்வை என்றும் பெரிது பேசிக் கண்டு பிடிப்புகள் ஊக்கப் படுத்தப்படாமல், உதவி வளர்த்தல் இல்லாமல் மட்டுப்பட்டே நின்றது.

கோவை துரைசாமி நாயுடு கண்டு பிடிப்போ, தமிழகத்து இராமர் பிள்ளை கல்லெண்ணெய் ஆக்கக் கண்டு பிடிப்போ ஊக்கப் படுத்தப் படவில்லை! அழிவுமிக்க அணுவுக்கு முதன்மை தந்து நெஞ்சும் இல்லாமையை வெளிப்படுத்துகின்றது!

இவ்வளவு விரிவாக இதனை எழுதுவது ஏன் எனத் தோன்றலாம். **குன்றும் குடை சாய்ந்த நிலை** கண்ட உணர்வும், உந்துதலுமே இவ்வாறு விரித்தெழுத வைத்ததாம்! **மனச் சான்றை மறைப்பது மாப் பிழை** என்பது கருதுக. இவ்விரிவெழுத்துப் பின்வரும் நிலக்கரிச் சுரங்கப் பணிக்கும் பொதுவதாம்.

கி.மு. 354இல் அலெக்சாண்டர் அப்பகுதிக்கு வந்து பந்தம் கொளுத்திக் குதிரைப் படையால், யானைப் படையை வெருட்டியது, 'அங்கு எண்ணெய்வளம் உண்டு' என்பது தெளிய மூலம் என்னும் குறிப்புளது. காலக்குறிப்பும் செய்திக் குறிப்பும் செவ்விது எனத் தோன்றவில்லை. தீவர்த்தி (தீவட்டி) எரிகொள்ளி கொண்டு யானையை வெருட்டல் வழிவழிச் செய்தியே. வேறு எண்ணெய்ப் பந்தமோ கொள்ளி எரியோவாக இருக்கவும் கூடும்.

எண்ணெய்வளம் உள்ளமை காணல், துரப்பணக் கருவி, துரப்பண முறை, அவ்வெண்ணெயை வெளிக் கொணர்ந்தவகை, அதனைக் கல்லெண்ணெய், கரியெண்ணெய், மண் எண்ணெய், ஆவி எரிப்பயன் எனப் பல்வகையில் பயன்படுத்திய வகை, பொறிகள் விளக்கக் குறிப்பு, பணிபுரிந்தோர் ஆயோர் நிலைகள் எல்லாம் விளக்கும் விரிந்த காட்சியகமாகவே உள்ளது. மேலும், நகருள் காட்சியகம் பெரியதோர் வளாகத்தில் உள்ளதையும் கண்டோம். மனித ஆற்றல் மிக மேம்பட்டது. ஆனால், **மனித மனம் மேம்பட்டால் அல்லாமல், பொறியாலோ பொருளாலோ பயன் இல்லை என்பதைத் தள்ளி விட முடியாது!**

அணு ஆற்றல் உயர்ந்ததே! அதன் அழிவுக்கு எல்லையும் அதன் அழிவு நிலைதானே! கத்தி என்ன செய்யும்? அதை எடுத்தவன் கருத்தில் அல்லவோ ஆக்கமும் அழிவும் உள்ளது.

நீருயிரிகள் எண்ணெய் நிலை எய்த எத்தனை எத்தனை கோடி ஆண்டுகள் தேவைப் பட்டிருக்கும். 'கல்மரம்' அல்லது மரக்கல்லின் காலமே (திருவக்கரை முதல் அரியலூர் வரை) இரண்டு கோடி ஆண்டு;

பொதியக்கல் ஐந்து கோடி ஆண்டு என்று கணித்துளர். அசாம் மலைப்பகுதி கடலாக இருந்து மலையாகக் கிளர்ந்த சான்று அல்லவோ கன்னெய் முதலியவை. இமய முகடும் கடல் வாழ் உயிரிகளின் படிவுகள் கொண்டுள்ளமை வரலாறும் அகழ்வாய்வும் அல்லவோ! ஆனால் தென்னகக் குமரி ஆய்வுக்கு உட்படுத்தப் படாமை ஏன்? வடக்கு வாழ வேண்டும்! தெற்கு, தேயவேண்டும்! இல்லையேல் உலகமுதன் மொழியாம் தமிழ் வட்டார மொழியாய்க்கிடக்க மிகப்பிந்தை இந்தி இந்திய ஆட்சிமொழியாய்க் கோலோச்ச முடியுமா? எந்த இனத்தின் மொழியும் ஒப்புரிமை உடையவை என்பதைத் துடைத்து ஒழிப்பது தானே இது! மொழிவல்லாண்மை, கொடுங்கோன்மைச் சான்றாம்!

பூங்கா ஒன்றையும், **படகுத்துறை** ஒன்றையும் **தொங்கு பாலத்தையும்** கண்டோம். **தேயிலை ஆலை** ஒன்று கண்டோம். எங்கும் தேயிலைத் தோட்டம் மல்கிய பகுதியில் தேயிலை ஆலை இருப்பது இயல்பு தானே!

தேயிலைக் கொழுந்து தூய்மை செய்யப்படல், வெப்பப்படுத்தல், பொடியாக்கல், தரம்பிரித்தல், மேலும் சல்லடை இட்டு மூடை ஆக்கல் முதலாக அனைத்தும் விரியக் காண வாய்த்தது. அதன் பொறுப்பாளர் உடனாகி ஒரு மணிப் போதுக்கு மேல் விளக்கம் செய்தார்! தேநீர் தரங்களும் தேநீர் வண்ணங்களும் காட்டியதுடன், தேநீர் பருகவும் செய்து மகிழ்ந்தார். பின்னர்த் தங்கலிடம் சேர்ந்தோம்.

05.06.2013

காலை 7.00 மணி அளவில் தங்கல் விடுதியில் இருந்து புறப்பட்டோம். **கொழுந்து பறிக்கும் இடமும்** சென்றோம். பழைய தோட்டப் பக்கலே புதிய உருவாக்கமும் செய்யப்படுகின்றது. இடைக்குத் தேய்வை (இரப்பர்) உடை, தலைக்குக் குடை போன்ற விரிகுடை தலையிலிருந்து தொங்கும் தேயிலைக் கொழுந்து போடும் பெரும்பை, பத்து இருபது பெண்கள் வரிசை பிடித்து நின்று பறித்தல் ஒரு வனப்பியலேயாம். அவரவர் பறிப்பைச் சுமையாக்கிச் சாலை வழியே நடையிடுதலும் சீரிய காட்சியே. **நிலக்கரிச் சுரங்கம்** காண்பதற்குச் சென்றோம். நிலக்கரி நில அளவில் இருப்பது நெய்வேலி. அது பழுப்பு நிலக்கரி. இது மலையாக உள்ளது. ஆயினும் அகழ்ந்து சுரங்கமாக்கி அள்ளி வந்து வெளிக் கொணரும் செயல், தங்கவயல் பணி ஒப்பதே.

நுழைவாயில் பகுதியில் இருந்து இரண்டுமுதல் மூன்று மணிப்பொழுது செலவிட்டே அதனைக்காண முடியும் என்றனர். அதனால் சிறிது தொலைவு சென்று மீண்டோம்.

நிலக்கரிச் சுரங்கப் பகுதியில் எழுதிவைக்கப்பட்டுள்ள ஆணை மொழிகள் அருமை மிக்கவை. அல்லல் நேர்வை அறிவிப்பவை .எப்பொழுதும் விழிப்பாக இருக்க ஏவுவவை.

"எப்பொழுதும் விழிப்பாக இருக்க!"
"கடுமையாகவும் கருத்தோடும் உழைக்க!"
"எந்த நேரமும் எதுவும் நேரலாம்"
"ஒவ்வொரு நொடியும் அருமை மிக்கதே"

என்பவை போன்ற எழுத்துகள் அதன் நேர்ச்சிநிலையை விளக்கிக் காட்டின.

சுரங்கத்தின் வெளிப்புற வாயிலில் இருந்து பீச்சிய காற்று, உச்சி மலைமேல் நிற்பானை உருட்டியடிக்கும் சுழிக்காற்றுப் போலவும், செவியைச் செவிடாக்க வல்ல ஒலிபோலவும் இருந்தது. அதனையும் பிற பொறி வகைகளையும் கண்டோம்.

நண்பகல் உணவுக்குமேல் நிலக்கரி அகழ்மலை அமைப்பு அதன் சுழல் அடுக்குகள் சுமையுந்துச் செலவு வரவு ஆழ்ந்தபள்ளத்தாக்கு என்பவை கண்டு, அந்நிலக்கரிக் குழும்பு அமைத்துக் காட்சிப் படுத்தியிருந்த காட்சியகமும் கண்டோம். நிலக்கரி பற்றிய வரலாறு, அகழ்பொறி, அகழ்வகை, தூய்மைப்படுத்தல், அதற்கு உழைத்தவர் என்பவை பற்றியும், பொதுவகையில் ஒவ்வொரு பொறியும் வளர்ந்த வளர்வும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. விளக்கு வளர்ச்சி, ஒலி வளர் பொறிகள், இசைக்கருவி (போனோ கிராப்), தொலைப்பேசி, கணினி முதலியவை எல்லாம் வளர்ந்த வகை காண வாய்த்தது.

6.4.2013

05.4.2013 இரவு 11 மணி வண்டி 6.4.2013 நண்பகல் அளவில் கௌகத்தி எய்துவது. அதில் ஏறி 11.15 மணியளவில் எய்தினோம். ஆங்கிருந்து திரும்பும் போது, போகும் இரவில் காணமுடியாத காட்சிகளைப் பகற்போதாகலிற் காண முடிந்தது.

ஊருக்கு இரு குளம் அல்லது குட்டை என்பது ஒவ்வொரு வீட்டுக்கும் அமைந்தது போல் விளங்கியது. நீர்ப்பயன், நிலத்தடி நீர், மீன் வளம் எல்லாம் பெறவும், மீன்வளர்வால் இயற்கை முறைக் கொசு வொழிப்பு நிகழ்தலும் காணவாய்த்தது. அரிய பெரிய சமனிலம் அது. மலைப் பகுதி இல்லை. தஞ்சைப் பகுதியை நினைவூட்டியது. **இலங்கா, அசூர், நாராங்கி, சோராபேட், கம்பூர்** என ஊர்ப்பெயர்கள் எண்ண வைத்தன. மாலையில் சங்கரர் கலாசேத்திராவை முகப்பில் இருந்து கண்டோம். முகப்பு எழில் மிக்கது. புதிய இசை - கூத்துச் சிற்பங்கள் - உள்ளே அசாமிய மொழிக் காட்சிப்படம். ஆதலால் அரசின் சிற்பக் கலைக் கூடம் அடுத்திருப்பதறிந்து ஆங்குச் சென்றோம். வடமாநில வடகிழக்கு மாநிலக் கலைக் காட்சியகம் அது. வணிக வளாகமும் கூடியது. இராமேசுவரம் திருச்செந்தூர் கன்னியாகுமரி போல விற்பனைக் கடைகள் பல்கிய பகுதி. வேண்டுவோர் வேண்டுவ கொண்டனர். கண்ட அளவில் கண்களுக்கு விருந்து தந்து போனபடியே யான் திரும்பினேன். பொழுதும் போயது. மாலை 7 மணி அளவில் மீண்டு தங்கல் மனை எய்தினோம்.

07.04.2013

காலை 6.15 அளவில் **பூட்டான்** நாட்டைக் காணப் புறப்பட்டோம்.

வரும் வழியில் தொலைத் தொடர்பு வளாகம் கண்டோம். முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் காட்சியொடு நில்லாமல் சிற்றுண்டியும் கொண்டோம். அவ்வுணவே **இட்டலி, தோசை, வடை, பச்சுணி, பருப்புக்குழம்பு** என அமைந்து தமிழ்நாட்டுணவைத் தந்தது. பலநாள்கள் ஆயிற்றே சப்பாத்தி உணவு கொள்ளல்! சரவணனாரோடு தங்கலில் சோறு குழம்பு, தொடுகறி, சாறு எனப்பலவும் உண்டு. ஆனால் எவ்வுணவொடும் இருப்பது செங்கிழங்கு (கேரட்டு) பெரிய வெண்காயம், வெள்ளரித் துண்டுகள்!

தொலைத் தொடர்புப் பகுதியை முழுதுறக்கண்டோம். பூட்டான் வரை வந்து வழிகாட்டுதவிபுரியச் **சந்திர சேகர்** தக்கார் ஒருவரை ஏற்பாடு செய்தார், அவர் படப்பிடிப்பாளரும் ஆகியவர்.

பூட்டான்போம் வழிப் பிரிவில் இந்தியப் படைப்பயிற்சி வளாகம் இருந்தது. அதனைக் கண்டு பின்னர்ப் பூட்டான் நுழைவாயில் பகுதியை அடைந்தோம். அங்குச் சற்றே ஓய்வு கொண்டு புத்தர் கோயிலைக் கண்டோம்.

பெரிய வளாகம் அது. கொடி, நெடிய தொங்கல்! ஐம்பகுப்புடையது! கோயில் மூவடுக்குடையது. இங்கும் அங்கும் பொங்கிகள் (பௌத்தத் துறவர்கள்) சீவர (காவி) உடையில் உலாவினர். கோயிலைச் சுற்றிலும் துறவர் உறைவிடங்கள்! இரட்டைமாடியுடன்.

புத்தர் கோயிலுள் பெரிய அளவில், அமர்ந்துள்ள புத்தர் சிலை. 'வடிந்து வீழ்காது'களுடன் தோற்றம். முன்னே நீர்க்கிண்ணங்கள்! துளசிநீர் புனித நீராக வழங்கப்படுகிறது. "அமைந்த உள்குதல் குருதிக் கொதிப்பை அடக்கும்" என்னும் கருத்துப்பதிவும், அமர்ந்து அமைதி கொண்டு வழிபடு நிலையும் கண்டோம். அரிசி மூடை ஒன்றை எங்கள் கையில் தந்து திருமுன் வைக்கக் கூறினர்! பசிப்பிணி தீர்க்கும் கருத்தொடு கூடிய தாகலாம்! ஐந்தடுக்குக் கொடி ஐந்தொழுக்கக் குறிபோலும்! மூவடுக்கு முகடுகள் காமம் வெகுளி மயக்கம் நீங்கிய சான்றாகலாம்! இரண்டு மூன்று அகவையரும் சீவர உடையில் இருக்கக் கண்டோம்.

என் நினைவில் திரு.வி.க. நின்றார்.

"பொங்கிகள் சீவர உடை உடுத்து விலாப்புடைக்கப் புலால் உண்கிறார்கள். சிறார்கள் சீவர உடையில் இருத்தல் கண்ணறாவிக் காட்சி" என்று தம் ஈழச் செலவில் எழுதியதை நேரில் கண்டு வருந்தினேன்!

மழித்த தலையுடைய சிறான் ஒருவனை நோக்கினேன். பல வண்ணமாய்ப் பொத்து வழிந்த புண்ணொடு நின்று, நெஞ்சைப் புண்ணாக்கினான். வீட்டுக்குத் தலைமகனைத் துறவுக்கு உட்படுத்தல் வழக்கமாம். உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர் வழக்கிலும் இம்முறை உண்டு.

சுழல் உருளைகள் சின்னஞ்சிறியது முதல் பென்னம் பெரியது (எட்டடி விட்டம், பன்னீரடி உயரம்) வரை கையால் சுழற்றஅதில் பொறிக்கப்பட்ட எழுத்தைப் படிக்க வகை செய்துள்ளார்கள் ஒரு சுற்று வந்ததும் மணியோசை கிளப்பவும் கம்பி நீட்டி அமைத்துளர். அது மணி நா அசையத் தட்டிவிட்டுச் சுழல்கின்றது. புத்தர் பொன்மொழிகளை வழிபடவருவார் எளிதில் கற்கச் செய்த ஏற்பாடு அது.

புறாக்கள் கூட்டம் கூட்டமாக உள. ஊர்ப்பகுதி கடைத்தெரு ஆயவற்றிலும் புறாக்கள் சிறிதும் அச்சமின்றித் திரிகின்றன. அவற்றுக்குத் தீனி சிதறிவிடல் வழக்குப் போலும்! காக்கைக்குச் சோறு

போடலும், பருந்துக்குச் சிவனியரும் புலால் போடச் செய்தலும் தமிழகக் காட்சிகளாதல் எண்ணினேன். பூட்டான் மன்னராட்சியது; ஆயினும் இந்திய நட்புக் குரியது. ஆதலால், நேரில் இசைவு கேட்டு ஒரு பகுதி வரை சென்று பார்க்கலாம்! நண்பகல் உணவு, முன்னே ஓய்வு கொண்ட வளாகத்திலேயே உண்டோம்! 2 மணியளவில் மீண்டு தொலைத் தொடர்பு வளாகம் சென்றோம். சந்திர சேகரர் இணையர் வரவேற்றுச் சிற்றுண்டி வழங்கி மகிழ்வித்தனர். கௌகத்திக்கு மீண்டு 7 மணி அளவில் சரவணனார் உறைவகத்துத் தங்கினோம். அவ்வூர்ப் பெயர் **கம்பூர்** என்பது. செல்லும் வழியில் **தமிழ்பூர், தமல்பூர்** என்பவை காணப்பட்டன.

மா லட்சுமி, **மா** சரசுவதி, **மா** சக்தி என்பவை தெய்வப் பெயர்களாக உள. மகா, **'மா'** என்று நினையச் செய்கின்றது.

அசாம் அரசையோ நடுவண் அரசையோ எதிர்த்து முழங்கி ஊர்வலம் ஒன்று சென்றது. சில்லாங்கு தொடரிச் சந்திப்பு நுழைவாயிலில் வலிய குரலில் ஒரு கூட்டத்தின் முன் ஒலி பெருக்கி வைத்து முழங்கினார். அவர் பேசியது அசாமிய மொழி எனினும், தமிழே போல் செவிக்கண் அதன் அமைவு பட்டது. இரண்டு மொழிகளும் ஆய்வோர் பார்வையில் ஒப்பீட்டுவளம் தோன்றும் எனத் தோன்றியது. பூட்டானில் இருந்து திரும்பு வழியில் சரவணனாரிடம் உரையாடிக் கொண்டு வரவாய்த்தது.

விவேகானந்தர் வீறுமிக்க விழுமியர்; மெய்யியல் தேர்ச்சியர்; தொண்டில் தோய்ந்தவர். அவரே, "உலகத்தில் ஒப்பற்ற சிந்தனையாளராகத் திகழ்ந்தவர் புத்தர்" என மதிப்பிட்டார். அப்புத்தர், **இறப்பு, முதுமை, நோய்** என்பவை கண்டு துறவுபூண்டார் என்பது **வரலாறு.** அவர் பிறக்கும் போதே தாயற்ற சேயானவர்; முத்தைத் தந்து சாவுற்ற சங்குப்பூச்சி அன்னபிறப்பர்! இறப்பை அறியாதவரா?

தம் தந்தை சுத்தோதனர் முதுமை, தாம் அடையும் வளர்ச்சி முதுமை மணமுடித்து மகப்பேறும் பெற்ற பின்னர்த் தாமா அறிந்தார்?

நோய் என்பது நீர்க் கோவையும் தலைவலியும் நோய்கள் தாமே! இவை இல்லாமலா வளர்ந்தார்! மருத்துவராக இருப்பார்க்கும் நோய் ஏற்படாமல் இல்லையே! பேரறிவர்க்கு இவையெல்லாம் அறியாப்பொருள்கள் என்பது பொருந்துவதாகுமா?

அவர் நாட்டுக்கும் அண்டை நாட்டுக்கும் ஏற்பட்ட ஆற்றுச்சிக்கல் ஒன்று கண்டார். தீர்க்க இயலா நிலையும் கண்டார். மாந்த மனம் தம் நலத்தால் எத்தகைய கெடுநிலை யுறுகின்றது! இவற்றைத் தீர்க்க வழிகாண வேண்டும் எனத் தவித்தார்! பிரிய விருப்பமில்லாமல் குடும்பப் பற்றுமைக்குரிய தந்தை, துணை, மகன் என்பாரையும் பிறரையும் பிரிந்து உலகியல் ஆய்வு செய்தார்! உளவியல், சமய இயல் என்னும் மெய்யியல் ஆய்வில் தோய்ந்தார்; பட்டுணியால், நோயால், இயற்கை ஒறுப்பால் எவ்வளவோ அல்லல்களை உற்றார். அவற்றை எல்லாம் தாங்கி எப்படியும் உலகுய்யும் வழிகாண அவாவினார். ஆசையே துயர்க்கு அடிப்படை எனக்கண்ட அவர், அதனை ஒழிக்கும் வழிகாண அவாவினார்! ஆனால் கண்டாரில்லை!

வயிற்றில் விரலை வைத்தால் முதுகந்தண்டு படுமாறு உண்ணாநோன்பு மேற்கொண்டார். இயக்க மற்ற பொறி, புலச் செயல்கள் அற்ற நிலையில் இருந்தார். அவர் இருந்த இடம் ஓர் அரசமரத்து அடி! அவ்வழியே தான் வழிபடு தெய்வமாம் **இயக்கிக்குப்** படைக்கப் பாற் சோற்றுடன் ஆயர்மகள் **சுசாதா** என்பாள் சென்றாள். அவள் புத்தர் நிலைகண்டு உருகினாள்! குழந்தைக்கு உருகும் தாயானாள்! பாற் சோற்றைப் புத்தர்க்கு ஊட்டினாள்! மயக்க நிலையில் இருந்த புத்தர் இன்னார் என அறியா ஒருத்தி, வேண்டல் தூண்டல் இல்லாமல், பயன் எதிர்பாராமல் தமக்கு ஊட்டிய உணவை நினைத்தார்! உடலோம்பலால் உயிரோம்பிய உயர்வை உன்னினார்! **"பயன் எதிர் பாராமல் பிறர்க்குச் செய்யும் உதவியே - தொண்டே. உலகம் நலம் பெறத் தக்க ஒரே வழி"** என்னும் ஞானம் பெற்றார். **போதம்** பெற அடிப்படையாக இருந்த மரத்திற்குப் பெருமை வாய்த்தது. அரசமரம் போதிமரம் என்னும் பெருமை எய்தியது. புத்தர் **போதி மாதவர்** எனப்பட்டார்.

எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணிப் போற்றும் பெருந்தகையாம் பிறர்க்கென வாழும் வாழ்வே பேறமைந்த வாழ்வு; அதனைச் செய்தலும், பரப்பலும் தம்கடன் என மேற்கொண்டார்! அவர் நெறி பௌத்தம் ஆயது.

வேள்வியில் உயிர்ப்பலி இடுதலைக் கடிந்தார். வேந்தர்கள் வேதிய வேள்விக்கு அடிப்பட்டு நின்றதை அகற்றப் பாடுபட்டார்! அவர் எண்ணியவற்றை மக்கள் மொழியில் கூறினார்! எழுதியும் வைத்தார்!

அருவிநீர் தன் தூய்மை இழந்து சாய்க்கடை நீர் ஆவதுபோல், வழிவழியே நாறும் பிண நிலையை இன்று அடைந்து விட்டது அது.

அவரிடம் ஒருவர், உலகியல் தொண்டுபற்றிப் பேசுகிறீர்கள்! விண்ணுலக இன்பம் பற்றி எதுவும் சொல்வதில்லை என்றார்! அதற்குப் புத்தர், முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கு வெளி உலகம் தெரியாது. அவ்வாறே எனக்கும் இவ்வுலக வாழ்வில் இருக்கும் வரை அவ்வுலகம் பற்றியோ அவ்வாழ்வு பற்றியோ தெரியாது என்றார்!

ஒருவர் "நீங்கள் எவ்வளவு பெரிய ஞானி!" எனப்புகழ்ந்தார்!

புத்தரோ, "தம் மூடிய கைக்குள் என்ன இருக்கிறது" என அவரைக் கேட்டார். "கையை மூடியிருப்பதால் அதனுள் இருப்பதைச் சொல்ல முடியாது" என்றார்.

"மூடிய கைக்குள் இருப்பதே தெரியாது என்றால் என் ஆழ்மனத்துள் இருப்பதை எப்படி அறிவாய்?" எனவினவி, 'இதோ பார் ஓர் இலை' என்று கூறி "இம்மரத்தில் உள்ள இலை ஒன்று இது. இம்மரத்தில் இன்னும் எத்தனை இலைகள் உண்டு! இம்மரம் போல் உலகில் எத்தனை மரங்கள் உண்டு! என் கையிலுள்ள ஓரிலையைக் கொண்டே என்னை ஞானி என்கிறாய்" என்றார்!

அத்தகைய அறிதோ றறியாமை கண்டவர் புத்தர். ஆதலால் அவரை அறிவர் என்றும் அறவர் என்றும் உலகம் போற்றியது. புத்தர் கோயிலில் அவர் கூறிய எழுத்துண்டு. ஓவியங்கள், புத்தசாதகக் கதைப்புனைவுகள் தழுவியவை! கதையும் புனைவும் ஆக்கினர் அவர் வழிஞர்; **அவர் கொள்கைக்கு மாறாம் கயமைகளையே வாழ்வாக்கித் தந்நலத்தராகவே நின்று கடனாற்றுகின்றனர்.**

எச்சமயமும் தோற்றுவித்தார் பேரருள் பேரறப் பேறுகளைப் புறந்தள்ளி, இந்நாள் அரசியல் கட்சியர் அரியணை ஏறிச் செய்யும் சீரழிவுகளை ஒப்பவே செய்யும் கும்பலைத் திரட்டித் தாம் தலைமை வீறு கொள்ளவே வாழ்கின்றன!

சமயங்கள் செவ்வையாய் இருந்தால், சட்டங்களுக்கு வேலையே இல்லை! வழக்கு முறைமன்றம் ஏறா அரசியலர் இல்லாமைபோல், சமய வாணரும் இல்லை என்னும் நிலையே இற்றை நிலையாம்!

புத்தர் கோயில் தூண்டிய தூண்டல் படித்த நூல்கள் கருத்துகள் எல்லாவற்றையும் கண்முன் காட்டின! **சரவணர்** அமைந்து கேட்டார். அருமை மகளார் **கலைநிதியாரும்** ஒருமித்துக்கேட்டார்.

உளங்கூர் கேள்வி இளம்பூரணர், என்னும் கேள்விச் செல்வர் என் நினைவில் கிளர்ந்தார்! **வாய்மொழி வள்ளுவர் கேள்வியும்,** என்னுள் பளிச்சிட்டது!

தங்கள் இல்லத்திற்கு வந்தோரை வீட்டார் கால்தொட்டு வணங்கல் கண்டோம்! எவ்வீட்டுக்கு அல்லது விருந்துக்குச் சென்றாலும் முதற்கண் குவளையில் நீர் வழங்கல் கண்டோம்!

எங்கும் மகளிர் சீலையின் முன்தானையை வலமாகப் போட்டுத் தொங்க விடுதல், தமிழகத்து **'வல இடையர்'** என்பார் நினைவை ஆக்கியது. அவர்கள் உடைமுறையையும் எண்ண வைத்தது.

வீட்டை ஒட்டியே குட்டையும் நீரும் இருந்ததால் மீன் வளர்ப்பும், மீனுண்ணல் இயல்பும் உண்டாயது என்றும், இறந்து காய்ந்ததை (கருவாடு) உண்பது இல்லை என்றும் மீன்வளர்ப்பால் கொசுத் தொல்லை இல்லை என்றும் கூறினர்.

08.04.2013

இன்று காலை 7 மணிக்குக் **காமாக்கியா** நிலையத்தில் இருந்து கயை (கயா) செல்லும் தொடரியில் ஏறவேண்டும். 5.45 அளவிலேயே புறப்பட்டுச் சென்றோம். ஆனால் வண்டி பகல் 1 மணிக்கு வரும் என்னும் குறிப்பை நிலையத்தார் வழியே அறிந்து மீண்டும் இல்லம் சேர்ந்து உண்டோம்; உரையாடினோம்! உரையாட்டு அதுவும் அறிவார்ந்த உரையாட்டு தெளிவை உண்டாக்கும். செயன்மைச் செம்மையை ஊக்கும்! வீண் சொற்கள் மட்டும் முரண் எண்ணம் மட்டும் படர்தல் பயன் செய்யாது. ஏனெனில் பயனில சொல்லாமை வள்ளுவம். மீளவும் ஒருமணி வண்டியில் ஏற 12மணிக்குப் புறப்பட்டோம். **இரண்டரை மணிக்கே** வரும் என்றும், மூன்றரைக்கு வரும் என்றும் கூறினர். **3.45 மணியளவில் புறப்பட்டது.** மாலைப் பொழுது சுருங்கியது. 5 மணி 5½ மணிக்கே இருண்டுவிடும். 5 மணிக்கே கதிர் எழுந்துவிடும். ஆதலால் பொழுது இருண்டதால் 7 மணிக்கே உணவை முடித்துப் படுக்கலானோம். வழக்கமாக வண்டி ஓடும் நேரம் 22 மணி. ஆனால் அந்நேரமும்

தாழ்த்துக் கயையைப் பகல் மாலை 4 மணியளவில் சேர்ந்தது. நேரே சரவணர் ஏற்பாட்டின் படி வாடகி எய்தியிருந்தது. கயையில் அறைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆனால் பொழுது போகுமுன் கயையைப் பார்த்து விடும் வகையில் நேரே சென்றோம். 7 மணிவரை கண்டோம். பின்னர்த் தங்கல் இடம் வந்து பொருள்களை வைத்துவிட்டு உணவகத்தைத் தேட வேண்டியிருந்தது. ஏனெனில், வெளிநாட்டவரை நோக்கிய ஊணகத் தங்கல் விடுதி அது. வெளியே சென்றால் செல்லும் வழியெல்லாம் புல்லுணவு (சைவ) ஊணகம் இல்லை! ஒரே ஓர் உணவகம் தூய புல்லுணவகம் என்னும் பலகை கண்டோம்.

இட்டவிக் கொப்பறை முன்னிருந்தது. இட்டவி கிடைக்கும் என எண்ணிப் புகுந்தோம். எப்பொழுதோ அவித்த ஆறி அலர்ந்த இட்டவி, அதற்கு எதிரிடையான சுடுபருப்புக் குழம்பு! புத்தர் பெருமை மிக்க இந்தப் புனித மண்ணில் ஒரோ ஓர் எளியநிலைப் புல்லுணவுக் கடை கண்டது பூரிப்பாகக் கொள்ள வேண்டும். தோசை, சோறு என்பவும் ஆங்குக் கிடைக்கும். எங்களுக்கு ஏற்ற அளவில் ஏற்றதை உண்டு, 9 மணியளவில் விடுதி எய்தினோம்.

கயைக் காட்சி - வரலாறு பற்றிக் காணலாம்.

❖❖❖

கயை குறிப்பு :

பாட்னா நகருக்கு நூறு அயிரம் தெற்கில் அமைந்த நகர். பீகார் மாநிலம் சார்ந்தது.

பன்முடிகளையுடைய மலைகளுக்கும் **பால்கி** ஆற்றுக்கும் இடையே அமைந்தது கயை. வெப்ப நீர் ஊற்றுடைய குளம் இங்கு உண்டு.

கயையின் தெற்கில் 6 கல்தொலைவில் **புத்த கயை** அமைந்துள்ளது. இங்கு ஓடும் ஆற்றின்பெயர் **இலாசன்** என்பது.

போதி மாதவர் எனப்படும் புத்தர் பெரும் போதம் (அறிவம்,ஞானம்) பெற்றதாகச் சொல்லப்படும் **அசுவத்தா** (அரச) மரம் உள்ளது. சமயச் சார்பின்றி அனைவரும் வழிபடும் மரமாகவும் பாரித்த வளமுடைய தாகவும் அம்மரம் உள்ளது.

இறந்த முந்தையரை நினைத்து வழிபாட்டுக் கடனாற்றும் சிறப்புடைய தென்பது **தொன்மச்** செய்தி.

மகத நாட்டுப் **பல்கலைக் கழகம்** கயையில் அமைந்திருந்தது.

கயை என்னும் அசுரன் பெருவேள்வி செய்த இடம் ஈதாகலின் இப்பெயர் பெற்றது என்பது தொன்மச் செய்தி. இதனின் வேறுபடுத்திக் காட்டவே, புத்த கயை (புத்தகயா) என ஊர்ப்பெயர் அமைந்தது.

10.04.2013

நாலந்தாவைக் காணப் புறப்பட்டோம். காலை 7 மணி. செல்லும் வழியில் புல்லுணவு விடுதி ஒன்றுள் புகுந்து சிற்றுண்டி முடித்துச் செலவைத் தொடர்ந்தோம். சூழலெல்லாம் மலைகள். நாலந்தா, நீள அகலக் கணக்கில் சிலகல் தொலைவுப் பரப்புடையது. இடைவெளி விட்டுக் கோட்டைகள் போல் உயரமாய் அகலமாய் அமைந்த செங்கல்லால் ஆயவை. கட்டடங்கள் செங்கல் வரிகள் மண்ணும் சுண்ணாம்பும் கலந்த கலவையாய்ப் பூச்சின்றி உள்ளவை.

இடம் புல்வெளி, மரங்கள், கட்டடங்கள் எனச் செறிந்தவை எனினும், தூய்மை போற்றப்படுதல் பாராட்டுக்கு உரியது. பலப்பல அறைகள் முகடுகள் இல்லாத் திறவையாய் உள்ளன. சில அறைகள் சுண்ணாம்புக் கலவையால் வளைவுற ஆக்கப்பட்டவையாய் உள. ஒவ்வொரு

படிக்கட்டிலும் முழுதுற ஏறி இறங்க வேண்டும் என முடிவெடுத்தால் 4,5 மணிப் பொழுது வேண்டியவை.

சுட்டெரிக்கும் வெயிலோ கொடுமையிலும் கொடுமை! கொட்டும் மழையும் வாட்டும் பனியும் கொதிக்கும் வெயிலும் வடக்கு மாநிலங்களின் பொது இயற்கை. தமிழகத்தோ பனி, மழை, வெயில், காற்று உண்டு எனினும் இவ்வளவு துன்புறுத்தும் நிலை இல்லை என்பது கிட்டுதற்கு அரிய பேறாய் வாய்த்ததாம். நாலந்தா புதிய வளாகமும், பொருட்காட்சி நிலையமும், திரைக்காட்சி வளாகமும், ஓவியக் காட்சி வளாகமும் தனித்தனியே உள.

தனித்தனியாகத் திருக்கோயிலில் திருவுருவங்களை ஏற்படுத்தி தனித்தனி வழிபாடு செய்யவைத்து தனித்தனிப் பறிப்பு நடத்தும் தமிழகத்துக் கோயில் போல ஒருகல் இரண்டுகல் தொலைவு இடைவெளி விட்டுத் தனித்தனி அமைப்புகளை உருவாக்கித் தனித்தனி நுழைவுச் சீட்டு 20,30,40 என வாங்குதல் பணப்பறிப்பு நோக்குடையவை. பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுத் தொல்பொருள் துறை சார்ந்தவை.

ஒவ்வொன்றாகப் பார்த்து மீளும் வழியிலும் மலையில் இருந்து வெந்நீர் ஊற்று, அறிவிப்புப்பலகை கண்டு சென்றால், “இந்து சமயத்தர் மட்டுமே செல்ல வேண்டும்” என்னும் அறிவிப்பு. நான் இந்துவும் அல்லன்; எந்தச் சமயத்தனும் அல்லன்; இயக்காற்றல் நம்பிக்கை, இயற்கை ஈடுபாடு ஆன்ம நேயத்தையுடைய சால்பியத் தமிழன். எனக்கு அங்கே என்ன காட்சி!

“சார்பு உணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்”

என்னும் **சால்பியம்** பற்றிய யானும், அன்பர் வேலாவும் போதி (அரச) மரத்தடிப் படி ஒன்றில் அமர்ந்தோம்! வெந்நீர் வருதலையும் மூன்று நான்கு இடங்களில் சிறிய சிறிய அளவில் வழிவதாகவும் கூறினார். வெந்நீர் ஊற்றுகள் உண்டு என்னும் வரலாறு அறிந்தது தானே!

ஆங்கிருந்து மீளும் வழியில் அந்த இடத்தில் அது! இந்த இடத்தில் இது – என வண்டிச் செலவை நீட்டிப் பணம் பண்ணல் வழக்கம் என்பதால் மாலை 6.45 மணிக்குத் தங்கல் விடுதி அடைந்தோம்.

புத்தர்கதை, புத்தகயா, நாலந்தா முதலியவை நாம் அறிந்தவையே. புத்தர் சிலை அருகர் சிலை ஆகியவை மிகப் பெரியதாய் வழிபாட்டிடங்களில் உள. காட்சியங்களில் சிறிதாய் உள.

தமிழகக் காட்சியங்களிலும் ஆங்காங்குக் கிட்டியவை வைக்கப்பட்டுள. இந்தியம் அன்றி அயல்நாடுகள் பலவற்றிலும் புத்தசமயம் அரசுச் சமயமாம் அளவில் திகழ்கின்றது. சீனம், சப்பான், இலங்கை, தாய்லாந்து முதலியவை அவை.

சமணம் மிகுந்த கடைப்பிடி உள்ள சமயம். அதன் நோன்பு கட்டமைவு பெரிது. அதனால் அரச சமயமாகத் தோன்றியும் பெரும்பரவுதல் அற்றது. ஆனால் அரிய சமயம்; அச்சமயத்தில் மாற்றுவழிக் களங்கம் புகுந்து வட்டிக்கடை, தங்கக்கடை எனப் பணச்சமயம் ஆயது.

இசுலாமியம் வட்டியை எதிர்ப்பது; ஆயினும் மாற்றுவழி கண்டுள்ளது. இறை பெயரால் கொடுமை செய்வது. நபிகள் நாயக அறவர்க்கு ஒப்பாதது. கிறித்தவமோ ஆட்சியர் கையில் படைக்கருவியும் ஒடுக்கி அழிக்கும் நேயமற்ற செயலும் உடையதாய் அமைந்தது. கிறித்து வழிபோற்றும் அறவர், துறவர் தொண்டால், உலகப் பெருஞ்சமையம் ஆயிற்று.

ஆயினும் **எல்லாச் சமயங்களும் அறவர் சமயம் போற்றி அயற்சமயப் பழிப்பு கேடு இன்றி இருப்பின் உலகுக்கு நலமாம் என்னும் எண்ணம் ஒருபால் அரும்பி வளர்தல் மகிழ்வாகின்றது.**

வள்ளுவ நெறி, வள்ளலாரியம் உலகியல் சமயம் ஆகும் காலம், அருளாளர், அறவோர், துறவோர் கையில்புகுந்தால், சமயச் சால்பு தலையெடுக்கும்! மாந்த நேயமும் ஆன்ம நேயமும் விரியும் என்பது தெளிவு. அது தமிழர் கையில் இல்லை; உலகவர் பார்வையில் உள்ளது!

❖❖❖

நாலந்தா குறிப்பு :

கங்கை ஆற்றின் கரையில் அமைந்தது நாலந்தா. பீகார் மாநிலம் சார்ந்தது. புத்தர்காலம் தொட்டே சிறந்து விளங்கிய பல்கலைக் கழகமாக நாலந்தா விளங்கியது. இங்கே அருங்காட்சியகமும் (1956) குறும்படக் காட்சியகமும் புதுவதாக அமைக்கப்பட்டுள. புதிய நாலந்தாப் பல்கலைக் கழகமும் கிளர்ந்துள்ளது.

இருமுறை (1862-1882; 1916) அகழாய்வு செய்யப்பட்ட இடம் இது. இதனால் அறியப்பட்ட செய்திகள்.

குப்தர் காலப் புத்த மடவிகாரைகளும் தூபிகளும் (தூண்களும்) வெளிப்பட்டன. புடைப்புச் சிற்பங்களையுடைய கற்றளிகள் காணப்பட்டன. தோரணவாயில்கள், போதி மாதவர் உருவங்கள் காணப்பட்டன.

கல்வெட்டு ஒன்று கி.பி. 516-517 இல் கட்டப்பட்ட செங்கல் மேடையில் உள்ளது. அதனால் அது கட்டப்பட்ட காலத்தை அறிய வாய்க்கின்றது. குப்தர்காலக் காசுகள், புத்தர் சிற்பங்கள், மாழை (உலோக)ப் படிவங்கள், சுடுமண் பொம்மைகள், முத்திரைகள், மகாவீரர் சின்னம் பொறிக்கப்பட்ட இலச்சினை, காசு அடிக்கும் அஃகசாலை ஆகியவை காணப்பட்டன அகழ்வு ஆய்வினால்!

பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்களுள் சிறந்த இடம் பெற்றது நாலந்தாப் பல்கலைக் கழகம்.

அர்ச வர்த்தனர் காலத்தில் சிறந்து விளங்கியது. மகத நாட்டுத் தலைநகராகிய இராச கிருகத்தில் இருந்து 12 அயிரம் தொலைவிலும், பாட்னா எனப்படும் பாடலி புத்திரத்தில் இருந்து 60 அயிரம் தொலைவிலும் அமைந்தது. கங்கைக் கரையில் உள்ள **பார்கான்** என்னும் ஊரில் அமைந்தது.

கி.பி நான்காம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டுவரை இப் பல்கலைக் கழகம் சிறந்து விளங்கியது. நாகார்சுனர், தருமபாலர் என்னும் பெரும் பேராசிரியர்கள் பணியாற்றிய பெருமையது. உலகளாவிய புகழ்வாய்ந்தது. சீனத்து யுவான் சுவாங்கு இங்குப் பயின்றவர். ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருங்கே உண்டுறைந்து பயின்றவர் கல்விநிலையம் இது.

மகாயானம், வேதங்கள், பாணினி வியாகரணம். மருத்துவம், சட்டம், மெய்யியல், மொழிநூல், வானியல், வடமொழி, பாலி என்பவை இங்குக் கற்பிக்கப்பட்டன.

இரத்தின சாகரம், இரத்தினததி, இரத்தின ரஞ்சகம் என்னும் மூன்றும் நூலகங்கள் (மணிக்கடல், மணியமுது, மணிச்சுவை)

பல்கலைக் கழகம் ஆறடுக்கு மாடியில் செயல்பட்டது. பயின்ற மாணவர்கள் 10000 பேர். கற்பித்த ஆசிரியர்கள் 1150.

குப்த அரசர்கள் பால அரசர்கள் ஆகியவர்களால் பேணி வளர்க்கப்பட்டது. 12 ஆம் நூற்றாண்டில் பால அரசர் தம் பேணலை விக்கரம சீலப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றினார். நாலந்தா பொலிவிழந்தது. இசுலாமியப் படை யெடுப்பால் முற்றிலும் சிதைவுற்றது.

நூல் : பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்கள்.

❖❖❖

சில குறிப்புகள்

- பொது இடம், தனியார் இடம், வீடு, சுவர் ஆயவற்றில் விளம்பரம் செய்தல் காணப்பட வில்லை. தனியே விளம்பரப் பலகைகள் வைத்தோ தட்டி வைத்தோ தான் விளம்பரம் செய்தலைக் காண முடிந்தது.
- நெடுஞ்சாலை குறுஞ்சாலை ஆயவற்றில் சிறிய மிகச்சிறிய விற்பனைக் கடைகள் உள்ளன. புல்லுணவுக் கடைகளை (சைவக் கடைகளை) எங்கோ அரும்பாடுபட்டுத் தேடியே கண்டு பிடிக்க வேண்டும்.
- புத்தமதப் புனித நிலங்களாம் கயை, புத்தகயை, நாலந்தா முதலிய இடங்களிலும் இந்நிலை தான்!
- வாடகி யோட்டுதலை வாடிக்கையாக யுடையவர் தம்மைக் கொண்டே எங்கோ ஒரு கடை இருப்பதை அறிந்து அதற்கென முயன்றே உண்ண வேண்டும்.
- பெரும்பாலும் தொடரிச் சாலைகள், பேருந்துத் தடங்களோடு நெருக்கமாகவே அமைந்துள.
- சுற்றுலா மையங்கள் என்பவை வேறுபாடு இல்லாமல் வாடகை, பொருள் விலை, வழிகாட்டித் தொல்லை, கையேந்து பிழைப்பு, நுழைவுச் சீட்டுமிகை என்பவை நீக்கமில்லாமல் உள்ளன.
- பதிவு இருக்கை, பதிவுப்படுக்கை என்பவை பொதுப் பயன் உள்ளவையாக உள்ளனவே அல்லாமல் உறுதிப்படுத்தப் பட்டவை என்று சொல்ல முடியாது. அதனைத் தணிக்கையரும் காவலரும் கண்டு கொள்வதும் இல்லை.
- வண்டிக்கு நீரேற்று குழாயைத் திருக்கித் தண்ணீர் குடித்துப் பீச்சியடிக்க அவ்வாறே விட்டுச் செல்வாரையும், நிலையத்தார் கண்டு கொள்ளல், நீர் கொட்டலை நிறுத்துதல் அரிது.
- காலை, பகல், இரவு உணவுகள் சப்பாத்தி, பூரி, உருளைக்கிழங்கு என்பவற்றுடன் பெரிய வெண்காய வட்டத்துண்டுகள், வெள்ளரி வட்டத்துண்டுகள், செங்கிழங்கு (கேரட்டு) வட்டத்துண்டுகள், தக்காளி வட்டத்துண்டுகள் கட்டாயம் உண்டு. அரிசிச்சோறு உள்ள இடமாயினும் இவை அச்சோற்றுடன் உண்டு.
- சாய் சாய் (சாயா, தேநீர்) என நூறு வந்தால் காப்பி (குளம்பி) என ஒன்று அரிதில் தலை நீட்டும்.

- கையேந்தி வருவார் சமயக் கோலம் கண்டு அச்சமயச் சார்பர் உதவுதலைக் காணமுடிந்தது. மாந்தநேயக் கொடையாக இன்றி 'மதஞ்சார்' கொடையாக அறிய முடிந்தது.
- வண்டிகள், விளம்பரப்பலகைகள், தொடர்வண்டி நிலையங்கள் ஆயவற்றை ஆங்கிலம் கற்றாலும் இந்தி கல்லார் அறியார் என இந்தி வல்லாண்மை பல இடங்களில் காண முடிந்தது. இந்தி இந்தியா வாக்கலே வடவர் முடிவு என்பது வெளிப்படை.
- நெகிழிக்கு (பிளாசுடிக்கு) மாற்றாக மண்குவளையில் தேநீர் வழங்குதல் ஒரு சில பகுதிகளில் உள்ளமை பாராட்டுக்கு உரியது. மண்மணமும் தோன்றவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.
- குவாத்தி அல்லது கௌகத்தி தறிநெயவைத் தலைத் தொழிலாகக் கொண்ட இடம். அங்கு உலகமயம் என்னும் பேரால் அத்தொழிலை முடக்கி அயலவர் செய்யும் அடாவடித் தனத்தை எதிர்த்து வலுவாக நிற்கின்றனர். ஊர்வலம், உண்ணா நோன்பு, விளக்க முழக்கம் எனப் பலவகையாகப் போராட்டம் நடத்துதல் அயலக அடிமை அரசியலர்க்கு வன்முறையாகத் தோன்றி அலைக் கழித்தல் கண்கூடு. பேரூர்வலம், முழக்கம் ஆயவற்றை அவண் கால்வைத்த போதே அறிய முடிந்தது.
- அயன் மதத்தார், அயன் மாநிலத்தார், அயனாட்டார் வடகிழக்கு மாநிலத்தின் பழங்குடியர் வாழிடம், செய் தொழில், நிலப்பறி என்பவை மிகலால் போலிமையற்ற மக்கள் இயக்கமாக நடைபெறல் கருதத் தக்கது.
- மலை வளாகத்தில் மண் தெரியாவாறு உச்சிவரை அடுக்குமாடி ஆய்விட்டால் மண்ணின் மைந்தர் வாழ்வு என்னாம் என்னும் வினாவுக்கு விடை காணாமல் விடிவு ஏற்படாது.
- சிவப்பேறா வாயரை, மென்று குதப்பா வாயரை, எங்கும் உமிழா வாயரைக் கண்டு தேடிப்பிடிக்கத்தான் வேண்டும்! உமிழ்நீராம் ஊட்டநீர் இப்படி நச்சுநீராய் உமிழப் படுவதைக் குடிக்கேடு ஒப்பக் கருதித் தடுத்தல் கட்டாயம் வேண்டும்! பள்ளிச் சிறுவர் சிறுமியரும் மூத்து முதிர்ந்தவரும் விலக்கில்லாமல் கொண்டிருப்பது இத்தீய வழக்கம்!

❖❖❖

பாட்னா - குறிப்பு:

பழமையான பாடலிபுத்திரம் இந்நாளில் பாட்னா என்னும் பெயருடன் விளங்குகின்றது. அதன் இருபாலும் சோணையாறும் கங்கையாறும் ஓடுகின்றன. பீகார் மாநிலத் தலைநகர் அது.

அசாத சத்துரு என்பான் கி.மு. 487இல் சோணையாற்றுக் கரையில் கட்டிய கோட்டையின் பெயர் பாடலி என்பது. அப்பெயரே ஊர்ப் பெயராய் விரிவு பெற்றது.

சந்திர குப்தரும் சாணக்கியரும் இருந்து ஆட்சிபுரிந்ததும் (கி.மு. 323) மெகசு தனீசு என்னும் கிரேக்கத் தூதர் வந்ததும் (கி.மு. 320) அசோகர் ஆட்சி புரிந்ததும் (கி.மு.269) ஆரியப் பட்டியம் என்னும் கணித நூலை இயற்றிய ஆரியப்பட்டர் இருந்ததும், சீன யாத்திரையன் பாகியான் வந்ததும் ஆகிய பெருமைகளையுடைய நகர் பாட்னா.

பாட்னா பெரிய வணிக மையமானது. அதனால் போர்ச்சுக்கீசியர், ஆங்கிலேயர், தச்சுக்காரர், தேனிசியர், பிரான்சுக்காரர் எனப் பன்னாட்டவர் வணிகக் கிடங்குகளை நிறுவினர். செறிவும் போக்குவரத்து நெருக்கடியும் மக்கள் பெருக்கமும் மிக்க ஊர். கோடையிலோ வெப்பம் எல்லை கடந்தது. குளிரிலோ நடுக்கும் குளிருடையது.

குரு கோவிந்த சிங்கு பிறந்த இடம் பாட்னா! இசுலாமியச் செல்வாக்கு மிக்கதும் அது.

11.04.2013

இன்று காலை கயையில் இருந்து பாடலிபுரம் எனப்பட்ட பாட்னா சென்று, ஆங்கிருந்து சென்னை - மையநிலையம் செல்லும் தொடரிவழியே செலவு மேற்கொள்ளும் நாள். ஏறத்தாழச் சுற்றுலா நிறைவு பெற்றுத் திரும்பு நிலை.

கயையில் இருந்து பாட்னா 100 அயிரம்! நாலந்தாவில் இருந்து பாட்னா சென்றால் 60 அயிரம்! இரண்டு நாள் தங்கல் அறைப்பதிவும், மகிழ்வுந்துப் பதிவும் செய்யப்பட்டு விட்டமையால் முதல் நாள் தங்கிய கயை விடுதிக்கே வரவேண்டிய தாயிற்று. ஆகையால் ஆங்கிருந்து காலையில் புறப்பட்டு இடைவழியில் சிற்றுண்டியை முடித்து நண்பகல் உணவுக்குப் பாட்னா சென்றோம். செல்லும் வழியில் மக்கள் நெருக்கம் ஊர்தி நெருக்கம் அடியடியாக நகரும் நிலை, நகரில் விழா ஒன்று நிகழ்வால்

தொடரிப் பகுதியோ நெருக்கத்திலும் நெருக்கம்! இந்நிலையில் வழியில் கண்டவை அன்றி வேறுபகுதிகளுக்குச் செல்லப் பொழுதும் இல்லை! வெயிலோ அனலைக் கக்கிய நிலை! ஆயினும் வண்டி பாட்னாவில் இருந்து புறப்பட்டுச் சேரலம் செல்வதாகலின் உரிய பொழுதில் ஏற வாய்த்தது. உரிய பொழுதில் சரியாகச் சென்னை நடுவண் நிலையம் எய்தவும் வாய்த்தது. 13.04.2013 விடியல் 4.15.

இனிய அன்பர் கலைச் செல்வனார் நிலையம் எய்தினார். அங்கிருந்து வேலா, முத்து இணையர்களைக் கோயம்பேட்டுப் பேருந்து நிலையத்திற்கு ஏற்ற வகையில் வழியனுப்பி விட்டு யானிருந்த நடுவண் நிலையம் எய்தினார். அன்று மாலை 3.45 மணி வையை விரைவானில் யான் திருச்சிராப்பள்ளிக்கு எழுமூரிலிருந்து புறப்பட வேண்டும்.

அன்று மாலை 6 மணி அளவில், அன்புத் தோன்றல் கவனகச் செல்வர் **கலை. செழியனார்** அமெரிக்கா செல்லும் நாள். அமெரிக்கப் பல்கலை மாணவர்களுக்கு ஒரு திங்கள் ஆங்கில வழியிலும், தமிழ்ச் செல்வங்களுக்கு ஒரு திங்கள் தமிழ் வழியிலும் கவனகப் பயிற்சி தருதற்காகச் செல்லும் அரிய தமிழினப் பேற்று நாள்! ஆதலால் அவரில்லம் சென்று அளவளாவி ஆங்கேயே தங்கி, கலைச் செல்வனார் தம்மோடு எழுமூர் வந்து வண்டியேறித் திருச்சிராப்பள்ளித் தவச்சாலையை 10.30 மணி அளவில் அடைந்தேன்!

மீளவும் சென்ற செலவை எண்ணிப் பார்க்கிறேன். சுற்றுச் செலவின் பயன்பாட்டை உணர்கிறேன். அழைத்த தோன்றலையும் உடன் வந்த என்மக்கள் நால்வரை அனைய மக்கள் நால்வர் செய்த உதவிகளையும் ஆர்ந்தமைந்து எண்ணுகிறேன்! வாழ்வாங்கு வாழ்தல் பேற்றில் திளைக்கிறேன்!

"உவப்பத் தலைக்கூடல், உள்ளப் பிரிதல்"

என்பதன் பொருளாக அமைந்து நிற்கிறேன்!

"எத்தனைகோடி இன்பம்" எனப்புறப்படு முன்னரே நூற்பெயர் சூட்டி முகவுரை எழுதியது அகவுரையாக அமைந்தமையில் தோய்ந்து மகிழ்கிறேன்.

வாழிய நலனே! வாழிய நிலனே!

❖❖❖

இந்நூல் வெளியீட்டுப் புரவலர்

தென்னிலை இராம. கோவிந்தனார் - கோ. பேபி

வேர்ப்பாலம்

சிரபுஞ்சி

ஆலின் அறுபதடி வேர்ப்பாலம்

மூவடுக்கு வட்டப் பாறை

The Printing House, Try-23.Ph : 2420121
tphtrichy@gmail.com